விலை ரூபா 25.00


ராசா தன்னிச்சையாகவே முடிவெடுப்பு



பக்கம் 08

ஆள் கடத்தல்களைத் தடுக்க முப்படையும் களத்தில்



பக்கம் 17

செங்கல்பட்டு முகாம் முற்றுகை



பக்கம் 19

கண்ணைப் பதம் பார்த்தது பெய்ல்ஸ்



பக்கம் 23



www.onlineuthayan.com

★

# உதயன்

பக்கங்கள் : 28

சுடர் 27
கதிர் 229

வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 28 வியாழக்கிழமை (12/07/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


### மாத இறுதியில் 9 போராளிகள் விடுதலையாவர்

யாழ்ப்பாணம், ஜூலை 12

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் 9 பேர் இந்த மாத இறுதியில் விடுவிக்கப்படவுள்ளதாக புனர் வாழ்வு 04↘

## வடக்கில் 5 பேருக்கு ஒரு படைச் சிப்பாய்

**இந்தியச் சஞ்சிகையின் ஆய்வில் தகவல்**

புதுடில்லி,ஜூலை 12

இலங்கையின் வடக்கில், 5 பொதுமக்களுக்கு ஒரு இராணுவச் சிப்பாய் என்ற அடிப்படையில் அங்கு படையினர் குவிக்கப்பட்டுள்ளதாக இந்திய சஞ்சிகை ஒன்று மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

வட மாகாணத்துக்குப் பயணம் மேற்கொண்ட 'எக்கனோமிக் அன்ட் பொலிட்டிக்கல் வீக்லி' என்ற வார இதழின் செய்தியாளர் ஒருவரே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். 04↘

## காணிகளை கையகப்படுத்தி புதிய வீதி; விமானப் படையினருக்கு எதிராக ரிட் மனு

**மேன்முறையீட்டு நீதிமன்றில் தம்பலகாமம் விவசாயிகள் தாக்கல்**

கொழும்பு, ஜூலை 12

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேசத்தில் தமிழ் பேசும் விவசாயிகளுக்குச் சொந்தமான வயற் காணிகளை தம் இஷ்ரப்படி கையகப்படுத்தி, அவற்றின் ஊடாகப் புதிய வீதி ஒன்றை அமைக்கும் விமானப் படைத் தரப்பின் முயற்சிக்கு எதிராக கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

அந்த ரிட் மனுவை நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றம் அதனை விசாரணைக்கு ஏற்றுக் கொண்டுள்ளதுடன் எதிர் மனுதாரர்களுக்கு அழைப்பாணை அனுப்பவும் உத்தரவிட்டது.

நீதியரசர் எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா, திபாலி விஜேசுந்தர ஆகியோரைக் கொண்ட ஆயமே இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

கிண்ணியாவைச் சேர்ந்த ஏ.எம்.ஏ.பரீட், தம்பலகாமத்தைச் சேர்ந்தவர்களான சீனித்தம்பி சத்தியநாதன், சின்னராசா தெய்வநாயகி, குருகுலசூரியபாலசிங் 04↘

### போர் வெற்றி அனுபவம் பகிரும் மாநாடு ஓகஸ்டில்

கொழும்பு,ஜூலை 12

இலங்கையின் போர் வெற்றி அனுபவத்தைச் சர்வதேச நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளும் 'இராணுவக் கருத்தரங்கு 2012', எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளது. 'நீடித்த அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை நோக்கி' என்னும் தொனிப்பொருளில் இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்வதற்காக 63 நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றில் பெரும்பாலான நாடுகள் தங்களது பங்குபற்றலை உறுதி செய்துள்ளன என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்தார்.

எதிர்வரும் மாதம் 8ஆம் திகதி கொழும்பு கலதாரி ஹோட்டலில் 04↘

# நிமலரூபன் கொலை விடயத்தில் அரசு ஐ.நாவிடம் தப்பமுடியாது



## சிக்கலில் மாட்டிவிட்டது மஹிந்த அரசு என்கிறார் கூட்டமைப்பின் தலைவர்

திருமலை, ஜூலை 12

ஐ.நா மனித உரிமைகள் சபையின் மீளாய்வுக் கூட்டம் ஒன்று எதிர்வரும் நவம்பரில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் வவுனியா தமிழ்க் கைதி நிமலரூபனின் கொலை குறித்து அரசு பொறுப்பான பதிலை வழங்க வேண்டிய நிலை ஏற்படும். இதிலிருந்து அரசு ஒருபோதும் தப்ப முடியாது. அந்த அளவுக்கு சிக்கலில் மாட்டியிருக்கிறது மஹிந்த அரசு.

—இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

திருகோணமலைசாந்திபுரம் கிராமத்தில் நேற்று நண்பகல் நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பான கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே 04↘

## இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்ததை ஏற்க முடியாது

**'இந்து'விடம் அடித்துக் கூறினார் ஜனாதிபதி**



கொழும்பு, ஜூலை 12

"2009ஆம் ஆண்டு ஐ.நாவிடம் வழங்கிய வாக்குறுதிகளை கொழும்பு நிறைவேற்றத் தவறிவிட்டது எனக்கூறி ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்ததை ஏற்றுக்கொள்ள முடியாது."

- இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இந்தியாவிலிருந்து வெளியாகும் ஆங்கில நாளிதழான 'இந்து'வுக்கு அலரிமாளிகையில் வைத்து வழங்கிய செவ்வியிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அத்துடன், ஜனாதிபதி மஹிந்த 04↘

### விமலுக்கு எதிராக தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜூலை 12

அமைச்சர் விமல் வீரவன்ஸ தனது சொந்தப் பாவனைக்காக 35க்கும் மேற்பட்ட வாகனங்களை வைத்திருப்பதாகவும் போலியான பதவிகளை வழங்கித் தனது கையாள்களைக் கூட்டுத்தாபனத்தில் நிரப்புவதாகவும் குற்றம் சுமத்தி, அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் முன்னால் அரச ஆதரவு தொழிற்சங்கங் 04↘

## கிழக்கில் அரசுடன் இணையாது வேறுவழி பற்றிச் சிந்தியுங்கள்

**மு.காவுக்கு முஸ்லிம் தலைவர்கள் ஆலோசனை**

மட்டக்களப்பு, ஜூலை 12

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணைந்து போட்டியிடுவதற்கு முஸ்லிம் தலைவர்களும், கல்விமான்களும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தலில் அரசுடன் இணைந்து போட்டியிடும் எண்ணத்தை 04↘

## முறிகண்டியிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் மீண்டும் சொந்த இடத்துக்கு

**இன்று மீளக்குடியமர்வு என அறிவிப்பு**

கிளிநொச்சி, ஜூலை 12

முறிகண்டியில் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத 33 குடும்பங்களும் இன்று அவரவர் சொந்தக் காணிகளில் மீளக்குடியமர்த்தப்படவுள்ளதாக அந்தக் குடும்பங்களுக்கு உதவி அரச அதிபரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. 04↘

கிழக்கில் தனித்துக் களமிறங்குமா மு.கா.?

## வேட்புமனுப் பத்திரங்களை தனியே சென்று பெற்றதால் பெரும் பரபரப்பு

கொழும்பு, ஜூலை 12

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் மு.கா. அரசுடன் இணைந்தா அல்லது தனித்தா போட்டியிடும் என்ற சர்ச்சைக்கு மத்தியில் நேற்று அக்கட்சி, வேட்புமனு விண்ணப்பங்களுக்கான பத்திரங்களை தேர்தல்கள் செயலகத்தில் பெற்றுக்கொண்டுள்ளமை அரசியல் வட்டாரத்தில் பெரும் அதிர்வை ஏற்படுத்தியுள்ளது.

மு.காவின் செயலாளர் நாயகம் ஹசன் அலி நேற்று தேர்தல்கள் செயலகம் சென்று வேட்புமனுப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டார் என நம்பகரமாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, நேற்றைய தினம் ஐ.ம.சு.மு. செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவை 04↘

## கூட்டமைப்பு வேட்பாளர் தெரிவு; பங்காளிக் கட்சிகளிடையே பேச்சு

கொழும்பு, ஜூலை 12

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகள் இடையே பேச்சுக்கள் தொடர்ந்து இடம்பெற்றுவருவதாகக் கூட்டமைப்பு வட்டாரங்கள் 'உதயன்' இணையத்துக்குத் தெரிவித்தன. [illegible] முடிவு எட்டப்படவில்லை எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழரசுக் கட்சி, புளொட் ஆகிய கட்சிகளுக்கு இடையே வேட்பாளர் பகிர்ந்தளிப்பது தொடர்பில் பேச்சுக்கள் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வருவதாகக் கூறப்பட்டது.

கிழக்கு மாகாணத் தேர்தலில் தமிழ்த் 04↘

## சொகுசு வசதிகளுடன் யாழ். ரயில் நிலையம்

**நிர்மாணப் பணி விரைவில்**

கொழும்பு,ஜூலை 12

யாழ்.ரயில் நிலையத்தின் நிர்மாணப் பணிகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்த ரயில் நிலையம் அனைத்து வசதிகளையுமுடைய ரயில் நிலையமாக நவீன முறையில் நிர் 04↘

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிச் சந்தேக நபர்களின் வழக்குகளை துரிதப்படுத்த நால்வர் கொண்ட குழு

## சொலிசிற்றர் ஜெனரல் சுகத் கம்லத் தலைமையில்

கொழும்பு, ஜூலை 12

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள புலிகள் இயக்க சந்தேக நபர்கள் தொடர்பான வழக்குகளைத் துரிதப்படுத்தும் வகையில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுகத் கம்லத் தலைமையிலான நால்வர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பாரதூரமான குற்றச்செயல்களுடன் நேரடித் தொடர்புடையவர்களுக்கு எதிராக வழக்குகளை தாக்கல் செய்யவும், சிறுசிறு சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் அனைவரையும் புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என பதில் சட்டமா அதிபர் பாலித்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மூன்று மாதங்களுக்குள் இந்தப் பணி நிறைவடையும் வழக்குகளை வகைப்படுத்தி சிபார்சு செய்வதற்காகவே இந்த நால்வர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

இது இலகுவான செயல் அல்ல. பலர் குண்டுவைத்துப் பொதுமக்களைக் கொலை செய்தமை, பொருளாதார கேந்திர மையங்களைத் தகர்த்தமை போன்ற குற்றச்சாட்டுகளுடன் நேரடித் தொடர்புடையவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சிறையில் இருக்கும் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் அல்லது வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தி வருகின்றது. அதன் தலைவர் இரா.சம்பந்தன் பலமுறை அரசுடன் பேசிஉள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அரசு கரிசனையுடன் செயல்பட்டுவருகின்றது.

இந்த நால்வர் குழுவில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சுகத் கம்லத், சிரேஷ்ட அரச சட்டத்தரணி சகாவித்ர பெர்னாண்டோ, டிலான் ரட்ணாயக்க, சுதர்ஷன டி சில்வா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர் என்றார். (த-2)

# 'குளோபல் லைப் ஸ்ரைல் லங்கா' சட்டவிரோத திட்டத்தையே நடத்துகிறது

## மக்களை ஏமாற வேண்டாம் என்று எச்சரிக்கிறது மத்திய வங்கி

யாழ்ப்பாணம், ஜூலை 12

'குளோபல் லைப் ஸ்ரைல் லங்கா' என்ற நிறுவனம் இலங்கையில் தடை செய்யப்பட்ட திட்டத்தை இயக்கிக் கொண்டு இருக்கின்ற நிறுவனமாக இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையால் அறிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண கிளையின் சிரேஷ்ட முகாமையாளர் பா.சிவதீபன் தெரிவித்தார்.

இலங்கையில் தடைசெய்யப்பட்ட 'பிரமிட்' திட்டங்களை 'குளோபல் லைப் ஸ்ரைல் லங்கா' நிறுவனம், மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள தெல்லிப்பழைப் பிரதேசத்தில் முன்னெடுத்திருந்தது. இந்த மக்களுக்கான விழிப்புணர்வுச் செயற்பாட்டுக் கலந்துரையாடல் அண்மையில் அந்தப் பகுதியில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலிலேயே சிரேஷ்ட முகாமையாளர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தடை செய்யப்பட்ட திட்டம் என்பது அதில் பங்கு பற்றுநர்கள் பணத்தை அல்லது பணப் பெறுமதியைச் செலுத்துவதற்கு அல்லது பங்களிப்புச் செய்வதற்கு வேண்டிக் கொள்ளப்படுவதுடன் அதில் பெறப்படும் நன்மைகள், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 83 'சி'பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி திட்டத்தில் பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லுதல் அல்லது, பங்கு பற்றுநர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரித்துச் செல்லுதல் என்பவற்றில் பெருமளவில் தங்கியிருக்கும் ஓர் கட்டமைப்பாகும்.

இதனடிப்படையில் திட்டத்தில் பங்குபற்றுபவர்கள் இதில் இணைந்து கொள்வதற்கு முற்பணமாக ஒரு கட்டணத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றனர். மேலதிக பங்குபற்றுநர்களின் மூலமாகவும் அதே நேரம் தற்போதுள்ள பங்குபற்றுநர்களால் கொண்டு வரப்படும் புதிய பங்குபற்றுநர்கள் மூலமாகவும் தான் இலாபங்கள் கிடைக்கும் என்று பங்குபற்றுநர்களுக்குப் பின்னர் உறுதியளிக்கப்படுகின்றது. எனினும் இந்தத் திட்டங்கள் பெருமளவில் பொருள்கள் அல்லது சேவைகளைவிற்பனை செய்யும் திட்டங்களாகப் போலியான முறையில் காணப்படுகின்றன.

மேற்சொன்ன பண்புகளை ஒத்த 'பிரமிட்' கட்டமைப்புரீதியான தடைசெய்யப்பட்ட திட்டங்களையே 'குளோபல் லைப் ஸ்ரைல் லங்கா' என்ற நிறுவனம் முன்னெடுப்பதாக இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை இனங்கண்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் திட்டங்களை முன்னெடுத்துச் செல்பவர்கள், அதன் பங்குபற்றுநர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இலங்கை சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

எனவே மேற்படி தடை செய்யப்பட்ட திட்டத்தை முன்னெடுக்கும் நிறுவனத்தில் பொதுமக்கள் இணையாது எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றார்.

இந்த விடயம் தொடர்பில் 'குளோபல் லைப் ஸ்ரைல் லங்கா' நிறுவனத்தின் செயற்பாட்டு முகாமையாளர் எஸ். சிவராஜாவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, தங்கள் நிறுவனத்தை மத்திய வங்கி தடை செய்தது தொடர்பில் எதுவித அறிவித்தலும் தமக்குக் கிடைக்கவில்லை - என்றார். (த-5)

## நல்லூரானைத் தரிசிக்க வருகிறார் பொன்சேகா

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா யாழ்ப்பாணம் உட்பட வடக்கின் பல பிரதேசங்களுக்கும் அடுத்த வாரமளவில் பயணம் செய்யவுள்ளார். இந்தப் பயணத்தின் போது நல்லூர்க் கந்தனைத் தரிசிப்பதுடன் மக்கள் சந்திப்புகளிலும் அவர் பங்கேற்வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் இறுதி யுத்தம் நடைபெற்ற பிரதேசங்களுக்கும் அவர் செல்லவுள்ளார்.

இது குறித்து அவரது பாரியார் அனோமா பொன்சேகா கூறுகையில், வடக்கு மக்களை முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மறக்கவில்லை. ஏனெனில் வடக்கு மக்கள் கூடுதலானோர் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது சரத் பொன்சேகாவை ஆதரித்தனர். அது மட்டுமன்றி அந்த மக்களுக்குச் சமாதானம் கிடைக்க வேண்டும் என்பதற்காகக் கடுமையாக அவர் பாடுபட்டார்.

அதே நோக்கத்துடனேயே தற்போதும் சரத் பொன்சேகா செயற்படுகின்றார். யாழ்ப்பாணத்திலிருந்து பல அழைப்புக்களும் வந்துள்ளன. எனவே சரத் பொன்சேகா மிக விரைவில் வடக்குக்குச் செல்வார். நல்லூர் உட்பட பல மத வழிபாட்டுத் தலங்களுக்கு அவர் செல்வார். அதேபோன்று பல்வேறு பகுதிகளிலும் வாழும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்து பேச உள்ளார்-என்றார். (த)

## சிவப்புப்பாலம் ஆற்றில் மூழ்கி கோப்பாய்ச் சிறுவன் இறப்பு

திருகோணமலை, ஜூலை12

தம்பலகாமம், சிவப்புப்பாலம் ஆற்றில் நீராடிய 16 வயது சிறுவன் நீரில் மூழ்கி மரணமாகியுள்ளார். யாழ்ப்பாணம், கோப்பாயைச் சேர்ந்த குறித்த சிறுவன் தம்பலகாமம், பொற்கேணி என்னும் இடத்தில் உறவினர் வீட்டுக்கு வந்திருந்த நிலையில் மரணமாகி உள்ளார்.

உறவினர்கள் சகிதம் இந்தப் பாலத்தின் அருகில் நீராடிய நிலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை 2 மணிக்கு இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றதாகப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கந்தளாய் தள வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

தம்பலகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## பொறுப்பேற்காத பட்டதாரிப் பயிலுநரின் நியமனக்கடிதத்தைக் கேட்கும் ஆளுநர்

யாழ்ப்பாணம், ஜூலை 12

பட்டதாரி பயிலுநர் நியமனம் பெற்ற வடமாகாண சபைகளின் கீழ் பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்கள், பட்டதாரிப் பயிலுநர் நியமனத்தைப் பொறுப்பேற்காவிடின் அவர்கள் தமது நியமனக்கடிதங்களை தன்னிடம் ஒப்படைக்குமாறு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ.சந்திரசிறி கோரியுள்ளார்.

யாழ்.பொது நூலகத்தில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் பட்டதாரிகளுக்குப் பட்டதாரிப் பயிலுநர் நியமனம் இந்த மாதம் 2 ஆம் திகதி வழங்கப்பட்டது.இந்த நியமனத்தின் போது ஏற்கனவே அரச திணைக்களங்களில் பணியாற்றிக்கொண்டிருந்தவர்களுக்கும் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. அதில் வடமாகாண சபையின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கிற திணைக்களத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பட்டதாரிப் பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாகாண சபையின் கீழ் உள்ளடங்குகின்ற சகல திணைக்களங்களுக்கும் வடமாகாண பொது நிர்வாகத் திணைக்களத்தினால் மின்னஞ்சல் அனுப்பப்பட்டிருந்தது.

அதன் பிரகாரமே நேற்று முன்தினம் மாலை வடமாகாண ஆளுநர், வடமாகாண பிரதம செயலாளர்,வடமாகாண பொது நிர்வாகத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்துரையாடல் நடத்தினர்.

இதன்போது பட்டதாரிப் பயிலுநர் நியமனத்தைப் பொறுப்பேற்க விரும்பும் அரச ஊழியர்கள் அதனை உடன் பொறுப்பேற்குமாறு, பெறுப்பேற்க விருப்பம் இல்லாமல் தற்போது உள்ள அரச வேலையைத் தொடர விரும்புபவர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டதாரிப் பயிலுநர் நியமனக் கடிதத்தை தன்னிடம் ஒப்படைக்குமாறும் ஆளுநர் கோரியுள்ளார்.

மத்திய அரசினால் அரச அதிபரின் ஒப்பந்தத்துடன் வழங்கப்பட்ட இந்த நியமனக் கடிதத்தை மாகாண சபை திரும்பப் பெறுவது தொடர்பில் குறித்த ஊழியர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (த-5)

## தேர்தலில் ஊழலுக்கு இடமில்லையாம்

ஊழல் மோசடியில் ஈடுபட்ட எவருக்கும் எதிர்வரும் தேர்தலில் போட்டியிட அனுமதி வழங்கப்படாது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதியின் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செயற்குழுக் கூட்டத்தின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை புதிய வேட்பாளர்களின் பொலிஸ் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று செயற்குழுவால் கோரப்பட்டுள்ளது.

இதற்கிடையில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக நடவடிக்கைகளில் ஈடுபட்ட மக்கள் பிரதிநிதிகள் பதவிகளில் இருந்து நீக்கப்படவுள்ளனர். இதற்கான அதிகாரம் மாகாண முதலமைச்சர்களுக்கு வழங்கப்படுவதாகவும் செயற்குழு தீர்மானித்துள்ளது. (த)

## எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் நீதியாக நடக்குமா என்பது சந்தேகம்

### கரு ஜயசூரிய கூறுகிறார்

கொழும்பு,ஜூலை 12

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலைச் சுதந்திரமாகவும் நியாயமானதாகவும் நடத்தும் பொறுப்பை அரசு ஏற்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

ஆனால் அரசின் சில நடவடிக்கையால் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் நியாயமானதாக நடக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு, வட மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகள் கலைக்கப்பட்ட பின்னர் அரசு புதிய நியமனங்களை வழங்கி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில அரச அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கரு ஜயசூரிய குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான நடவடிக்கைகளை கட்டுப்படுத்த 17ஆவது திருத்தச் சட்டத்தில் ஏற்பாடுகள் காணப்பட்டதாகவும் ஆனால் 18ஆவது திருத்தத்தின் மூலம் தேர்தல்கள் ஆணையாளருக்கும் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கரு ஜயசூரிய கூறியுள்ளார். (த)

# ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தையும் மஹிந்தவிடம் அடகு வைக்கும் தரகர்கள்

## முஸ்லிம் தலைவர்களுக்கு சமீர் ஹாசிம் கண்டனம்

கொழும்பு, ஜூலை 12

இனவாத அரசுக்கு மூக்கு கொடுத்துக் கொண்டிருக்கும் முஸ்லிம் அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், அத்தாவுல்லா மற்றும் ரிஷாத் பதியுதீன் ஆகியோருடன் சில மதத் தலைவர்களும் இணைந்து ஒட்டு மொத்த முஸ்லிம்களையும் மஹிந்த ராஜபக்ஷவிடம் அடகுவைத்து விட்டனர். இவர்களைத் தரகர்கள் என்றே கூறவேண்டும்.

இரண்டு வாரங்களின் முன் ஜனாதிபதியைச் சந்தித்த இவர்கள் கிழக்கு மாகாணத்தில் அரசுடன் இணைந்து போட்டியிடுவதெனத் தீர்மானித்து விட்டனர். முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணைந்து ஒரே கூரையின் கீழ் போட்டியிடுவோம் எனக் கூறித்திரிகிறது வெறும் பம்மாத்து எனக் கூறினார். கேகாலை மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் சமீர் ஹாசீம்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இதனை அம்பலப்படுத்தினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இந்த அமைச்சர்களிடமும், சில முஸ்லிம் மதத் தலைவர்களிடமும், மக்களைப் பற்றி கவலை இல்லை. தமது அமைச்சுப் பதவிகளையும் சுகபோக வாழ்க்கையையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பது தான் இவர்களின் ஒரே நோக்கம்.

முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணைந்து போட்டியிடுவோம். முஸ்லிம் மக்களைப் பாதுகாப்போம். என்று வெளியில் கூறிக்கொள்ளும் இவர்கள் ஏற்கனவே அரசுடன் இணைந்து போட்டியிடுவோம் என ஜனாதிபதியிடம் வாக்குறுதி அளித்துவிட்டனர். இது முஸ்லிம் மக்களுக்குச் செய்யும் ஒரு மாபெரும் துரோகமாகும். இவர்களின் பசப்பு வார்த்தைகளை முஸ்லிம் மக்கள் நம்பி ஏமாறக்கூடாது.

மஹிந்த அரசு தமிழ், முஸ்லிம் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிராகவே செயல்படுகின்றது முஸ்லிம் பள்ளிவாசல்களை இடிக்கின்றது. தம்புள்ள பள்ளிவாசல் உடைக்கப்பட்டபோது இந்த அமைச்சர்கள் என்ன செய்தனர். மாறாக முஸ்லிம் பள்ளிவாசல்களைப் பதிவு செய்ய வழி சமைத்தனர்.

இந்த அமைச்சர்கள் இனவாத அரசிடம் முஸ்லிம் மக்களை அடைவு வைக்க நாம் இடம் கொடுக்கமாட்டோம் - என்றார். (த-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைகலப்புக்கு கொண்டு சென்ற வாக்குவாதம்

## கரவெட்டிப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் குழப்ப நிலைமை

*வடமராட்சி, ஜூலை 12*
*கரவெட்டிப் பிரதேச சபையில் நேற்று இடம்பெற்ற மாதாந்தக் கூட்டத்தில் உறுப்பினர்களிடையே இடம்பெற்ற வாக்குவாதம் கைகலப்பு ஏற்படும் நிலைக்குக் கொண்டுசென்றது. ஏனைய உறுப்பினர்கள் தடுத்தமையால் குறித்த இரு உறுப்பினர்களிடையே நடக்க இருந்த கைகலப்பு நிறுத்தப்பட்டது.*



ஆளும்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே அடிக்கடி இடம்பெறும் வாக்குவாதமே இந்த நிலைக்குக் கொண்டுசென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

சபையின் தலைவர் பொ.வியாகேசு தலைமையில் நேற்றுக் காலை 10.30 மணிக்கு சபை மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ஆளும் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களில் ஒருவர் தவிர ஏனைய 14 உறுப்பினர்களும் எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்களுமாக 17 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் துன்னாலை மயானத்தில் கொல்களம் அமைக்கப்பட்டது, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அடையாள அட்டை வழங்கியது போன்ற விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

எதிர்க்கட்சி உறுப்பினரான அ.சந்திரசேகரம் உரையாற்றியபோது ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்த வாக்குவாதங்களின்போது ஒருவரை ஒருவர் பேசவிடாது உறுப்பினர்கள் பலரும் ஒரே சமயத்தில் எழுந்து நின்று வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். மேசையில் தட்டியும் கைதட்டியும் ஆரவாரமும் செய்தனர். வாக்குவாதமும் அமளிதுமளியும் ஏற்பட்ட வேளைகளில் எல்லாம் சபைத் தலைவர் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பெரிதும் சிரமப்பட்டார்.

கூட்டத்தின் இறுதியில் எதிர்க்கட்சி உறுப்பினரான அ.சந்திரசேகரம் தமது கட்சி உறுப்பினர்கள் புறக்கணிக்கப்படுவதாகக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி உரையாற்றிக் கொண்டிருந்தார்.

அந்த வேளை ஆளும் கட்சி உறுப்பினர்களும் தலைவரும் அவரது உரைக்கு இடையிடையே மறுப்புத் தெரிவித்து விளக்கினார்கள்.

இந்த நேரத்தில் மற்றொரு எதிர்க்கட்சி உறுப்பினர் ''நாங்கள் உங்கள் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றாமல் முட்டுக்கட்டை போடுவோம்'' எனத் தெரிவித்தார்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் கிளர்ந்தெழுந்து நாங்கள் 15 பேரும் எடுக்கும் தீர்மானமே இங்கு நடைமுறைப்படுத்தப்படும். இரண்டு கட்சிகள் இங்கு சரிவராது. நாம் அனைவரும் மக்கள் பிரதிநிதிகள். நீங்கள் சொல்வதை நாங்கள் செய்யமுடியாது. இணைந்தே செய்ய வேண்டும். நாங்கள் ஒரேகட்சி, எங்கள் சபைத் தலைவர் தலைமையிலேயே செயற்படுவோம் எனப் பல்வேறு கருத்துக்களைக் கூறினர்.

இதன்போதே கைகலப்பு ஏற்படும் நிலைமை வந்தது.

கருத்துக்களால் முறியடிக்க வேண்டுமே தவிர கைகலப்பு இருக்கக் கூடாது. எம்மைப் போல் ஏனைய சபை உறுப்பினர்களையும் மதிக்க வேண்டும். வன்முறைகள் பிரயோகிக்கக் கூடாது என ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் கூறினார்.

இந்த நிலையில் சபைத் தலைவர் எழுந்து நின்று சபையை அமைதி நிலைக்குக் கொண்டுவர படாதபாடுபட்டு அமைதியை ஏற்படுத்தினார். அபிவிருத்திகளுக்குத் தடை விதிக்காதீர்கள். நாங்கள் அமைச்சரைச் சந்தித்து கலந்துபேசி இந்தத் திட்டங்களைக் கொண்டு வந்துள்ளோம். நீங்களும் எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதனை விடுத்து புது வியூகம் அமைத்து சபையைக் குழப்பாதீர்கள் என விநயமாக வேண்டிக் கொண்டார். அத்துடன் சபை அமைதியாகி உப தலைவர் இ.சாந்தசொரூபனின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவுற்றது.

(ம-8)

---

# குமுதினி மீண்டும் பழுது

யாழ்ப்பாணம்,ஜூலை 12

நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டு வந்த குமுதினி படகு மீண்டும் பழுடைந்துள்ளது.

இந்தப் படகில் கடல் நீர் உட்புகுவதை அடுத்து படகு திருத்தப் பணிக்காகக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்தப் படகின் சேவை நிறுத்தப்பட்டதால் நெடுந்தீவுக்கு பயணம் மேற்கொள்ளும் மக்கள் சிரமப்பட்டு வருகின்றனர். தனியார் படகுகளில் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு மத்தியில் பயணித்து வருகின்றனர். (ம-17)

---

# வெங்காயச் செய்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 12

யாழ். மாவட்டத்தில் கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து இன்று வரைக்குமான மூன்று மாதகாலப் பகுதியில் ஆயிரத்து இருநூற்று முப்பத்தியொரு ஹெக்டேயர் நிலப்பரப்பில் வெங்காய செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று விவசாய திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

அதனை விட இந்த மாதத்திலும் 800 வரையிலான ஹெக்டேயர் நிலப்பரப்பில் இந்த வெங்காய செய்கையில் விவசாயிகள் ஈடுபடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது வெங்காயத்தின் விலை அதிகரிப்பை அடுத்தே விவசாயிகள் வெங்காய செய்கையில் அதிக ஆர்வம் காட்டியுள்ளனர்.

அனேகமான விவசாய நிலங்கள் சீர் செய்யப்பட்டு வெங்காய நடுகைக்கான ஏற்பாடுகளும் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

புத்தூர், உரும்பிராய், குப்பிளான், ஏழாலை, ஊரெழு, மாதகல், சுழிபுரம், விளான் போன்ற இடங்களில் வெங்காயசெய்கை மும்முரமாக இடம்பெற்று வருகின்றது. (ம-17)

---

## நிகழ்வுகள் இன்று

### பரிசளிப்பு விழா

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு கல்லூரி முதல்வர் நோயல் ஏ.விமலேந்திரன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினர்களாக மருத்துவர் குருசாமி சுஜாகரனும் அவரது பாரியார் திருமதி நிதர்சினி சுஜாகரனும் கலந்து கொள்வர். மூன்று நிலைகளில் பரிசளிப்பு இடம்பெறும். கடந்த வருடம் கல்வி, விளையாட்டு, கலைகளில் சிறப்பெய்தியவர்களுக்கு பொன், வெள்ளி, வெண்கல பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

(ம-50)

---



*யாழ்.பழைய பூங்கா வளாகத்தில் உள்ள பழைமை வாய்ந்த கேணியை புனரமைப்புச் செய்யும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இந்தக் கேணி புனரமைக்கப்படுவதோடு கேணியை அண்டிய பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்காகப் பூங்கா ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றது. (ம-17)*

---

# போக்குவரத்துக் குறியீட்டு கம்பங்கள் வந்து சேர்ந்தன

யாழ். குடாநாட்டு வீதிகளுக்கான போக்குவரத்து குறியீட்டு கம்பங்களில் ஒரு தொகுதி அண்மையில் வவுனியாவில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்தி அதிகார சபையால் எடுத்துவரப்பட்ட இந்த வீதிக் குறியீட்டுக் கம்பங்கள் விரைவில் சகல வீதிகளுக்கும் நடப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டள்ளது.

தற்போது குடாநாட்டில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வரும் சகல வீதிகளுக்கும் இந்த வீதிக் குறியீட்டுக் கம்பங்கள் நடப்படவுள்ளன.

இந்த வீதிக் குறியீடுகள் வீதிகளில் அமைக்கப்படாத நிலையில் அண்மைக் காலமாக விபத்துச் சம்பவங்களும் அதிகரித்து காணப்படுகின்றன. (ம-17)

---

# காரைநகரில் சிறுமி மீதான துஷ்பிரயோகம் இரண்டாவது சந்தேக நபருக்குப் பிணை

யாழ்ப்பாணம்,ஜூலை 12

காரைநகரில் சில மாதங்களுக்கு முன்னர் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டவர்களைப் பிணையில் விடுவிப்பது தொடர்பான விசாரணை நேற்று இடம்பெற்றபோது இரண்டாவது சந்தேகநபர் 30 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 50 ஆயிரம் ரூபா ஆள் பிணையிலும் விடுதலை செய்யப்பட்டார்.

முதலாவது சந்தேகநபரைத் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர். எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ஜோய் மகிழ் மகாதேவா சந்தேகநபர்களைப் பிணையில் விடுவிக்கும்படி கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

---

# பண்ணையில் பூங்கா அமைக்கத் தீர்மானம்

யாழ்.பண்ணை சுற்று வட்டத்தை அண்டிய கரையோர பகுதியில் சுற்றுலா பயணிகளின் வசதி கருதி பூங்கா ஒன்று அமைக்கப்படவுள்ளது.

தீவுப் பகுதிக்கு சென்றுவரும் சுற்றுலாப் பயணிகள் இந்தப் பூங்காவில் பொழுதை போக்கி செல்ல வசதியாக இந்தப் பூங்கா நவீன முறையில் அமைக்கப்படவுள்ளது.

பண்ணை சுற்று வட்டாரத்துக்கு எதிரில் கடற்கரையோரமாக அமைக்கப்பட இருக்கும் இந்தப் பூங்காவுக்கான ஆரம்பகட்ட பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பிரதேச சுற்றாடல் துப்பரவு செய்யப்பட்டு தரைக்கு புற்கள் நடப்பட்டு வருகின்றன. அதனை விட இந்தச் சுற்றாடலின் வீதி ஓரங்களில் பயன்தரும் மரங்களும் நடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)


---

# பயன்பாடு அற்ற நிலையில் செம்மணி மாந்தை உப்பளம்

செம்மணியில் உள்ள மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் தற்போது எந்த வித செயற்பாடும் அற்ற நிலையில் முடங்கிக் காணப்படுகின்றது.

இந்தப் பகுதியில் உப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த நிறுவனம் இந்த ஆண்டில் எந்தவித உற்பத்தியும் இன்றி பாதிக்கப்பட்டுள்ளது.

உற்பத்திக்கு என அமைக்கப்பட்ட உப்பளங்களுக்கு இந்த முறை கடல் நீர் சேமிப்புக்கு அனுமதி வழங்கப்படவில்லை. இதன் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



இதன் காரணத்தால் வருடா வருடம் பெரும் உற்பத்தியை ஏற்படுத்திக் கொடுக்கும் இந்த உப்பளம் செயலிழந்தும் காணப்படுகின்றது.

ஏற்கனவே இந்த நிறுவனத்தில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் எழுபது மெற்றிக்தொன் உப்பு மன்னார் நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இந்த உப்பு அங்கு இரசாயன பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு பின்னர் அயடின் கலந்த பின்னர் பொதியாக்கப்பட்டு சந்தைப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாத இறுதியில்...

01 மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் சிரேஷ்ர உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இறுதிப்போரில் சரணடைந்த போராளிகள் வவுனியா, பொலநறுவை, சேணப்புர, கந்தகாடு மற்றும் வெலிகந்த ஆகிய புனர்வாழ்வு நிலையங்களில் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். இந்த மாத இறுதியில் 9 முன்னாள் போராளிகள் புனர்வாழ்வுப் பயிற்சிகளை முடித்துக் கொண்டு அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

தற்போது 648 முன்னாள் போராளிகளே புனர்வாழ்வு பெற்று வருகின்றனர் என்றார். (த-5)

## வேட்புமனுப்...

01 சந்தித்த மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம், அரசுடன் மு.கா. செய்துகொள்ள உத்தேசித்துள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரதியொன்றைக் கையளித்துள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கான பிரதியைப் பெற்றுக் கொண்ட அமைச்சர் சுசில் இது தொடர்பாகப் பரிசீலித்து உரிய பதில் வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலும் அரசின் பதில், வெள்ளிக்கிழமை மாலை நேரத்துக்கு முன்னர் வழங்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது என அரச உயர்மட்டப் பிரமுகர் ஒருவர் குறிப்பிட்டார்.

அரசின் குறித்த பதிலே நாளை இடம்பெறவுள்ள மு.காவின் அரசியல் உயர்பீடக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, மு.கா. தலைவரால் கையளிக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கான பிரதியை அரசு ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என நேற்று நள்ளிரவுவேளை அறியக் கிடைத்தது.

## போர் வெற்றி...

01 ஆரம்பமாகவுள்ள இந்தக் கருத்தரங்கு, தொடர்ந்து மூன்று தினங்களுக்கு நடைபெறவுள்ளது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தற்போது மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் இராணுவத் தளபதி குறிப்பிட்டார்.

போரின் பின்னர் வடக்கு,கிழக்கில் அரசுடன் இணைந்து படையினர் முன்னெடுக்கும் அபிவிருத்தி மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகள் தொடர்பில் சர்வதேசத்துக்குத் தெளிவுபடுத்தி இலங்கைக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டுக்களை இல்லாதொழித்தல் மற்றும் நாட்டின் வெளிப்படைத்தன்மையைச் சர்வதேசத்துக்கு விளக்குதல் போன்றனவும் இந்தக் கருத்தரங்கின் போது முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன்போது, அரச அமைச்சர்கள், முக்கியஸ்தர்கள், பாதுகாப்பு மற்றும் அரசின் உயரதிகாரிகள் உள்ளிட்ட சர்வதேச முக்கியஸ்தர்களும் விரிவுரைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி மேலும் கூறினார். (த)

## விமலுக்கு...

01 கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

கூட்டுத்தாபனத்தில் நிலவும் ஊழல்களுக்கு அமைச்சர் விமல் வீரவன்ஸ நேரடியாகப் பொறுப்பாவார் எனக் கூட்டுத் தொழிற்சங்கங்களின் ஏற்பாட்டாளரான துஷாரா குணரட்ன கூறினார்.

' கடந்த 3 வருடங்களாக எமக்கு எவ்வித சம்பள உயர்வும் வழங்கப்படவில்லை. நாம் எமது உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடுவோம்' எனவும் அவர் கூறினார். (த)

## சொகுசு வசதிகளுடன்...

01 மாணிக்கப்படவுள்ளதாகத் திணைக்களத்தின் திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க கூறியுள்ளார்.

வாகனத் தரிப்பிடம், பயணிகளுக்கான ஓய்வு அறைகள், வழிகாட்டல் கருமபீடங்கள், கழிவறை வசதிகள், வங்கிச் சேவை நிலையம், தபாலகம் மற்றும் வர்த்தக நிலையக் கட்டடத் தொகுதி என்பன யாழ். ரயில் நிலையத்தில் நிர்மாணிக்கப்படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

யாழ்.ரயில் நிலையத்தைச் சொகுசு வசதிகளையுடைய ரயில் நிலையமாக மாற்றுவதே ரயில்வே திணைக்களம் மற்றும் போக்குவரத்து அமைச்சு ஆகியவற்றின் நோக்கம் எனவும் விஜய சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

ரயில் நிலையத்தின் நிர்மாணப் பணிகளை விரைவில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கென குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.(த)

## கூட்டமைப்பு வேட்பாளர் தெரிவு...

01 தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து போட்டியிடுவதா? அல்லது தனித் துக் களமிறங்குவதா? என்பது தொடர்பில் முடிவுகள் எதுவும் எட்டப்படாத நிலையில் வேட்பாளர்கள் பகிர்ந்தளிப்புத் தொடர்பில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் பேசி வருகின்றன. எனினும் இது குறித்து இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை எனக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (த)

## கிழக்கில் அரசுடன்...

01 முஸ்லிம் காங்கிரஸ் முற்று முழுதாகக் கைவிட வேண்டும் எனவும், தேவை ஏற்படின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடுவது குறித்து அதன் தலைவர்களுடன் பேச்சு நடத்துமாறும் முஸ்லிம் மதத் தலைவர்களும், கல்விமான்களும் முஸ்லிம் காங்கிரஸின் தலைமைப் பீடத்திடம் வலியுறுத்தியிருப்பதாகத் தெரியவருகிறது.

கிழக்கு மாகாணத் தேர்தலில் அரசுடன் இணைந்து போட்டியிடுவதா? இல்லையா? என்பது குறித்து அத்ன் தலைமைப் பீடம் இதுவரை எந்தவித முடிவையும் மேற்கொள்ளவில்லை எனக் கூறப்படுகிறது. (த)

## நிமலரூபன் கொலை விடயத்தில்....

01 சம்பந்தன் இப்படித் தெரிவித்தார்.

சர்வதேச சமூகத்திடம் இருந்து இலங்கை அரசு எதிர்நோக்கும் கடும் அழுத்தம் மற்றும் தமிழ்க் கைதியின் கொலை தொடர்பாக அரசுக்கு ஏற்பட்டுள்ள இக்கட்டுநிலைமை குறித்து சம்பந்தன் தனது உரையில் விளக்கினார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிட்டதாவது:-

இனியும் சர்வதேச சமூகத்தை ஏமாற்ற முடியாது என்பது இலங்கை அரசுக்கு நன்றாகத் தெரியும். சர்வதேச சமூகத்திடமிருந்து தப்பித்துக் கொள்ள முடியாத நிலைக்குள் இலங்கை அரசு சிக்கியுள்ளது. இந்நிலையில்கிழக்குமாகாண சபைத்தேர்தலை முன்கூட்டியே நடத்தி, கிழக்கு மக்கள் தம்மோடு தான் இருக்கின்றார்கள் என்று காட்டி சர்வதேச சமூகத்தை ஏமாற்றலாம் என்றும் அதன் மூலம் சர்வதேச அழுத்தத்திலிருந்து விடுபடலாம் என்றும் மஹிந்த ராஜபக்ஷ அரசு நினைக்கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானம் மற்றும் ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை ஆகியன குறித்துக் கட்டாயமாக பதிலளிக்க வேண்டிய காலம் இலங்கை அரசுக்கு வந்து கொண்டிருக்கின்றது. அதிலிருந்து இலங்கை அரசு தப்பிக்க முடியாத நிலை ஏற்படும். சரியான நடவடிக்கைகளை அரசு எடுக்காவிடில் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்.

இந்தியாவின் பாதுகாப்பு செயலாளர் சிவ்சங்கர் மேனன் அண்மையில் கொழும்பு வந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் அவரின் இரண்டு சகோதரர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார். பாரதூரமான விளக்கம் ஒன்று அவர்களுக்கு மேனன் அளித்தார். தரப்பட்ட உறுதிமொழிகளை விரைவில் நிறைவேற்ற வேண்டும். இல்லாவிடில் எம்மீது குறை சொல்லாதீர்கள் என்ற கருத்துப்பட சிவ்சங்கர் மேனன் அவர்களிடம் தெரிவித்துள்ளார். அதன் பின்னர் என்னுடனும் உரையாடினார்.

இந்தியா அழுத்தம் கொடுக்கவில்லை என அரசு கூறிவருகின்ற போதிலும் ராஜதந்திர நகர்வுகளில் இடம் பெறும் எல்லாவற்றையும் வெளியே கசிய விட முடியாது-என்றார் அவர். (த)

## காணிகளை கையகப்படுத்திப் புதிய வீதி...

01 கம் திலகரட்ணம் ஆகிய நான்கு விவசாயிகளின் சார்பிலேயே மேற்படி ரிட் மனுக்களை சட்டத்தரணி மோகன் பாலேந்திரா தாக்கல் செய்திருந்தார்.

மேற்படி பகுதியில் அமைந்துள்ள விமானப் படையினரின் தளம் ஒன்றை கொழும்பு - திருகோணமலை பிராதன வீதியுடன் இணைக்கும் வகையில் இந்தப் புதிய வீதி அமைப்புப் பணி முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் இதற்காகப் பொதுமக்களின் பெருமளவு வயற்காணிகளை எந்தவித சட்டமுறைமைகளுமற்ற முறையில் கையகப்படுத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன எனவும் மனுதாரர்கள் தமது மனுவில் தெரிவித்துள்ளனர்.

வயல் உரிமையாளர்களுக்கு உரிய அறிவித்தல் எதுவும் தரப்படவில்லை. அவர்களின் கருத்துக்கள் செவிமடுக்கப்படவில்லை. காணி சுவீகரிப்புக்கான சட்ட நடவடிக்கைகளோ நஷ்ட ஈடு வழங்கல் ஏற்பாடுகளோ மேற்கொள்ளப்படவில்லை. மேலும் இவ்வாறு வயற்காணிகளுக்கு நடுவே மண் நிரப்பி வீதியை அமைத்தால் பெருமளவு வயற்காணிகள் வெள்ளம் தேங்கி அழியும் நிலை உருவாகும். சுற்றுச்சூழல் சட்டவிதிகளும் பின்பற்றப்படாமல் நடவடிக்கைகள் அதிகாரிகளினால் தம் இஷ்டப்படி முன்னெடுக்கப்படுகின்றன - என்றெல்லாம் விவசாயிகள் தமது மனுவில் தெரிவித்துள்ளனர்.

இந்த மனுவில் எதிர் மனுதாரர்களாக மேற்படி வீதி அமைப்புப் பணி முன்னெடுக்கப்படும் பிரதேசத்தின் கிராம சேவையாளர்கள், சூரன்கல் விமானப் படைமுகாமின் கட்டளை அதிகாரி, விமானப் படையின் தளபதி, மேற்படி வீதி அமைப்புப் பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனம், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கந்தளாய் பிரிவின் திட்டப் பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர், நகர அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய தரப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த மனு நேற்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது சட்டத்தரணிகள் பவானி பொன்சேகா, செல்வி ஜே. அருளானந்தம் ஆகியோரின் அனுசரணையுடன் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆஜராகி வாதிட்டார்.

இந்த வீதி அமைப்புப் பணிக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்பட வேண்டும் என்ற தேவை எழுவதாக மனுதாரர்கள் கருதினால் அதற்குரிய சமயத்தில் அதற்கான கோரிக்கையை முன்வைக்கலாம் என்ற பதிவோடு மனுவை எதிர்வரும் ஓகஸ்ட் 28 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்க நீதியரசர்கள் உத்தரவிட்டனர். அத் தினத்தில் நீதிமன்றில் பிரசன்னமாவதற்கு எதிர் மனுதாரர்களுக்கு நோட்டீஸ் அனுப்பவும் நீதியரசர்கள் பணிப்புரை விடுத்தனர். (த)

## முறிகண்டியிலிருந்து...

01 கடந்த மாதம் மீளக்குடியேற்றப்பட்டவுள்ளதாக அறிவிக்கப்பட்டு அழைத்து வரப்பட்ட இந்த மக்களுக்கு அவர்களது சொந்தக் காணிகளை வழங்காமல் வேறு பகுதியில் காணிகளை வழங்கி குடியேறுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதனை ஏற்க மறுத்த மக்கள் திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் தங்கித் தமது பகுதிகளை விடுவிக்குமாறு கோரிய வேளை பலவந்தமாக அங்கிருந்து வெளியேற்றப்பட்ட இந்த மக்கள் பஸ்களில் ஏற்றப்பட்டு, மனிக்பாம் முகாமில் மீண்டும் கொண்டு சென்று இறக்கிவிடப்பட்டனர். இதன் பின்னர் கடந்த திங்கட்கிழமை மனிக்பாம் முகாமுக்குச் சென்ற முறிகண்டி பிரதேச செயலர் ரி.திரேஸ்குமார் இன்று வியாழக்கிழமை நீங்கள் உங்களுடைய சொந்தக் காணிகளிலேயே குடியமர அனுமதிக்கப்படவுள்ளீர்கள் என அறிவித்துவிட்டுச் சென்றதாக அந்த மக்கள் தெரிவித்தனர்.

33 குடும்பங்கள் இன்று மீளக்குடியேற்றப்படவுள்ளதாகவும் இவர்களில் 8 குடும்பங்களின் காணிகள் பின்னரே விடுவிக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறியதாக மக்கள் மேலும் கூறினர். இந்த விடயம் தொடர்பில் முறிகண்டிப் பிரதேச செயலர் ரி.திரேஸ்குமாருடன் தொடர்புகொள்ள முயன்றபோதும் தொடர்பு கிடைக்கவில்லை. (த-16-6)

## வடக்கில் 5 பேருக்கு...

01 அவர் எழுதியுள்ள கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கைப் பாதுகாப்புச் செயலாளர், அரசு மற்றும் இராணுவ இணையத்தளங்களில் வெளியான செய்திகளை வைத்துப் பார்க்கும் போது, வடக்கில் குறைந்தது ஒரு லட்சத்து 80 ஆயிரம் படையினர் நிலை கொண்டுள்ளனர்.

விமானப்படையினர் மற்றும் கடற்படையினரை இந்த எண்ணிக்கையுடன் சேர்த்தால், சுமார் ஒரு லட்சத்து 98 ஆயிரம் படையினர் வடக்கில் நிலைக்கொண்டிருக்கலாம்.

இலங்கை அரசின் புள்ளிவிவரத் திணைக்களத்தின் தரவுகளின் அடிப்படையில், இலங்கை மொத்த நிலப்பரப்பில் 14 வீதமான வட மாகாணத்தில், 2011 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சனத் தொகை கணக்கெடுப்பின்படி, அந்த மாகாணத்தில் உள்ள மொத்த சனத்தொகை, 9 லட்சத்து 97 ஆயிரத்து 754 பேர் ஆகும்.

இதனடிப்படையில் பார்க்கும் போது, வடக்கில் உள்ள 5.04 வீத நபர்களுக்கு ஒரு இராணுவச் சிப்பாய் உள்ளார். ஆயிரம் மக்களுக்கு 198.4 வீதமான இராணுவத்தினர் உள்ளனர். 2007 ஆம் ஆண்டில் ஈராக்கில் கூட, ஆயிரம் பேருக்கு 20 இராணுவத்தினரே நிலை நிறுத்தப்பட்டிருந்ததாக அமெரிக்க இராணுவத்தின் புள்ளி விவரங்கள் தெரிவித்திருந்தன.

உலகில் பயங்கரமான மோதல்கள் நடைபெற்ற 41 சந்தர்ப்பங்களில், ஆயிரம் பொதுமக்களுக்கு 40 க்கும் 50 க்கும் இடைப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கையே தேவைப்பட்டதாகப் பாதுகாப்பு ஆய்வுகளுக்கான நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலையில் போர் முடிவடைந்து, 3 வருடங்கள் கழிந்துள்ள பின்னரும், இலங்கையில் வடக்கில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கையானது, உலக சனத் தொகையுடன் ஒப்பிடும் போது, அளவுக்கு அதிகமான இராணுவச் சிப்பாய்களில் வீதம் ஆகும்.உலகில் எந்த நாட்டிலும் இப்படி இராணுவத்தினர் நிலை நிறுத்தப்படவில்லை-என்றுள்ளது. (த)

## இலங்கைக்கு எதிராக இந்தியா....

01 ராஜபக்ஷ, தமது ''13ஆவது திருத்தச் சட்டத்துக்கு மேலதிகமாக'' என்ற வாக்குறுதிக்கு முதன்முறையாக விளக்கமளித்துள்ளார். 'மேலதிக' என்ற பதத்துக்கு 'செனட் சபை உருவாக்கம்' என்பதே பொருளாகும் என்றும் அவர் 'இந்து'வுக்கு அளித்துள்ள பேட்டியில் வியாக்கியானம் அளித்துள்ளார்.

''13ஆவது திருத்தச் சட்டத்துக்கு மேலதிகமாக'' என்றே நான் கூறியுள்ளேன். அண்மையில் என்னைச் சந்தித்த இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், 'மேலதிகமாக' என்ற பதம், செனட் சபை உருவாக்கத்தையா சுட்டிக்காட்டுகிறது என வினவினார். நானும் ஆம் என்றே பதிலிறுத்தேன்'' - என்றும் ஜனாதிபதி பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

செனட் சபை உருவாக்கம் மிக அவசியம். அதுபோல இனப் பிரச்சினைக்கு நாடாளுமன்றம் மூலம் தீர்வு காணப்பட வேண்டியதும் அதிமுக்கியமாகும். இத்தீர்வைப் பொறுத்தமட்டில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு முக்கியத்துவம் பெறுகிறது என்றும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

அவர் தம் பேட்டியில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

இப்போது முதல் இன்னும் ஓராண்டுக்குப் பின்னர், இலங்கையின் வட மாகாண சபைக்கான தேர்தல்கள் நடத்தப்படும். 2013ஆம் வருட செப்டெம்பரில் இத்தேர்தல்களை நடத்தவிருக்கிறோம்.

மறுவாழ்வளிப்பு, மீள் குடியேற்ற முன்னெடுப்புகள்நிறைவு செய்யப்படவேண்டும். சர்வதேச ஆதரவுடன் இம் முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை வெகு விரைவில் பூர்த்தியடைந்துவிடும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

13ஆவது திருத்தச் சட்ட மூலம் மிகவும் வரையறுக்கப்பட்ட முறையில் வடக்கைத் [illegible] யங்களுக்கும், அனைத்து மாகாணங்களுக்கும் பயன் ளிக்கிறது. இவ்வாறு மஹிந்த ராஜபக்ஷ தமது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். சகல மட்டங்களிலும் இடம்பெறும் இராணுவ பிரசன்னம் குறித்தும் கேட்கப்பட்டதற்கு அவர், ''தேவை ஏற்படும் பட்சத்தில் மாத்திரம் இராணுவப் பிரசன்னம் இடம்பெறவேண்டுமென நான் பணிப்புரை வழங்கியுள்ளேன்'' - எனக் குறிப்பிட்டுள்ளார்.

2009ஆம் ஆண்டு ஐ.நா. சபைக்குத் தான் அளித்த வாக்குறுதியை கொழும்பு நிறைவேற்றத் தவறிவிட்டது எனக் காரணம் கூறி, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக இந்தியா [illegible]மையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்க மறுத்துவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

யா/ நடேஸ்வராக் கல்லூரியின் அதிபர் பொ.அமிர்தலிங்கம்
அவர்களின் அன்புத் தாய்

## திருமதி பரமேஸ்வரி பொன்னம்பலம்

அவர்கள் இறைபதம் அடைந்ததை அறிந்து அதிர்ச்சியுற்றோம்.
அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

காங்கேசன்துறை.

அதிபர், ஆசிரியர்கள்
நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயம்.

# மரண அறிவித்தல்கள்



## தங்கமணி ஆறுமுகம்

சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கமணி ஆறுமுகம் நேற்று (11.07.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுவாமிநாதர் ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் ஜெயானி (கனடா), ரவீந்திரன் (விரிவுரையாளர் -யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியல் கல்லூரி, தலைவர்- வாழ்வகம்), பரமேஸ்வரன் (கலாசார உத்தியோகத்தர் ஆரையம்பதி, மட்டக்களப்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருச்செல்வம் (கனடா), மோகனவதனி (ஆசிரியர்- இராமநாதன் கல்லூரி), விநோதினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தர்சிகா, தர்சன், சாருஜன் (கனடா), கீர்த்தனா (ஹற்றன் நஷனல் வங்கி- திருநெல்வேலி), பிரவீனா(கொக்குவில் இந்துக்கல்லூரி 2013 உயிரியல் பிரிவு) கீர்த்திகன் (கொக்குவில் இந்துக்கல்லூரி O/L), நிவேதிகா (விவேகானந்தா மகளிர் வித்தியாலயம், கல்லடி மட்டக்களப்பு) நிவேதனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2012) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

59/6, சட்டநாதர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி (சி/1451) (15)

தகவல்:
ஆ.இரவீந்திரன்
(மகன்)

## செல்லத்துரை திருஞானசம்பந்தர்



கோண்டாவில் நெட்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை- திருஞானசம்பந்தன் நேற்று (11.07.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் நல்லம்மாவின் அன்புக் கணவரும் திவாகரன் (கொலண்ட்), அனுஷா, கிருஷா, சர்மிளா, நிருஷா, ஆகியோரின் அன்புத் தந்தையும் இரத்தினேஸ்வரி (லண்டன்), கமலாதேவி, திருநாவுக்கரசு (கனடா), புஸ்பவதி ஆகியோரின் சகோதரனும் சுஜி (கொலண்ட்), கஜேந்திரன் (நீர்வேலி ப.நோ.கூ.சங்கம்), சர்வேஸ்வரன் (கனடா), சிறிக நந்குமார் (கனடா) ஆகியோரின் மாமனாரும் திவானுஷன் (கொலண்ட்), நிவேதிகா, திவிஷா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் மகாலிங்கம் (கனடா), இராஜேஸ்வரி, புஸ்பவதி, காலஞ்சென்றவர்களான சிவசிங்கம், சரஸ்வதி, தர்மலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். (20317) (15)

தகவல்:
குடும்பத்தினர்.

## சின்னத்தம்பி செந்தூர்வேல்



ஏழாலை மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செந்தூர்வேல் நேற்று (11.07.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தவமணி தம்பதியரின் அன்பு மகனும் உடுப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தியாகேச மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மருமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் இந்திராதேவி, சத்தியலோகினி, மகேந்திரன், இளங்கீரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் குலசிங்கம், மகேந்திரராசா, புமலாதேவி, ஜெயதேவி, சோதிராசா- சிவதேவி காலஞ்சென்ற யோகராசா மற்றும் இராஜேஸ்வரி, விஜயராஜா- ஜெயந்தி, சிலோஜினிதேவி- சிவயோகநாதன்,விமலாதேவி, இராஜேந்திரம், நிர்மலாதேவி- மோகன்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2012) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2 மணியளவில் உசத்தியோடை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேல வளவு,
ஏழாலை மேற்கு,
சுன்னாகம். (20314) (15)

தகவல்:
குடும்பத்தினர்.

# பூநகரியில் மணல் சூறையாடும் அரச சார்புத் தமிழ்க் கட்சியினர்

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தீர்மானம் பிசுபிசுப்பு

பூநகரி, ஜூலை 12

பூநகரி கௌதாரி முனையிலிருந்து அரசுடன் இணைந்து செயலாற்றும் தமிழர் கட்சியெனக் கூறிக்கொள்பவர்கள் தினமும் பெருமளவு மணலைக் கொண்டு செல்வதாக இங்குள்ள மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஜனவரி மாதத்தில் பூநகரியில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பூநகரியிலிருந்து மணல், மரம், விறகு ஆகியனவற்றை வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லக் கூடாதெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தை இறுக்கமான முறையில் செயற்படுத்த வேண்டுமெனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

ஆனால் குறித்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் தினமும் பெருமளவு மணலை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கௌதாரிமுனையில் தொடரும் மணல் அகழ்வால் பூநகரிப் பிரதேசம் முழுவதுமே உவரக மாறும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக இங்குள்ள சமூக ஆர்வலர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நிலையில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் அதனை அலட்சியம் செய்துவிட்டு குறித்த அரசியல் கட்சியினர் பெருமளவு மணலை சூறையாடி எடுத்துச்செல்வதைத் தம்மால் பொறுக்க முடியவில்லை எனவும் பிரதேச வாசிகள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர். (க)

# யானை தாக்கி இளைஞர் இறப்பு

வவுணதீவு,ஜூலை12

வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பின்சேனை கிராமத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு யானை தாக்கியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பின்சேனையைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை மகேஸ்வரன் (வயது-25) என்ற இளைஞரே உயிரிழந்தவர் ஆவார்.

குறித்த இளைஞனின் சகோதரரும் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் யானை தாக்கிக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான் கரை பிரதேசத்தில் யானைகளின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. (ச)


## இரவுக் காவலாளி தேவை

யாழ் நகரில் உள்ள நிறுவனம்
ஒன்றுக்கு இரவுக் காவலாளி தேவை
தொடர்பு 077 4598440

## தேவை

பிரபல ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலைக்கு மானிப்பாய், அச்சுவேலி, சாவகச்சேரி ஆகிய இடங்களுக்கு ஆசிரியர் தேவை. G.C.E (O/L) பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் உட்பட சித்தியடைந்தவர்கள் (14.07.2012) சனிக்கிழமை மு.ப 10 மணியளவில் 140, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில் வரவும்.

தொ.பே.0212225796,
0777009653

(20308) (15-14)

## பணியாளர் தேவை

மின்சாதனப் பொருள்களை
விற்பனை செய்யும் பிரபல
நிறுவனத்திற்கு பின்வரும்
பணியாளர்கள் தேவை

1. கணக்குப்பதிவாளர்
2. விற்பனையாளர்

அனுபவம் உள்ளவர்கள்
எதிர்வரும் சனிக்கிழமை
மு.ப. 10 மணிக்கு நேரில் வரவும்.

குறிப்பு: ஆண்கள் மட்டும்

யாழ் மின்னகம்
இல (94)06, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(c/1450) (3)
T.P.: 021 222 2353


## தவறிவிட்டது

நா.செல்வநாதன் என்பவரது தகவல்கள் அடங்கிய இதய சத்திரசிகிச்சைப்பிரிவு கிளினிக் கொப்பி சிவன் புது வீதிக்கும், ஆனைப்பந்தி சந்திக்கும் இடையில் கடந்த (09.07.2012) திங்கட்கிழமை தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் 47, சிவன் புது வீதி, நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவும்.

(20313) (3) தொடர்பு - 077 6027397

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



யாழ்.விழிப்புலனற்றோர் சங்க முன்னாள் தலைவரும்,செயளாலரும், தற்போதய வாழ்வகத் தலைவருமாக ரவீந்தின் அவர்களினதும்,எமது சங்க முன்னாள் செயளாலருமான ஆ.பரமேஸ்வரன் அவர்களிதும் தாயாருமான

## ஆறுமுகம் தங்கமணி

அவர்கள் இறைவனடி சேர்ந்ததனையிட்டு அமரருக்கு எமது அஞ்சலியினை செலுத்துவதோடு அவரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

கோயில் வீதி,
1ம் ஒழுங்கை
யாழ்ப்பாணம். (20316)

யாழ் விழிப்புலனற்றோர்
சங்க சமூகம்

# கண்ணீர் அஞ்சலி



வாழ்வக நிறுவன தலைவர்
ஆ.ரவீந்திரன் அவர்களின்
அன்புத் தாய்

திருமதி

## தங்கமணி ஆறுமுகம்

அவர்கள் 11.07.2012 புதன்கிழமை காலமானார். அவரது இழப்பிற்கு வாழ்வக சமூகத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்வகம்
சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம். (சி/1453) (3.14)

நிர்வாகசபை உறுப்பினர்கள்,
பொதுச்சபை உறுப்பினர்கள்,
ஆசிரியர்கள், பெற்றோர்கள்,
மாணவர்கள், பணியாளர்கள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1950 | 2012 |
| 10 | 06 |
| 17 | 12 |


## சிவசம்பு இரத்தினசபாபதி

கடந்த 12.06.2012 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த அமரர் சிவசம்பு இரத்தினசபாபதி அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று 12.07.2012 வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பரராஜசேகரப்பிள்ளையார்
கோயிலடி, இணுவில். (20315) (15)

மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## சின்னத்தம்பி ஆறுமுகம்

மண்ணில்
20 ★ 07 ★ 1949
விண்ணில்
09 ★ 07 ★ 2011

( திதி- 12.07.2012 நவமி )

ஆண்டு ஒன்று போனதே
ஆசை அப்பாவை நாம் பிரிந்து
நம்ப மனம் மறுக்குதப்பா
ஆதரிக்க யாருமில்லை
எம் கவலை சொல்லி அழவோ
ஆயிரம் தடவை எமக்கு நாமே சொன்னாலும்
ஆறவில்லை எம் கவலை
உயிர் உள்ளவரை உம்மை மறவோம்
உமக்காய் இறைவனை பிரார்த்திக்கிறோம்
ஓம் சாந்தி, சாந்தி,,சாந்தி,,,,



தர்மா ஒழுங்கை,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

என்றும் உங்கள் நினைவில் வாழும்
மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளை.

# நீங்காத நினைவலைகள்

28 ஆம் ஆண்டு



அமரர்
வைத்தி அண்ணாமலை
தோற்றம்:- 09.05.1924
மறைவு:- 18.02.1984

1 ஆம் ஆண்டு



அமரர்
அண்ணாமலை பவளம்
தோற்றம்:- 07.04.1930
மறைவு:- 24.06.2011

பாசத்தின் திருவுருவாய் பண்பின் சிகரமாய்
எமையெல்லாம் பெற்றெடுத்து அரவணைத்து
பெருமை தேடித் தந்த எமது முன்னறி
தெய்வங்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

கூழாவடி ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

தகவல்
குடும்பத்தினர்

# VEMBADI OLD GIRLS' ASSOCIATION UK

(Estd 1984)
email:vembadigirlsuk@gmail.com
web:www.vogauk.co.uk

We would like to congratulate the new principal Mrs Venuka Shanmugaratnam. We are very happy that the best candidate has been selected as the principal of Vembadi Girls' High School. We feel she will be the most suitable person to lead the school, to keep the Vembadi flag flying high.

It is sad to note that the political interference has hindered the progress and disrupted the reputation of the school. We feel the strike by the students is detrimental to good behaviour. The children should not have been used for personal goals.

Since the retirement of Mrs Ponnampalam, Mrs Rajini Muthukumaran has been acting principal from September 2011. During this tenement, there have been problems hindering the development of the school.

We are very much interested in the progress of each and every child at Vembadi. We give financial support through Jaffna Old Girls' Association for a specific project identified by the Principal and the staff. Their request will be discussed by our Executive Committee in U.K to approve before the funds are released to VOGA Jaffna. Then the President of Jaffna OGA acknowledges the funding and sends the report once the project is completed. It is very disheartening to find the individuals who have been doing their best to enhance the students' education, subjected to undeserved comments.

We hope the school will achieve its full potential under the capable principal with the support of the Education department. A child should be educated not only academically, but also in all other fields, so that in the future they could be the pillars of society.


Our support will be with you always
Good Luck and Best wishes.

**Mrs.Bavani Maheswaran,**
**president.**

**Vembadi Old Girls' Association UK**

(20245)(2-6-7)

# கோண்டாவில் இந்துவின் வாழ்த்துக்கள்



எமது பாடசாலையில் ஆறுவருடங்களுக்கு
மேலாக அதிபராகச் சேவையாற்றி
பாடசாலை நிர்வாகக் கட்டமைப்பில்
கணினி மயப்படுத்தலில் சிறப்பான
மாற்றங்களைச் செய்து 2012.07.06
தொடக்கம்
யாழ்ப்பாணக் கோட்டக் கல்வி
பணிப்பாளராக பதவி உயர்வு
பெற்று சென்றுள்ள

**திரு.சுப்பையா**
**சண்முககுமார்**

அவர்கள் மேலும் பதவி உயர்வுகள் பெற்று
சீரும் சிறப்பும் நிறைந்து
வாழ வாழ்த்துகின்றோம்.

– பாடசாலைச்சமூகம்.

(சி/1443) (2-6-7)

# கேள்வி அறிவித்தல்

கல்விப்பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம்,
தீவகம், வேலணை

1. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வடமாகாண கல்வி அமைச்சின் PSDG நிதி ஒதுக்கீட்டின் கீழ் பின்வரும் நிர்மாண வேலைகளைச் செய்ய வலயக்கல்விப் பணிப்பாளரும் கேள்விச்சபைத் தலைவருமாகிய என்னால் கேள்வி அறிவித்தல் செய்யப்படுகிறது.
2. ஒப்பந்தகாரர் இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகம் உள்ளவராகவும், பதிவுப்புத்தகம் 2012 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
3. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.
4. கேள்விப்பத்திரங்கள் வழங்கல் 13.07.2012 ஆம் திகதியிலிருந்து 20.07.2012 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணி வரை வழங்கப்படும். கேள்விகள் யாவும் எம்மால் 26.07.2012 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் எமது அலுவலகத்தில் முற்பகல் 11.30 மணிக்கு கேள்விப்பத்திரப் பெட்டி திறக்கப்படும்.
5. கேள்விப்பத்திரங்களுக்கான மீளளிக்கக்கூடிய மற்றும் மீளளிக்க முடியாத வைப்புப் பணங்களை தீவகக் கல்வி வலய அலுவலகத்தில் செலுத்துவதன் பேரில் கேள்விப் பத்திரப் படிவங்களை பாடசாலை வேலைகள் பகுதியில் பெற்றுக்கொள்ளவும் மேலதிக தகவல் தேவைப்படின் இங்கு பெற்றுக்கொள்ளவும் முடியும்.

| பாடசாலையின் பெயரும் வேலையின் விவரமும் | மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் | மீளளிக்கமுடியாத வைப்புப்பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|
| (1) யா/கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம் (பிரதான மண்டபம் புனரமைத்தல்) | 42000.00 | 1200.00 | M7/C8 |

6. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் எம்மால் வழங்கப்படும் இரண்டு கட்டட மதிப்பீட்டு அறிக்கை பத்திரங்களின் ஒன்றை மூலப்பிரதியாகவும் மற்றையதை இணைப்பிரதியாகவும் கொள்ள வேண்டும்.
7. கேள்வியாளர் பூரத்தி செய்யப்பட்ட மூலப்பிரதியையும் ஒப்பந்த ஆவணங்களையும் ஒரு கடித உறையிலும் மறு பிரதியை வேறு கடித உறையிலும் இடல் வேண்டும். இரண்டு கடித உறைகளும் வேறு பெரிய கடித உறையிலிட்டு மேல் மூலையில் வேலையின் விவரமும் ஒப்பந்தகாரரின் இறப்பர் முத்திரையும் பொறிக்கப்பட்டு தலைவர், கேள்விச்சபை, வலயக்கல்விப்பணிமனை, தீவகம் என விலாசமிட்டு தீவகக்கல்வி வலையத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் 26.07.2012 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன் இடப்பட வேண்டும்.
8. மேற்படி வேலைகளுக்கான கேள்விகளில் பங்கெடுக்க விரும்புவோர் தமது இக்ராட் பதிவுப் புத்தகத்தை யாழ்ப்பாணம் பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடம் அலுவலக நேரத்தில் சமர்பித்து பங்கெடுப்பதற்கான சிபார்சைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
9. குறித்த நேரத்திற்கு பிந்திய கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

திரு.வ. இராதாகிருஸ்ணன்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
தீவகம், வேலணை.

(C/1425)(6-8-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கிழக்கு மாகாண தேர்தலும் கள நிலைமைகளும்

கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு நாள்கள் நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில் அங்கு களம் இறங்கவுள்ள அரசியல் கட்சிகளும் அரசியல் பிரமுகர்களும் சுறுசுறுப்படைந்துள்ளார்கள்.

கிழக்குமாகாண சபையை தன்வசப்படுத்திக் கொள்வதற்கு அரசும் பகீரதப் பிரயத்தனத்தில் இறங்கியிருப்பது தெரிகிறது.

தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தனை (பிள்ளையான்) தன் கைக்குள் போட்டுக் கொண்டு அவரை அரசு சார்ந்த வேட்பாளராக அறிமுகப்படுத்திக் கொள்ள அரசு விரும்புவதாகத் தெரிகிறது. அதேசமயம் கிழக்குமாகாணத்தில் கணிசமான தமிழ் பேசும் முஸ்லிம் வாக்காளர்களின் ஆதரவு பெற்ற முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவையும் தன்பக்கம் ஈர்த்துக் கொண்டு இரு தரப்புக்கும் ஏற்புடைய முதலமைச்சருக்கான வேட்பாளர் ஒருவரை களம் இறக்குவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு வருவதாக தெரிகிறது. முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஏற்கனவே அரசுடன் இணைந்து நீதித்துறை அமைச்சராக இருந்து வருகிறார்.

சிவநேசதுரை சந்திரகாந்தன் ஏற்கனவே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் போராளியாக இருந்து முரளிதரன் (கருணா அம்மான்) போல் வெளியேறி அரசியல் கட்சியொன்றை அமைத்துக் கொண்டு கடந்த தேர்தலில் போட்டியிட்டு முதலமைச்சர் ஆனவர். அவருக்கும் கருணா அம்மானுக்கும் இருக்கக் கூடிய மக்கள் ஆதரவை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கின்றது. அதே சமயம் அவர்களும் தமது பின்னணி காரணமாக அரசின் பாதுகாப்பை எதிர்பார்ப்பவர்கள். ஐக்கிய தேசியக் கட்சியும் ஜனதா விமுக்தி பெரமுனவும் கூட களத்தில் இறங்க ஏற்பாடுகள் செய்து வருகின்றன. ஏற்கனவே 5 சுயேச்சைக் குழுக்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருப்பதாக செய்தி வந்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸும் ஏனைய முஸ்லிம் அமைப்புகளும் தங்களுக்குள் அரசியல் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அடிப்படையில் தங்கள் சமூகத்தின் இருப்பும் நலன்களும் அபிவிருத்தியும், அவர்களுக்கு முக்கியமாகும்.

இந்தச் சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட முடிவெடுத்திருப்பது பலருக்கும் அங்கலாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிழக்கு மாகாணத்தில் இருக்கும் மக்கள் ஆதரவு பற்றி இப்போது அறுதியிட்டு சொல்ல முடியாவிட்டாலும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு கடந்த காலத்தில் நிலவிய மக்கள் ஆதரவைக் கொண்டு பார்க்கையில் அந்த நிலைமை இப்போதும் சிதறிப்போய் இருக்க முடியாது. சென்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடாதமையால் இந்தத் தேர்தலில் அதன் தாக்கம் எவ்வாறு இருக்கும் என்று தெரியவில்லை.என்றாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவராய் இருப்பதாலும் அந்த அமைப்பில் பல கட்சிகள் ஒன்றிணைந்திருப்பதாலும் கிழக்கிலுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் அந்தக் கட்சிக்கு ஆதரவாக நிற்பதாலும் அதன் வெற்றி முகம் பிரகாசமாகத் தெரிவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுவரை கிடைத்த தகவல்களின்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் முஸ்லிம் காங்கிரஸிற்கும் இடையில் இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகள் நடைபெற்று வந்ததாகத் தெரிகிறது. முஸ்லிம் காங்கிரஸ் ஏற்கனவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஒரு பங்காளியாக இருப்பதாகவும் அதனால் அந்தக் கட்சி தங்கள் கட்சியுடன் சேர்ந்தே தேர்தலில் போட்டியிடும் என்ற வகையிலும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பத்திரிகை பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார். அந்த வகையில் அரசு சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கும் கணிசமான ஆதரவு இருக்கும் என்று கருதலாம். என்றாலும் முதலமைச்சர் பதவிக்கு யாரை நியமிப்பது என்பதில் பிள்ளையான் பிரிவினருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் பிரிவினருக்கும் இடையில் தோன்றக் கூடிய பிடுங்குப்பாட்டை தீர்த்து வைக்க அரசு தரப்பினர் என்னவிதமான அரசியல் தந்திரத்தைப் பயன்படுத்துவார்கள் என்பதை இனிமேல் தான் பார்க்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சில முக்கிய பிரச்சினைகளைக் கொண்டு இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றது. குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்திருப்பதை அது வற்புறுத்தி வருகின்றது. இந்த இணைப்பு இலங்கை -இந்திய ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தத்தின்படி வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பாரம்பரியமான தமிழ்ப் பிரதேசங்கள் என்பதையும் கருத்துக் கணிப்பொன்று நடத்தப்படுவதற்கு முன்னரே இரண்டு மாகாணங்களும் இணைந்திருந்திருந்ததையும் இலங்கை அரசு ஒப்புக் கொண்டிருந்தது. எனவே இந்த இணைப்பு நீடித்திருப்பதானால் இந்தப் பிரதேசங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களான தமிழரும் முஸ்லிம்களும் அதனை இணைந்து நிலை நாட்டிக் கொள்ள வேண்டும்.

வழக்கொன்றின் மூலம் இந்த இணைப்பு மறுதலிக்கப்பட்டாலும் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்ட அரசு அதன்படி உருவான 13 ஆவது திருத்தத்தின் சில பகுதிகளை நிறைவேற்றியிருப்பதால் முற்றாக புறந்தள்ளிவிட முடியாது. மாகாண சபைகள் உருவானதே 13 ஆவது திருத்தத்தின் ஒரு பகுதியே.

எனவே தான் தமிழ் தரப்புகள் முஸ்லிம் அமைப்புகளுடனான இணக்கப்பாட்டினை நல்ல முறையில் பேணிக் கொள்வது அவசியம். அது சாத்தியமில்லாது போனாலும் முஸ்லிம் மக்களின் அபிலாசைகளையும் தம் வேலைத் திட்டங்களில் இணைத்துக் கொள்ள வேண்டும். மத்திய அரசு தமிழருக்குரிய உரிமைகளை வழங்குவதில் காட்டும் வேறுபாடுகளை முஸ்லிம் மக்கள் விடயத்தில் தமிழர் தரப்புகள் காட்டுவதான உணர்வுகள் வளர்வதை அனுமதிக்கலாகாது. எதிர்காலத்தில் தமிழ் பேசும் மக்களின் இருப்புக்கு இந்த நிலைப்பாடு அவசியம் என்போம்.

# டிப்ளோமா பட்டதாரிகளின் முறைப்பாட்டு விசாரணை 19இல்

யாழ்ப்பாணம், ஜூலை 12

பட்டதாரிப் பயிலுனர் நியமனத்தில் தமக்கான நியமனங்கள் புறக்கணிக்கப்பட்டதாகத் தெரிவித்து உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிப் பட்டதாரிகளால், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய கிளையில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு மீதான விசாரணை எதிர்வரும் 19 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்த முறைப்பாட்டில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஆகியோரை விசாரணைக்கு வருமாறு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

இந்த மாதம் 2 ஆம் திகதி யாழ். மாவட்ட பட்டதாரிகளுக்கு பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டது. இதன் போது நேர்முகத் தேர்வுகளுக்கு அழைக்கப்பட்டிருந்த உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிப்பட்டதாரிகள் நியமனத்தின் போது புறக்கணிக்கப்பட்டனர்.

இலங்கையின் ஏனைய பகுதிகளில் உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிப் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்ட போதும், யாழ். மாவட்டத்தில் மட்டுமே இந்த நியமனம் புறக்கணிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு முறைப்பாட்டை யாழ். மாவட்ட உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிப் பட்டதாரிகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் செய்திருந்தனர்.

இந்த முறைப்பாட்டில் பிரதிவாதிகளாக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

அதற்கமைவாக இந்த முறைப்பாட்டின் மீதான விசாரணை எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும், பிரதிவாதிகளை இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளைக்கு அன்றைய தினம் சமுகமளிக்குமாறு கோரியும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய கிளையின் இணைப்பாளர் த.கனகராஜ் குறிப்பிட்டார்.

(ம-5)

# 9 லட்சம் ரூபா செலவில் மாதகலில் கொல்களம் அமைப்பு

வலி.தென்மேற்கு, ஜூலை 12

வலி. தென்மேற்கு பிரதேசத்திலுள்ள இறைச்சிக் கடைகளின் தேவைக்காக மாதகல் பகுதியில் ஒன்பது லட்சம் ரூபா செலவில் கொல்களம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதனால் கொல்களத்தைத் தேடி அலைந்து திரிந்த உரிமையாளர்கள் பயனடைந்துள்ளார்கள்.

வலி.தென் மேற்கு பிரதேசத்திலுள்ள இறைச்சிக் கடைகளுக்குத் தேவையான ஆடு, மாடுகளை வெட்டுவதற்காக காக்கை தீவிலுள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் கொல்களம் அமைக்கப்பட்டிருந்தது.

நாட்டில் ஏற்பட்டிருந்த போர்ச் சூழ்நிலை காரணமாக காக்கை தீவு பகுதியில் நிலை கொண்டிருந்த பாதுகாப்புப் படையினர், பாதுகாப்புக் காரணங்கள் முன்னிட்டு பல வருடங்களாக இயங்கி வந்த கொல்களத்தை மூடுமாறு தெரிவித்ததைத் தொடர்ந்து கொல்களம் மூடப்பட்டது.

மூடப்பட்ட கொல்களத்திற்குப் பதிலாக உடனடியாக கொல்களம் அமைப்பதற்குரிய பொருத்தமான இடம் கிடைக்காததால் கொல்களம் அமைப்பதில் தாமதம் ஏற்பட்டது.

இதனால் அருகாமையிலுள்ள பிரதேச சபையிலிருக்கும் கொல்களத்தை நாட வேண்டிய நிலை இறைச்சிக் கடை உரிமையாளர்களுக்கு ஏற்பட்டிருந்தது.

அருகாமையிலுள்ள கொல்களங்களுக்குச் செல்வதால் ஏற்படும் சிரமங்கள், தாமதங்கள் குறித்து பிரதேச சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய மாதகல், காட்டாப்புலம் பகுதியில் பண்டத்தரிப்பு வைத்தியசாலைக்கு அருகாமையிலுள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் 9 லட்சம் ரூபா செலவில் கொல்களம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-115)

# குறிப்பிட்ட காலம் கடந்தும் திறக்கப்படாத கே.கே.எஸ். வீதி

யாழ்ப்பாணம், ஜூலை 12

வீதி அகலிப்பு பணிக்காக யாழ். நகரப் பகுதியில் மூடப்பட்ட கே.கே.எஸ். வீதி, பதினொரு நாள்களில் மீண்டும் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட போதும் 18 நாள்களாகியும் இன்னமும் மக்கள் பாவனைக்கு விடப்படவில்லை.

யாழ். நகரின் மின்சார நிலைய வீதிச் சந்தியிலிருந்து பண்ணை சிவன் வீதி வரையான கே.கே.எஸ். வீதி கடந்த மாதம் 25 ஆம் திகதி முதல் இந்த மாதம் 5 ஆம் திகதிவரையிலான 11 தினங்கள் மூடப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் அறிவித்திருந்தார்.

குறிக்கப்பட்ட 11 தினங்களுக்கு மேலதிகமாக ஒரு வாரம் கடந்துள்ள நிலையிலும் இன்னமும் வீதி அகலிப்புப் பணிகள் நிறைவடையாத நிலையில் காணப்படுகின்றன.

யாழ். நகருக்கு மக்கள் பிரவேசிக்கும் பிரதான வீதி மார்க்கங்களில் ஒன்றாகக் காணப்படும் கே.கே.எஸ். வீதியில், யாழ். நகரின் மின்சார நிலைய வீதிச் சந்தியிலிருந்து வண்ணை சிவன்வீதி வரையான பகுதி மூடப்பட்டுள்ளதன் காரணமாக மாற்று வீதிகளில் நெரிசல்கள் ஏற்படுகின்றன.

இந்த விடயம் தொடர்பில் வீதி அகலிப்பு பணிகளுக்காக வீதியை மூடியுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையினரோ, பொலிஸாரோ நடவடிக்கை மேற்கொள்ளாமல் மெத்தனப் போக்கில் இருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

மூடப்பட்டுள்ள கே.கே.எஸ். வீதியில் உள்ளடங்கும் கட்டடங்கள் இன்னமும் முழுமையாக இடிக்கப்பட்டு அகற்றப்படாத நிலையில் வீதி அகலிப்பு வேலைகள் நிறைவு பெறுவதற்கு நீண்ட காலம் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

(ம-5)

## முதியவரை மோதியது பஸ் சாரதியும் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஜூலை 12

புத்தூர் சோமஸ்கந்தா சந்தியில் முதியவரொருவரை பஸ் மோதி விபத்துக்குள்ளாக்கியதில் படுகாயமடைந்த அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் புத்தூர் கிழக்கைச் சேர்ந்த பொன்னன் சின்னத்துரை (வயது-75) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இந்தச் சம்பவத்தால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் பஸ் சாரதியை கடுமையாகத் தாக்கியுள்ளனர். இதனால் காயங்களுக்குள்ளான சாரதியும் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

படுகாயமடைந்த முதியவர் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

(16-11)

# கோண்டாவில் டிப்போ வீதியும் அகலிப்பு

வலி.தென்மேற்கு, ஜூலை 12

மானிப்பாயிலிருந்து சுதுமலை, இணுவில் ஊடாக கோண்டாவில் டிப்போவுக்குச் செல்லும் வீதி காப்பெற் வீதியாக மாற்றி அமைக்கப்படவுள்ளது.

வீதி அகலிப்புக்கு இடையூறாக இருக்கும் மதில்கள் இடிக்கப்பட்டுப் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றன.

வலி.தென் மேற்கு பிரதேசத்திலுள்ள இந்த வீதியை அபிவிருத்தி செய்வதற்காக அந்தப் பகுதியில் வசிக்கும் மக்களின் அபிப்பிராயங்களை அறிவதற்கான கூட்டம் கடந்த வருடம் வலி. தென்மேற்கு பிரதேச செயலர் எழிலரசி அன்ரன் யோகநாயகம் தலைமையில் சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர் உட்பட இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பொது மக்களும் கலந்து கொண்டனர். வீதி அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசியம் பற்றியும் இதனால் ஏற்படக்கூடிய நன்மை, தீமை பற்றியும் அதிகாரிகள் பொதுமக்களுக்கு எடுத்து விளக்கினர்.

ஆரம்பத்தில் மக்கள் மத்தியிலிருந்து எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட போதிலும் இறுதியில் அதிகாரிகளின் விளக்கத்தை ஏற்றுக் கொண்டு வீதி அகலிப்புக்கு சம்மதித்தனர்.

இதைத் தொடர்ந்து வீதி, அகலிப்பது பற்றிய குறியீடுகளும் மூன்று தடவைகள் வீதியில் இடப்பட்டன. தற்பொழுது இந்த வீதி அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு வீதி அகலிப்புக்கு இடையூறாக இருக்கும் சுற்றுமதில்கள் இடிக்கப்பட்டு புதிதாக அமைக்கப்பட்டும் வருகின்றன.

(ம-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவனத்தால் அமைக்கப்பட்ட கிணறு அரைகுறை நிலையில்

## தண்ணீர் பெறுவதில் மக்கள் சிரமம்

கிளிநொச்சி, ஜூலை 12

கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளை ஊரியான் கிராமத்தில், நிறுவனமொன்றினால் ஆரம்பிக்கப்பட்ட பொதுக்கிணறு ஒன்றின் கட்டுமானப் பணிகள் இதுவரை பூர்த்தியாகாத நிலையில் இருப்பதால் இங்கு வசிக்கும் மக்கள் தண்ணீரைப் பெறுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் புதிதாக அமைக்கப்பட்ட இந்தப் பொதுக் கிணற்றின் கட்டுமானப் பணிகள் பூர்த்தியாக்கப்படாமல் இன்று வரை காணப்படுகின்றது.

அத்துடன் அந்தக் கிணற்றின் சில பகுதிகள் வெடிப்புக்களுக்கு உள்ளாகிச் சேதமடைந்தும் காணப்படுகின்றது. இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்குச் சுட்டிக் காட்டப்பட்டுள்ள போதிலும், இன்றுவரை அதன் பணிகள் பூர்த்தியாக்கப்படாமல் உள்ளன.

இதனால் இங்குள்ள பல குடும்பங்கள் நீரைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன. தற்போதைய வரட்சியான நிலையில் மேற்படி கிணற்றில் தேவையான நீர் உள்ளபோதும் அதனைப் பயன்படுத்த முடியாத நிலையே காணப்படுகின்றது. (க-6)

# போதையில் வீதியில் இடையூறு செலுத்தினார் தண்டம் ரூ.1,500

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதி வீதியில் பயணித்தவர்களுக்கு மதுபோதையில் இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டவருக்கு ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் வீதியால் பயணித்தவர்களுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்த ஒருவரை கிளிநொச்சிப் பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியிருந்தனர். இவருக்கு ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், இதனைக் கட்டத் தவறினால் ஒரு வார சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (க-6)

### வட்டக்கச்சிப் பகுதியில்

# வீடு உடைத்து திருட்டிய இருவருக்குத் தண்டம்


கிளிநொச்சி, ஜூலை 12

கிளிநொச்சி, வட்டக்கச்சிப் பகுதியில் தொலைபேசி மற்றும் டி.வி.டி. பிளேயர் என்பவற்றைத் திருடிய இருவருக்கு பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழிய சிறைத் தண்டனையும் 1,500 ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது

கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் இரவு வேளை வீட்டுக் கதவை உடைத்து புகுந்து அங்கிருந்த சி.டி.எம்.ஏ. தொலைபேசி மற்றும் டி.வி.டி பிளேயர் என்பவற்றை அபகரித்ததுடன் அவற்றை விற்பனை செய்த குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இருவர் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தனர்.

> குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து இருவருக்கும் தண்டத்துடன் பத்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட கடூழிய சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது.

குற்றவாளிகள் இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில் இருவருக்கும் எதிராகப் பதிவு செய்யப்பட்ட மூன்று குற்றச்சாட்டுக்களில் இரண்டு குற்றச்சாட்டுக்களுக்கும் தலா 1,500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன், 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒருவருடக் கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. (க-6)



'கவிக்குயில்' என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட மன்னார் பள்ளிமுனையைச் சேர்ந்த பாடகி செல்வி அனோஜா மற்றும் 'பல்துறை வித்தகன், என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட எழுத்தாளரும், குறும்பட இயக்குநருமான நிசாந்தன் ஆகியோர் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்பு ஆண்டகை மற்றும் தமிழ்நேசன் அடிகளார் ஆகியோருடன் காணப்படுகின்றனர். (12)

# வவுனியா இ.போ.ச. ஊழியருக்கு வேதனம் வழங்குவதில் இழுபறி

வவுனியா, ஜூலை 12

வவுனியா அரச பஸ் டிப்போவில் பணியாற்றும் பணியாளர்களின் மாதாந்த வேதனம் ஒழுங்காக வழங்கப்படுவதில்லை என ஊழியர்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

அரசு எந்தவித நிதியுதவியும் செய்யாததனால், வரும் வருமானத்திலேயே வாகனங்களின் பராமரிப்பையும் ஊழியர்களின் சம்பளத்தையும் கொடுக்க வேண்டிய நிலை இருப்பதனால் சில சமயங்களில் இத்தகைய நெருக்கடி ஏற்படுவதாக வவுனியா டிப்போ முகாமையாளர் செ.குணராசா தெரிவித்தார்.

வவுனியா டிப்போவில் பணியாற்றும் சாரதிகள், மெக்கானிக்மார், நடத்துநர்கள் ஆகியோருக்கு மாதாந்தம் 26 ஆம் திகதியும், ஏனைய ஊழியர்களுக்கு மாதாந்தம் 8 ஆம் திகதியும் வேதனம் வழங்கப்படுவது வழக்கமாகும். ஆனால் கடந்த சில மாதங்களாக அதில் தொய்வு நிலை ஏற்பட்டுள்ளது என்று தொழிலாளர்கள் கூறுகின்றனர். குறிப்பிட்ட திகதிகளில் வேதனம் வழங்கப்படாது நீண்ட கால இழுத்தடிப்புக்குப் பின்னரே வழங்கப்படுவதாக ஊழியர்கள் குறை கூறுகின்றனர்.

வவுனியா சாலையில் நாளாந்த வருமானமாக நான்கரை லட்சம் ரூபாவுக்கு மேல் கிடைப்பதாகவும், அந்த நிதியின் மூலம் பஸ்களின் பழுதடைந்த உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்வதிலேயே முக்கிய கவனம் செலுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் குற்றச்சாட்டை முகாமையாளர் அடியோடு மறுத்தார். அப்படிப் பாரபட்சம் காட்டப்படுவதில்லை என்றார்.

பஸ் நடத்துநர்களுக்கு உரிய காலப்பகுதியில் சம்பளம் வழங்கப்படாததால் அவர்கள் தமது தேவைகளை நிறைவு செய்வதற்கு முறைகேடான செயற்பாடுகளில் ஈடுபடத் தூண்டப்படுகின்றனர் எனப் பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை இங்கு பணியாற்றும் செல்வாக்கு உள்ளவர்களுக்கு முற்பணமாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்படுவதாகவும் ஏனையவர்கள் புறக்கணிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மெக்கானிக்மார்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வந்த மாதாந்த ஊக்குவிப்பு படியாகிய 4 ஆயிரம் ரூபாவும் கடந்த 6 மாதங்களாக வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (க-400)

# பனை அபிவிருத்திச் சபைக்கு புளியங்குளத்தில் அலுவலகம்

வேப்பங்குளம்,ஜூலை 12

பனை அபிவிருத்திச் சபையின் புதிய அலுவலகம் வவுனியா புளியங்குளத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாகவே வவுனியாவிலுள்ள பல தற்காலிக இடங்களில் பனை அபிவிருத்திச் சபையின் அலுவலகம் இயங்கி வந்தது. இதனால் பல்வேறு சிரமங்களையும் எதிர்கொள்ள வேண்டிய நிலையும் சபைக்கு ஏற்பட்டது.

தற்போது புளியங்குளத்தில் நிரந்தரமானதொரு அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது.

பனை அபிவிருத்திச் சபை தற்போது பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இதில் சிறந்த பனம் விதைகளைத் தெரிவுசெய்து பல்வேறு இடங்களிலும் நடுகை செய்யும் திட்டம் முதன்மையானது.

இதன் மூலம் அழிவடைந்த ஏராளமான பனைகளை ஈடு செய்ய முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (க-421)

# தமது கிராமத்துக்கும் பஸ் சேவை கேட்கிறது ஆனைவிழுந்தான்குளம்

அக்கராயன், ஜூலை 12

கிளிநொச்சி ஆனைவிழுந்தான்குளம் கிராமத்தை இலக்கு வைத்து பஸ் சேவையை நடத்துமாறு இந்தக் கிராம மக்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

1983 இல் உருவாக்கப்பட்ட இந்தக் கிராமத்துக்கு ஒரு போதுமே பஸ் சேவை இடம்பெற்றதில்லை. இதனால் இந்தக் கிராம மக்கள் பெரியளவில் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவர்கள் தற்போது அக்கராயன் வன்னேரிக்குளம் வீதியிலுள்ள சந்தியில் இறங்கி சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரம் நடந்து, தமது இருப்பிடங்களுக்குச் செல்கின்றனர். இந்த நிலை 1983 ஆம் ஆண்டிலிருந்து தொடர்கின்றது.

மேலும் இந்தக் கிராமத்திலுள்ள பாடசாலைக்கு நியமிக்கப்படும் ஆசிரியர்கள் போக்குவரத்துச் சிரமங்களைக் காரணம் காட்டி, இங்கு வருவதைத் தவிர்த்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் மாணவர்களின் கல்வி வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்தக் கிராமத்தில் அமைந்துள்ள பாடசாலையும் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றது.

> போக்குவரத்துச் சிரமங்களைக் காரணம் காட்டி பாடசாலைக்கு வர ஆசிரியர்கள் பின்னடிக்கிறார்கள்

இங்கு கல்வி கற்கும் 70 மாணவர்களுக்கு 5 ஆசிரியர்களே உள்ளனர். இட நெருக்கடியும் நிலவி வருகின்றது. மாணவர்களுக்கான ஒன்றுகூடல் மண்டபம் இல்லாமை பெரிய குறையாக உள்ளது.

1986 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்தப் பாடசாலை, ஆரம்பத்தில் உள்ள கட்டடத்துடனேயே தற்போதும் இயங்கி வருகின்றது. புதிய கட்டடங்கள் எவையும் அமைக்கப்படவில்லை.

மேலும் பாடசாலையின் விளையாட்டு மைதானமும் புனரமைக்கப்படவேண்டியுள்ளது. பாடசாலை வரையும் பஸ் சேவை இடம்பெறாதது பெரிய குறையாகவே காணப்படுவதாக கிராம மக்கள்தெரிவித்தனர். (க-18)

# கணிதச் செயற்பாடுகள் செயலமர்வு

வவுனியா, ஜூலை 12

கணிதச் செயற்பாடுகள் மற்றும் செயற்பாட்டுக் கருவிகளைத் தயாரித்தல் தொடர்பான செயலமர்வு இன்று வியாழக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 2.30 மணிவரை வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயக் கணித அறையில் இடம்பெறவுள்ளதாக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா தெரிவித்துள்ளார். (க-402)

# வவுனியா பிரதேசத்தில் 26 முதியோர் சங்கங்கள்

வவுனியா, ஜூலை 12

வவுனியா பிரதேச செயலக எல்லைக்குள் 26 முதியோர் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று வவுனியா பிரதேச செயலக முதியோர் மேம்பாட்டு உதவியாளர் அ.பிரகாசினி தெரிவித்தார்.

வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாதசுந்தரன் தலைமையில் 26 முதியோர் சங்கங்கள் கடந்த இரண்டு வருடங்களுக்குள் அமைக்கப்பட்டுள்ளன.

முதியோர் நலன் கருதி அமைக்கப்பட்டுள்ள இந்தச் சங்கங்கள் மூலம் முதியோர் தமது பிரச்சினைகளைப் பிரதேச செயலகத்துக்குத் தெரிவிப்பதன் மூலம் உரிய அதிகாரிகள் உடனடியாகவும், படிப்படியாகவும் இவற்றுக்கான தீர்வுகளைக் காணும் முயற்சிகளைப் பிரதேச செயலகம் முன்னெடுத்து வருகிறது.

அண்மைக் காலங்களில் போரினால் பாதிக்கப்பட்ட முதியோர்களின் உளநலம், [illegible] போன்றவற்றை பிரதேச செயலாளர் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

மேலும் அவர்களின் எதிர்கால நலன் கருதி வவுனியாவில் பட்டானிச்சூர், வேலங்குளம், கந்தபுரம், தோணிக்கல், வெளிக்குளம், நெளுக்குளம், காத்தார் சின்னக்குளம், இராசேந்திரங்குளம், செக்கட்டிப்புலவு ஆகிய பிரதேசங்களில் முதியோர் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதிக்கு மீன்தொட்டி

தென்மராட்சி,ஜூலை 12

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை ஆறாம் இலக்க விடுதிக்கு மீன் தொட்டி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

நாவற்குளி - கேரதீவு வீதியை வேகமாக குறுக்கறுத்து ஓடிய பன்றி மோதி காயமடைந்து விடுதியில் சிகிச்சை பெற்ற கோவிலாக் கண்டியைச் சேர்ந்த இராசலிங்கம் வன்னியசிங்கம் என்பவர் விடுதி வைத்திய அதிகாரி மற்றும் உத்தியோகத்தர்களின் சேவைகளை கௌரவிக்கும் வகையில் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான மின்சாரத்தில் இயங்கும் மீன்தொட்டியை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இதேவேளை இந்த விடுதியில் சிகிச்சை பெற்றுச் சென்ற நோயாளர்கள் சுவர்க் கடிகாரங்கள், பிளாஸ்ரிக் மலர்க் கொத்துக்கள், கோவை மடல்கள் போன்ற பொருள்களையும் விடுதிக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

# புற்றுநோய் சிகிச்சை நிபுணர் கிளினிக் வராமையால் நோயாளர் ஆர்ப்பாட்டம்

தென்மராட்சி, ஜூலை12

புற்றுநோய் சிகிச்சை நிபுணர் வராததால் நோயாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாதத்தின் இரண்டாவது புதன்கிழமைகளில் யாழ். போதனா வைத்தியசாலை புற்றுநோய் வைத்திய நிபுணர் ஜெயக்குமாரன் சாவகச்சேரி நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கி வருகிறார்.

கடந்த மாதம் அவரது இல்லத்தில் இனந்தெரியாதோரால் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தை அடுத்து யாழ்.போதனா வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகளில் நடைபெற்ற கிளினிக்குகளுக்குச் செல்வதை அவர் நிறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் நேற்று சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நடைபெற்ற கிளினிக்குக்குப் பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் வருகை தந்திருந்தனர்.

காலை 9 மணிக்கு வைத்திய நிபுணர் வரமாட்டார் என்று அறிவிக்கப்பட்டதை அடுத்து கிளினிக்குக்கு வந்த நோயாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வைத்திய நிபுணரது இல்லத்தில் தாக்குதல் நடத்தப்பட்டதைக் கண்டித்து தென்மராட்சிப் பிரதேச மக்கள் அறிக்கை விட்டிருந்த போதிலும் இந்தப் பிரதேச மக்களுக்குச் சிகிச்சையளிக்க வராதது ஏன்? வைத்திய நிபுணர் யாழ். போதனா வைத்திய சாலைக்குக் கடமைக்குச் செல்ல முடியுமாயின் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு ஏன் வர முடியாது?, வைத்திய நிபுணர் சாவகச்சேரி வைத்திய சாலைக்கு வருவதற்கு பாதுகாப்புத் தேவையெனில் அதையும் வழங்க பிரதேச மக்கள் தயார், நோயால் பாதிக்கப்பட்ட எங்களுக்கு மருந்துகள் முடிவடைந்துள்ள நிலையில் தொடர்ந்து கிளினிக் நடத்தாமல் எங்களை கொல்வதற்கு முயற்சிக்கின்றாரா? போன்ற கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்த வேளையில் அங்கு வந்த வைத்தியசாலை அத்தியட்சகர் நோயாளர்களுடன் கலந்துரையாடி நோயாளர்களுக்குரிய மருந்துகள் கொடுப்பதற்கு வைத்திய அதிகாரியை ஏற்பாடு செய்ததுடன் அவசியம் எனக் காணப்படும் நோயாளர்களை விடுதிகளில் தங்க வைத்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்புவதாக உறுதிமொழியளித்தார். இதனையடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

இது தொடர்பாகப் புற்றுநோய் வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமாரனிடம் தொடர்புகொண்டு கேட்ட போது:-

வடமாகாணத்தில் நோயாளர் நலன்கருதியே யாழ்.போதனா வைத்தியசாலையில் மட்டுமன்றி சாவகச்சேரி, பருத்தித்துறை மற்றும் வவுனியா வைத்திய சாலைகளுக்கும் சென்று சிகிச்சை மேற்கொள்கிறேன்.

இந்த நிலையில் எனது வீடு மீது தாக்குதல் நடத்தப்பட்டமையை அடுத்து அச்சுறுத்தல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பிற வைத்திய சாலைகளுக்குச் சென்று வருவதில் எனக்கு அச்ச நிலை உள்ளது. யாழ். போதனா வைத்தியசாலையில் வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் சிகிச்சை மேற்கொள்ளப்படும். சுமுகமான சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டால் மட்டுமே ஏனைய வைத்தியசாலைகளில் சிகிச்சை மேற்கொள்ள முடியும் என்று அவர் தெரிவித்தார். (ம-9-4)

## ஹன்டர்- சைக்கிள் விபத்து இருவர் படுகாயம்

சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம்பெற்ற ஹன்டர் வாகனம்- சைக்கிள் விபத்தில் சைக்கிளில் பயணித்த பாடசாலை மாணவன் உட்பட இருவர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை கிளினிக்குக்குச் செல்வதற்காகச் சாவகச்சேரியில் உள்ள மகள் வீட்டுக்கு வந்த வயோதிபர் காலையில் மகளின் மகனுடன் சைக்கிளில் வந்தபோது வேகமாக வந்த ஹன்டர் வாகனம் சைக்கிளை மோதிவிட்டு ஓடித் தப்பியது.

வாகனம் மோதியதில் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ஞானமுத்து இசிதோர் (வயது- 70), சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த அன்ரனி யோன்சன் யூட் ரவீந்திரா (வயது- 13) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதேவேளை மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி அரியாலை ஏ- 9 வீதியைச் சேர்ந்த சுப்பையா துளசிதாஸன், மீசாலை கிழக்கைச் சேர்ந்த நாகரத்தினம் துர்க்காதரன் (வயது- 16) ஆகியோர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-9)

## தெல்லிப்பழை வைத்தியசாலையில் காலாண்டில் 50,000 பேர் சிகிச்சை

யாழ்ப்பாணம்,ஜூலை 12

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடந்த காலாண்டுப் பகுதியில் மட்டும் 50 ஆயிரத்து 582 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று வைத்திய சாலையின் புள்ளி விவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையான 6 மாதகாலப் பகுதியில் சிகிச்சை பெற்றவர்களில் 36 ஆயிரத்து 673 பேர் வெளிநோயாளர் பிரிவிலும் 3 ஆயிரத்து 767 பேர் நோயாளர் விடுதியிலும் 10 ஆயிரத்து 142 பேர் கிளினிக்குகளிலும் என 50 ஆயிரத்து 582 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

அத்துடன் நாய்க் கடிக்கு இலக்காகி 762 பேர் சிகிச்சை பெற்றதுடன் 547 பேர் விசர் நாய்க் கடிக்கான தடுப்பூசியை ஏற்றிக் கொண்டுள்ளனர்.

இந்தக் காலாண்டுப் பகுதிக்குள் சிகிச்சை பெற்றவர்களில் 4 ஆயிரத்து 160 பேர் நீரிழிவு நோய்ச் சிகிச்சைக்காகவும் 6 ஆயிரத்து 329 பேர் பொது வைத்தியத்துக்காகவும் 2 ஆயிரத்து 973 பேர் பற்சிகிச்சைக்காகவும் 504 பேர் வேறு நோய்களுக்காகவும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களைவிட வீதி விபத்துக்களால் 62 பேர் பாதிப்படைந்து சிகிச்சை பெற்றுள்ளனர். மீளக்குடியமர்வு நடவடிக்கைகளின் பின்னர் தனது சொந்த இடத்தில் இயங்கிவரும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைப் பிரிவு மற்றும் ஏனைய பல்வேறு பிரிவுகள் செயற்படாத நிலையில் உள்ளபோதும் நாளாந்தம் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன. (ம-14-36)

## அழிவில் முளைக்கும் கட்டடம்.....



யாழ்ப்பாணம் பழைய பூங்கா வளாகத்தினுள் அமைக்கப்பட்டுவரும் வடமாகாண ஆளுநர் அலுவலக கட்டடப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. பழைய பூங்காவின் உள்ளே இருக்கும் நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்த மரங்கள் தறிக்கப்பட்டு மேலும் பல கட்டடத் தொகுதிகள் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-135)

## பட்டதாரிகளுக்கு பிரதேச நாள் வெள்ளிக்கிழமை

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இணைந்துள்ள பட்டதாரி பயிலுநர்களுக்கான பிரதேச நாள் பிரதி வெள்ளிக்கிழமை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கிராம அலுவலர்களுக்கு பிரதி புதன்கிழமைகளில் பிரதேச நாள் என்பதைப் போல் கிராம அலுவலர் பிரிவுகளில் பணியாற்றும் பட்டதாரிப் பயிலுநர்களுக்கு பிரதேச நாளாக பிரதி வெள்ளிக்கிழமை அறிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் அனைவரும் பிரதேச செயலகத்துக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

# குடாநாட்டில் உரப்பாவனை அதிகரிப்பே நிலத்தடி நீரின் மாசடைவுக்குக் காரணம்

இயற்கைப் பசளைப் பிரயோகம் இன்று இல்லா தொழிக்கப்பட்டு விட்டது. விவசாயத்துக்குப் பயன்படக் கூடிய கழிவுகள் யாவும் வீதிக்கு வந்து விட்டன.

யாழ்ப்பாணம்,ஜூலை 12

நிலத்தடி நீர் மாசடைவதற்கு காரணம் இன்று அதிகரித்துள்ள உரப்பாவனையே.

இன்று வடமாகாணத்தில் உள்ள எந்தப் பயிர்ச் செய்கையை எடுத்தாலும் அதில் உரம் பயன்படாத எவையும் இல்லை. மரக்கறி பயிர்ச்செய்கையை எடுத்தால் அது உரம் மட்டுமன்றி களை நாசினித் தாக்கமும் அதிகம்.

இவ்வாறு கவலை தெரிவித்தார் வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் த.நடனேந்திரன்.

அராலியில் திவிநெகும திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான விதை தானியம் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இயற்கைப் பசளைப் பிரயோகம் இன்று இல்லா தொழிக்கப்பட்டு விட்டது. விவசாயத்துக்குப் பயன்படக் கூடிய கழிவுகள் யாவும் வீதிக்கு வந்து விட்டன.

இந்தக் கழிவுகளே திண்மக் கழிவுகளாகவும், அபாயகரமான டெங்குக் கழிவுகளாகவும் மாறிவிட்டன.

இந்த நிலையால் டெங்குகள் அதிகரித்து பெரியளவில் நோய்க்காவிகளாக இன்று உருவெடுத்துள்ளன.

யாழ்.மாவட்டத்தில் 16 ஆயிரம் முழுநேர விவசாயிகள் [illegible]. [illegible] பாவனையைத் தொடர்ந்து எமது வளத்தில் உள்ள சேதனப் பசளைகளான ஆட்டெரு, மாட்டெரு, கூட்டெரு, இலை, குழைகள் போன்ற கழிவுகளை பயன்படுத்தி மீண்டும் பழைய விவசாய முறைக்கு முற்று முழுதாக மாறாவிட்டாலும், ஓரளவாவது மாறுவதற்கு முயற்சியுங்கள்.

இதன் மூலம் எம்மைப் பாதுகாப்பதன் ஊடாக எமது நிலத்தடி நீரையும் பாதுகாப்பதற்கு நாம் தயாராக வேண்டும்.

இதற்கு யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 கமநல விவசாய சேவை நிலையங்களும் [illegible] நடவடிக்கையில் இறங்க வேண்டும்.- என்றார். (ம-41)

# எழுதுமட்டுவாழ் மயானத்தில் தகனம் செய்ய அனுமதி இல்லை

### வெடிபொருள் உள்ளமையே காரணம்

தென்மராட்சி,ஜூலை 12


எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரிவில் மக்கள் மீளக் குடியமர்ந்து எட்டு மாதங்களாகியும் அங்குள்ள மயானத்தில் சடலங்கள் தகனம் செய்ய அனுமதி வழங்கப்படவில்லை.

மயான வளாகத்தில் வெடிபொருள்கள் இதுவரை அகற்றப்படாமல் உள்ளதால் மக்கள் அதனைப் பயன்படுத்த முடியவில்லை. இதனால் இந்தப் பிரிவில் இருந்து சடலங்களை வேறு மயானங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டியுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

கடந்த வாரம் எழுதுமட்டுவாழ் விடுவளைப் பகுதியில் மரணமடைந்தவரின் இறுதிக் கிரியைகள் நடைபெற்று சடலம் அரியாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்குள்ள மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

247 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளதால் மயான வளாகத்தில் காணப்படும் வெடிபொருள்களை அகற்றிப் பொதுமக்கள் பாவனைக்கு விடுவதற்கு உரிய அதிகாரி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிங்கப்பூர் பிரதமர் லீ சியன் லூக் மூன்று நாள் அரச பயணமாக இந்தியா வந்துள்ளார். இவருக்கு டில்லி ஜனாதிபதி மாளிகையில் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் பாரம்பரிய வரவேற்பு நடைபெற்றது.

## காந்தியின் கடிதங்களை வாங்கியது இந்தியா

பிரிட்டன் ஏல நிறுவனத்திடம் இருந்து மகாத்மா காந்தியின் கடிதங்களை இந்தியா வாங்கியது. மகாத்மா காந்தி எழுதிய கடிதங்கள் மற்றும் ஆவணங்கள், லண்டனில் உள்ள சூத்பி ஏல நிறுவனத்தால் நேற்று ஏலம் விடப்பட இருந்தன. இந்தக் கடிதங்களில் மகாத்மா காந்தி, தென்னாபிரிக்காவில் வசித்தபோது அவருடைய நண்பரான ஹெர்மன் கல்லன்பச் என்பவருக்கு எழுதிய சர்ச்சைக்குரிய நட்புறவு தொடர்பான கடிதங்களும் அடங்கும்.

இந்தக் கடிதத் தொகுப்புகளை இந்திய அரசு விலைக்கு வாங்க நினைத்தது. அதன்படி, இந்திய கலாசார துறை அமைச்சகத்தைச் சேர்ந்த நிபுணர் குழுவினர் அண்மையில் அந்தக் கடிதத் தொகுப்புகளை ஆய்வு செய்தனர். இந்த ஆய்வின் முடிவில், அந்த கடிதங்கள் நன்றாகப் பாதுகாக்கப்பட வேண்டிய விலைமதிப்பில்லாத சொத்துகள் என்று நிபுணர் குழு கருத்துத் தெரிவித்தது. அவை வரலாற்று ஆராய்ச்சியாளர்களுக்கு அரிய பொக்கிஷமாகத் திகழ்வதாகவும் நிபுணர் குழு கூறியதையடுத்து இந்திய அரசு, காந்தியின் கடிதத் தொகுப்புகளை விலை கொடுத்து வாங்கியுள்ளது. அதேசமயத்தில், இந்திய அரசு அந்தக் கடிதத் தொகுப்பை எவ்வளவு விலைக்கு வாங்கியது என்ற விவரத்தை சூத்பி ஏல நிறுவனம் வெளியிடவில்லை. (வ)

### துணை ஜனாதிபதி தேர்தல்

## அன்சாரிக்கு மம்தா எதிர்ப்பு



கொல்கத்தா, ஜூலை12

துணை ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி சார்பில் ஹமீத் அன்சாரியை நிறுத்துவதற்கு திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி எதிர்ப்புத் தெரிவித்துள் ளதாகக் கூறப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி சார்பில் பிரணாப் முகர்ஜியை நிறுத்துவதற்கும் முதலில் எதிர்ப்புத் தெரிவித்திருந்தவர் மம்தா பானர்ஜி. பிரணாப்புக்குப் பதிலாக அப்துல் கலாம், சோம்நாத் சட்டர்ஜி, மன்மோகன்சிங் ஆகியோரை நிறுத்தலாம் என்றும் கூறியிருந்தார். பின்னர் அப்துல் கலாமை நிறுத்தப் போராடிப் பார்த்தார். ஆனால் அவரது முயற்சி பலிக்கவில்லை. மேலும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்போம் என்பதை தேர்தலுக்கு 72 மணிநேரத்துக்கு முன்பு அறிவிப்பதாகவும் கூறிவிட்டார்.

இந்தநிலையில் துணை ஜனாதிபதித் தேர்தலில் ஹமீத் அன்சாரியையே மீண்டும் நிறுத்தலாம் என்று ஐக்கிய முற்போக்குக் கூட்டணி தீர்மானித்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இது தொடர்பாக பல்வேறு கட்சிகளிடமும் காங்கிரஸ் கட்சி பேசி வருகிறது. ஆனால் திரிணாமுல் காங்கிரஸிடம் பேசப்படவில்லை. அதேநேரத்தில் ஹமீத் அன்சாரி நிறுத்தப்பட்டால் திரிணாமுல் காங்கிரஸ் அவரை ஆதரிக்காது என்றும் கூறப்படுகிறது. கோபால் கிருஷ்ண காந்தி அல்லது கிருஷ்ணா போஸ் ஆகிய இருவரில் ஒருவரை துணை ஜனாதிபதியாக நிறுத்தலாம் என்பது திரிணாமுல் தலைவர் மம்தாவின் நிலைப்பாடாக இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

### வைத்தியரான சுத்திகரிப்பு தொழிலாளி

உத்தரப் பிரதேச மாநிலத்தில் அரசு வைத்தியசாலை ஒன்றில் சுத்திகரிப்புப் பணியாளர் ஒருவரும், மருத்துவப் பணி சாராத ஊழியர் ஒருவரும் வைத்தியர் செய்யும் தையல் மற்றும் ஊசி போடும் வேலைகளைச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற வைத்தியசாலையில் சுத்திகரிப்புத் தொழிலாளியொருவர் சிறுவனொருவனின் காயத்துக்கு தையல் போடுவதைக் காட்டும் காணொலியை தொலைக் காட்சி ஒன்று ஒளிபரப் பியுள்ளது.

இதுதவிர நோயாளர் தங்கும் அறைகளில் உதவியாளராக இருக்கும் ஒருவர் நோயாளிக்கு ஊசி போடுவதாகக் காட்டும் காணொலியும் அந்தத் தொலைக்காட்சியில் வெளியாகியுள்ளது.

இந்தக் காணொலி உத்தரப்பிரதேச மாநிலம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சுத்திகரிப்பு ஊழியர்கள் மருத்துவருக்குரிய வேலைகளைச் செய்ய அனுமதிக்கப்படவில்லை என்று அந்த மருத்துவமனை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.(வ)

# ஈழத் தமிழினம் அழிவதற்கு உதவுகின்றது இந்திய அரசு


## வைகோ காட்டம்

திருவான்மியூர், ஜூலை 12

ஈழத்தில் தமிழ் இனம் அழி வதற்கு பல வழிகளில் இந்தியா உதவிகளைச் செய்து வருகிறது என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார்.

திருவாரூரில் ம.தி.மு.க. கட்சிக் கொடி ஏற்றும் விழாவில் கலந்துகொண்ட வைகோ, செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மத்திய அரசு ஈழத்தமிழர்களுக்குத் எதிராகத் துரோகம் செய்து வருகிறது. இலங்கை இராணுவத்துடன் மத்திய அரசு இரகசியமாக ஒப்பந்தங்கள் செய்துள்ளது. மத்திய அரசு தொடர்ந்து பல உதவிகள் செய்து வருகிறது. யாழ்ப்பாணத்தில் உள்ள விமானப்படைத் தளத்தை இந்தியா தனது சொந்தச் செலவில் பழுது பார்த்துக் கொடுத்துள்ளது.



ஈழத்தில் தமிழினம் அழிவதற்கு பல வழிகளில், உதவிகளைச் செய்து வருகிறது. தற்போது இந்திய விமானப்படைத் தளத்தில் இலங்கைப் படையினருக்கு பயிற்சி அளித்து வருகிறது. இந்தியாவில் இலங்கை விமானப்படை வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கக்கூடாது. தமிழக மக்களுக்கு மத்திய அரசு துரோகம் செய்து வருகிறது. ஈழத்தமிழர்கள் பிரச்சினையில் பல்லாயிரக் கணக்கான குறுந்தகடுகளை பொதுமக்களுக்கு வழங்கியுள்ளோம். உண்மை நிலையை மக்களிடம் எடுத்து வைத்துள்ளோம்.

தமிழகத்தின் நெற்களஞ்சியம் இன்று வறண்ட பூமியாக மாறி வருகிறது. கர்நாடகம் காவிரி நீரை தரமறுக்கிறது. முல்லைப் பெரியாறு பிரச்சினை தீரவில்லை. சிறுவாணி தண்ணீரைத் தடுக்க கேரளா முயற்சிக்கிறது. ஆந்திராவுடன் தண்ணீர் வழங்குவதில் பிரச்சினை உருவாகியுள்ளது. தண்ணீர்ப் பிரச்சினையில் தமது உரிமையைப் பெற முடியாமல் உள்ளது.எனவே, மாநிலங்களில் ஓடும் நதிகளை தேசியமயமாக்கி நதிகளை இணைக்க வேண்டும். எதிர்வரும் செப்ரெம்பர் 15 ஆம்திகதி அண்ணாவின்பிறந்த தினத்தன்று கரூரில் ம.தி.மு.க. மாநில மாநாடு நடைபெறவுள்ளது-என்றார். (வ)


## பிரணாப்புக்கு எதிரான சங்மாவின் மனு நிராகரிப்பு

டில்லி, ஜூலை 12

பிரணாப் முகர்ஜிக்கு எதிராக, பி.ஏ.சங்மா தாக்கல் செய்த முறைப்பாடு மனுவை, தேர்தல் ஆணையம் நிராகரித்தது.

ஜனாதிபதித் தேர்தலில் ஐ.மு., கூட்டணி சார்பில் போட்டியிடும் பிரணாப் முகர்ஜியின் வேட்பு மனுவை நிராகரிக்கக் கோரி, தேர்தல் ஆணையத்திடம், எதிர்க் கட்சி கூட்டணி சார்பில், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும், பி.ஏ.சங்மா, முறைப்பாட்டு மனு ஒன்றை நேற்று முன்தினம் கையளித்தார்.

அதில், 'பிரணாப் முகர்ஜி, ஆதாயம் தரும் பதவியை வகித்துக் கொண்டே, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகிறார். எனவே, அவரது வேட்பு மனுவை நிராகரிப்புச் செய்ய வேண்டும் என்று ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் அதிகாரியிடம் மனு அளித்தேன். ஆனால், தேர்தல் அதிகாரி, பிரணாப் முகர்ஜியின் வேட்பு மனுவை ஏற்பதாக அறிவித்து விட்டார். இதுகுறித்து நடவடிக்கை



எடுக்க வேண்டும்' என்று தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், சங்மாவின் முறைப்பாட்டு மனு குறித்து, தேர்தல் ஆணையம் பிறப்பித்துள்ள உத்தரவில், ''அரசியலமைப்புச் சட்டம் மற்றும் சட்ட விதிமுறைகளை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது, இந்த மனுவை ஏற்க முடியாது. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அனைத்து சந்தேகங்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்தும் மேல் நீதிமன்றம் தான், முடிவு செய்ய வேண்டும். எனவே, சங்மாவின் மனு நிராகரிப்புச் செய்யப்படுகிறது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## அலைக்கற்றை விவகாரத்தில் ராசா தன்னிச்சையாகவே முடிவெடுத்தார்

### தொலைத் தொடர்புத்துறை முன்னாள் செயலாளர் தகவல்

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு ஊழல் விவகாரத்தில் தொலைத் தொடர்புத் துறை அமைச்சராக இருந்த ஆ.ராசாவே தன்னிச்சையாக முடிவை எடுத்தார் என்றும், அதுகுறித்து அவருடன் தனக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்றும் மத்திய தொலைத்தொடர்புத் துறை முன்னாள் செயலர் சித்தார்த் பெஹுரா தெரிவித்தார்.

இதுதொடர்பாக 2 ஜி அலைக்கற்றை விவகாரத்தை விசாரித்துவரும் பி.சி. சாக்கோ தலைமையிலான நாடாளுமன்றக் கூட்டுக் குழு முன்னால் அவர் முன்னிலையாகி உறுப்பினர்களின் கேள்விகளுக்கு விளக்கம் அளித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது:-

ஆ.ராசா மத்திய தொலைத் தொடர்புத்துறை அமைச்சராக இருந்தபோது நான் அத்துறையின் செயலராக இருந்தேன். அதனால் துறை ரீதியாக எடுக்கப்படும்





முடிவுகளைச் செயற்படுத்தும் பொறுப்பு எனக்கு இருந்தது. 2008இல் 2ஜி அலைக்கற்றையை ஒதுக்கீடு செய்யும் முன்பு எந்தெந்த நிறுவனங்களுக்கு எந்த அடிப்படையில் ஒதுக்கீடு மேற்கொள்ளலாம் என்று ஆலோசிக்க முடிவு செய்யப்பட்டது. அலைக்கற்றை ஒதுக்கீட்டை முதலில் வருவோருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் ஒதுக்குவதற்கு முன், தகுதி வாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பம் வரவேற்கப்பட்டது.

அந்த நேரத்தில் 575 விண்ணப் பங்கள் அலைக்கற்றை உரிமம் கோரி வந்தன. அதிலிருந்து தகுதி வாய்ந்த நிறுவனங்களைத் தெரிவு செய்வதற்கான இறுதிநாள் 2008 ஒக்ரோபர் முதலாம் திகதியிலிருந்து செப்ரெம்பர் 25ஆம் திகதிக்கு மாற்றப்பட்டது. இதன் மூலம் விண்ணப்பங்கள் 232 ஆக சுருக்கப்பட்டன.

இந்த விடயத்தில், மொத்தம் வந்த விண்ணப்பங்களின் அடிப்படையில் அலைக்கற்றையை ஒதுக்குவதற்கு முடிவு செய்யலாம் என்று துறைச் செயலர் என்ற ரீதியில் நான் கருதினேன். ஆனால், அமைச்சராக இருந்த ராசா, தகுதி வாய்ந்த நிறுவனங்கள் அடிப்படையில் விண்ணப்பங்களைத் தெரிவு செய்யலாம் என்றார்.

இதில் எங்களுக்குள் கருத்து வேறுபாடு எழுந்தது. ஆனாலும், அமைச்சர் என்ற முறையில் முடிவு எடுப்பதற்கு அவருக்கே அதிகாரம் இருந்தது. அந்த வகையில் அவரே முடிவு எடுத்தார்-என்றார். (வ)

## மேகாலயாவில் நிலநடுக்கம்

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மேகாலயாவில் நேற்றுமுன்தினம் இரவு மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 9.45 மணியளவில் அந்த நில அதிர்வு ஏற்பட்டது. ரிச்டர் அளவுகோலில் 3.5 ஆக பதிவானது. இதனால் கட்டடங்கள் குலுங்கின. இருப்பினும் உயிர்சேதம் குறித்த தகவல்கள் எதுவும் இல்லை.

நிலநடுக்கம் ஏற்பட்ட அந்த சில நிமிடங்கள் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சமடைந்தனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காங்கோ கிளர்ச்சிக் குழுத் தலைவருக்கு

# 14 வருட சிறைவாசம்

### போர்க்குற்றங்களுக்காகத் தீர்ப்பளித்தது சர்வதேச நீதிமன்று


சிறுவர்களைப் படையில் சேர்த்து ஆயுதப் போராட்டம் நடத்தியமைக்கான குற்றச்சாட்டில், காங்கோவின் முன்னாள் ஆயுதக் குழுத் தலைவரான தோமஸ் லுபாங்காவுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

தமது கிளர்ச்சிப் படையில், சிறார்களை 2002, 2003 ஆம் ஆண்டுகளில் அவர் இணைத்தார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தால் ஒருவர் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டு அவருக்குத் தண்டனை வழங்கப்படுவது இதுவே முதல் முறை.

காங்கோ ஜனநாயகக் குடியரசின் வடகிழக்குப் பகுதியில் உள்ள இட்டூரி இனக் குழுவினரிடையே ஏற்பட்ட மோதல்களில் 60 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

ஹேமா பழங்குடி இன ஆயுதக் குழுவான காங்கோலீஸ் தேசியப்பற்றார்கள் ஒன்றியம் எனும் அமைப்புக்கு தோமஸ் லுபாங்கா தலைமையேற்று வந்தார்.



காங்கோ ஜனநாயகக் குடியரசில் பரந்துபட்டளவில் நடைபெற்று வரும் மோதல்களில் ஒரு பகுதியாக இந்த மோதல்கள் இடம்பெற்றன. அங்கு நடைபெற்று வரும் மோதல்களில் இதுவரை 50 லட்சம் பேர் உயிரிழந்துள்ளனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

தற்போதும் காங்கோவில் நடைபெற்றுவரும் சண்டைக்கும் லுபாங்காவின் வழக்குக்கும் நெருங்கிய தொடர்புள்ளது.

அங்கு ஜெனரல் பாஸ்கோ நடாங்கடாவுக்கு விசுவாசமானப் படைகள் நாட்டின் கிழக்கு நகரமான கோமாவை அச்சுறுத்தி வருகின்றனர்.

தனது முன்னாள் கூட்டாளியான லுபாங்கா செய்த அதே குற்றங்களை ஜெனரல் நடாங்கடாவும் செய்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

லுபாங்காவின் வழக்கு விசாரணையின் போது அவர் எப்படி மக்களின் வீடுகளுக்குச் சென்று போர் முயற்சிகளுக்கு ஏதாவது நன்கொடை அளிக்கும்படி கேட்பார் என்று எடுத்துக் கூறப்பட்டது. அதன்படி அவர் மக்களிடம் பணமோ, அல்லது ஒரு பசுவோ, அல்லது தமது கிளர்ச்சிப் படைகளில் போராட ஒரு சிறுவனையோ அளிக்கும்படி கோருவார் என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையின் போது, பத்து வயதுச் சிறார்கள் கூட, ஒரு பயிற்சி முகாமில் இருப்பதை காட்டும் காணொலி திரையிடப்பட்டது.

மற்றொரு காணொலியில் சிறார்கள் அவருக்குப் பாதுகாவலர்களாக இருப்பதும் தெரிந்தது.

2005 ஆம் ஆண்டு ஐ.நாவின் அமைதிகாக்கும் படையினரால், இதர ஆயுததாரிகளுடன் லுபாங்காவும் கைது செய்யப்பட்டார்.


இந்த வழக்கு விசாரணையின் போது, லுபாங்கா நடந்து கொண்டவிதமும், அவர் வழங்கிய ஒத்துழைப்பும் பாராட்டுக்குரியது என்று தீர்ப்பை வழங்கிய நீதிபதி அட்ரியன் ஃபுல்ஃபோர்ட் தெரிவித்தார்.

எனினும் இந்த வழக்கில் வாதிகள் சார்பில் முன்னர் முன்னிலையான சட்டத்தரணி லூயி மொரேனோ ஒகம்போவை நீதிபதி கடுமையாக விமர்சித்தார்.

அவர் தவறுகளைப் புரிந்தார் என்றும், தமது குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்களை வழங்கவில்லை என்றும் நீதிபதி தெரிவித்தார்.

கடந்த ஜூன் மாதம் லுபாங்காவுக்கு 30 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று மொரேனோ ஒகம்போ கோரியிருந்தார். (வ)

## பிரான்ஸில் மாணவர்களை சிறைப்பிடித்த துப்பாக்கி நபர்



பிரான்ஸின் தெற்கு பரிசில் பாடசாலை மாணவர்களைச் சிறைப்பிடித்து வைத்திருந்த நபர் கைது செய்யப்பட்டார்.

பரிசின் புறநகரான விட்ரிசர் சீன் பகுதியில் உள்ள பாடசாலையில் நேற்று முன்தினம் கோடைக்கால கற்றல் வகுப்புகள் நடைபெற்றன.

30 சிறுவர்கள் இந்த பாடசாலையில் இருந்தனர். அப்போது துப்பாக்கியுடன் நுழைந்த மர்ம நபர் மாணவர்களைப் பிடித்து வைத்துக் கொண்டார்.

இந்தத் தகவலை அறிந்த பொலிஸார் பாடசாலையைச் சுற்றி வளைத்து, அவரிடம் பேச்சு நடத்தினர். அதனையடுத்து சில மணி நேரங்களுக்குப் பின்னர் அந்த நபர், பொலிஸிடம் சரணடைந்தார்.

குழந்தைகள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர். இந்த சம்பவத்தில், யாருக்கும் எந்த காயமும் ஏற்படவில்லை.

பிரான்ஸில் தற்போது பாடசாலைகளுக்கு கோடை விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (வ)

## நேட்டோ படைக்கு வீதி திறப்பு பாகிஸ்தானில் கடும் எதிர்ப்பு

நேட்டோ படைக்கு பொருள்கள் எடுத்துச் செல்லும் வீதியை மீண்டும் திறந்து விட பாகிஸ்தான் சம்மதித்தமைக்கு பாகிஸ்தானில் கடும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக தீவிரவாத அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன. ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் எதிர்ப்புப் பேரணிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் தலைநகர் இஸ்லாமாபாத்தில் தீவிரவாதிகள் நேற்றுமுன்தினம் எதிர்ப்புப் பேரணி நடத்தினார். இதற்கு லஸ்கர்- இ- தொய்பா தீவிரவாத அமைப்பின் நிறுவுநர் ஹபீஸ் சயீத் தலைமை தாங்கினார்.

இவர் 2008ஆம் ஆண்டு மும்பையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு காரணகர்த்தாவாகச் செயற்பட்டவர்.

இந்தப் பேரணியில் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். நாடாளுமன்றம் அருகே முடிவடைந்த பேரணியில் சயீத் பேசினார். அப்போது, பாகிஸ்தான் அமெரிக்காவின் அடிமையாக உள்ளது என்றார். பேரணியில் கலந்து கொண்ட தீவிரவாதிகள் சிலர் இராணுவத்தினரின் சீருடை போன்று அணிந்து இருந்தனர். மேலும் துப்பாக்கி போன்ற ஆயுதங்களைப் பகிரங்கமாக எடுத்து வந்தனர். (வ)

## எகிப்தில் கூடியது நாடாளுமன்றம்

### நீதிமன்றத்தின் உத்தரவை மீறி



எகிப்தில் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின்படி கலைக்கப்பட்ட நாடாளுமன்றம், புதிய ஜனாதிபதி முகமது முர்சியின் உத்தரவுப் படி நேற்றுமுன்தினம் கூடியது.

எகிப்தின் ஜனாதிபதியாக 30 ஆண்டுகளாக ஆட்சி செய்த முபாரக், பொது மக்களின் தொடர் போராட்டம் காரணமாக கடந்தாண்டு பதவி விலகினார். அதன் பின் அமைக்கப்பட்ட இடைக்கால அரசை இராணுவ உயர்மட்டக்குழு கவனித்து வந்தது. இதற்கிடையே கடந்த ஜனவரி மாதம் நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்றது.

தெரிவு செய்யப்பட்ட மூன்றில் ஒரு பங்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முறைகேடாக வெற்றி பெற்றதாகக் குற்றச்சாட்டு எழுந்ததால், இராணுவ அரசின் தலைமையில் அமைந்த நீதிமன்றம் கடந்த மாதம் நாடாளுமன்றத்தை கலைக்க உத்தரவிட்டது.

இதனிடையே புதிய ஜனாதிபதி முகமது முர்சி, தேர்தல் நடக்கும் வரை கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்ட வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.

இதையடுத்து இராணுவ உயர் அதிகாரிகள் உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டனர். நாடாளுமன்றத்தைக் கலைக்க தாம் இட்ட உத்தரவுதான் இறுதியானது என்று நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் நீதிமன்ற உத்தரவை மீறி, எகிப்து நாடாளுமன்றம் நேற்று முன்தினம் மீண்டும் கூடியது. நாடாளுமன்ற சபாநாயகர் சாத் இ கதாத்னி, சபையை சிறிது நேரம் நடத்தினார்.

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சபைக்கு வந்திருந்தனர். விடுதலைக் கட்சி மற்றும் இடதுசாரிக் கட்சி உறுப்பினர்கள், இந்தக் கூட்டத் தொடரைப் புறக்கணித்தனர். ஜனாதிபதி முர்சி அரசியலமைப்புக்கு எதிரான புரட்சியை மேற்கொள்வதாக இவர்கள் குற்றம் சாட்டினர். (வ)

## பாக். உள்துறை அமைச்சர் ராஜினாமா

பாகிஸ்தான் உள்துறை அமைச்சரான ரகுமான் மாலிக் நேற்று முன்தினம் தனது பதவியை திடீரென ராஜினாமாச் செய்துள்ளார்.



ரகுமான் மாலிக் பிரிட்டன் மற்றும் பாகிஸ்தானின் குடியுரிமை பெற்றிருந்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டது.

இதுதொடர்பாக பாகிஸ்தானின் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த விவகாரத்தில் நீதிமன்றம் கேட்ட ஆவணத்தை தாக்கல் செய்ய ரகுமான் மறுத்ததால், நீதிமன்றம் அவரை ஒரு மாதத்திற்கு பணிநீக்கம் செய்ய உத்தரவிட்டது.

இந்தநிலையில் மாலிக் தனது பதவியை நேற்றுமுன்தினம் ராஜினாமாச் செய்துள்ளார். (வ)



கெய்ரோவில் உள்ள அதிபர் மாளிகையில் எகிப்து அதிபர் முகமது மூர்சியை, ஜேர்மன் வெளியுறவுத்துறை அமைச்சர் கெய்டோ வெஸ்டர்வெல்லி சந்தித்தார்.

## தியாவ்யூ தீவுகள் அருகே சீனக் கப்பல்கள் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கிறது ஜப்பான்

டோக்கியோ, ஜூலை 12

கிழக்கு சீனக் கடற்பரப்பில் சர்ச்சைக்குரிய தியாவ்யூ தீவுகள் அருகே சீனா ரோந்துக் கப்பல்களை நிறுத்தியுள்ளதற்கு ஜப்பான் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

கிழக்கு சீனக் கடற்பரப்பில் சென்காகு அல்லது தியாவ்யூ என்ற தீவுகளுக்கு ஜப்பானும் சீனாவும் சொந்தம் கொண்டாடுகின்றன. தென்சீனக் கடல் போன்றே கிழக்கு சீனக் கடற்பரப்பும் தமக்கே சொந்தம் என்கிறது சீனா. ஆனால் ஜப்பானோ அது தங்கள் கடற்பரப்பில் இருக்கிறது என்கிறது. எரிவாயு வளம் அதிகம் இருப்பதாகக் கருதப்படும் இந்தத்தீவுகள் மீது இருநாடுகளுமே கண் வைத்திருக்கின்றன. இந்தத் தீவுகள் தற்போது தனியார்வசம் இருப்பதாகவும் அவற்றை தாம் வாங்கப் போவதாகவும் ஜப்பான் அண்மையில் தெரிவித்திருந்தது. இதற்கும் சீனா எதிர்ப்புத் தெரிவித் திருந்தது. இந்தநிலையில் இந்தத்தீவுகள் அருகே சீனாவின் 3 ரோந்து கப்பல்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இதற்கு ஜப்பான் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. (வ)

## மெக்ஸிக்கோவில் துப்பாக்கிச் சண்டை 11 பேர் சாவு

மெக்ஸிக்கோவின் வடமேற்கு மாகாணமான சினோலாவில் நடைபெற்ற கடுமையான துப்பாக்கிச் சண்டையில் குறைந்தது 11 பேர் உயிரிழந்துவிட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. போதைப் பொருள் கடத்தல் கும்பல் இடையே இந்தத் துப்பாக்கிச் சண்டை நிகழ்ந்ததாகத் தெரியவந்துள்ளது.

இரண்டு குழுக்களிடையே நிகழ்ந்த மோதலில் உள்ளே நுழைந்த பொலிஸார் நான்கு பேரைக் கொன்றுவிட்டதாகத் தெரிகிறது. இதில் இரு பொலிஸாருக்கும் காயம் ஏற்பட்டது. இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து இந்தப்பகுதியில் பொலிஸார் தேடுதல் வேட்டையைத் தொடங்கினர். ஹெலிகொப்டர் மூலமும் தேடுதல் வேட்டை நடைபெற்றது.

2006ஆம் ஆண்டிலிருந்து இங்கு நிகழ்ந்து வரும் பல்வேறு மோதல்களில் 50 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகொரிய அதிபருடன் சுற்றும் பெண் யார்?

## அவிழ்ந்தது மர்மம்

வடகொரியாவின் சுப்ரீம் லீடர் கிம் ஜோங் அன்னுடன், அரச பொது நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் பெண் யார் என்று பிரிட்டனின் மெயில் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

அண்மைக்காலமாக வடகொரியாவின் சில உத்தியோகபூர்வ பொதுநிகழ்வுகளில் கிம்ஜோங் அன்னுடன் அழகிய இளம் பெண் ஒருவர் உலா வருவதாக ஊடகங்களில் காட்டுத் தீயாகத் தகவல் பரவியது.

இருவரும் இணைந்து நிகழ்வுகளில் பங்குகொள்ளும் புகைப் படங்களும் வெளி வந்த போதும் வடகொரிய அரசு அந்தப் பெண்மணி யாரென்பதை அறிவிக்காமல் மௌனம் காத்து வந்தது. இந்தநிலையில் மெயில் இணையத்தளம் நேற்று முன்தினம் வெளியிட்ட தகவலில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:-



> இருவரும் இணைந்து நிகழ்வுகளில் பங்குகொள்ளும் புகைப் படங்களும் வெளி வந்தபோதும் வட கொரிய அரசு அந்தப் பெண்மணி யாரென்பதை அறிவிக்காமல் மௌனம் காத்து வந்தது.

சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் கிம் ஜோங் அன், சுவிற்ஸர்லாந்தின் தனியார் கல்லூரியில் கல்வி கற்றுக் கொண்டிருந்தபோது அவருடன் சுற்றித் திரிந்தவராம் ஹியோன் சோங் வொல் எனும் இந்தப்பெண்.

இவர் திருமணமான ஒரு பொப் இசை நட்சத்திரம் இவரும், கிம் ஜோங் அன்னும் ஜோடியாக சுற்றுவதைக் கேள்விப்பட்ட கிம்ஜோங் அன்னின் தந்தையார் கிம் ஜோங் II, அவரது ஆட்சிக் காலத்தின் போது இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்கக்கூடாதென 10 வருடங்களுக்கு பிரித்து வைத்து விட்டாராம்.

தந்தையார் அண்மையில் காலமானதை அடுத்து, ஆட்சிப் பொறுப்பை கிம் ஜோங் அன் ஏற்றுக்கொண்டதன் பின்னர், இந்தப் பெண்ணை கூடவே அழைத்துச் சுற்ற ஆரம்பித்து விட்டாராம் - என்று அந்த இணையம் குறிப்பிட்டுள்ளது. (வ)

# சிகிச்சை பெற்ற அகதியை வீதியில் தவிக்கவிட்ட பொலிஸாருக்கு சிறை

## இஸ்ரேல் நீதிமன்றம் தீர்ப்பு

இஸ்ரேலில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த அகதியை, பிரதான வீதியில் விட்டு விட்டு வந்த பொலிஸாருக்குச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

ஒமர் அபு ஜரிபான் என்பவர் கடந்த 2008ஆம் ஆண்டு காஸா பகுதி வழியாக இஸ்ரேலுக்குள் நுழைந்துள்ளார்.

கார் ஒன்றைத் திருடி அவர் இஸ்ரேலுக்குள் நுழைந்துள்ளார். அவர் பயணம் செய்த அந்தக் கார் விபத்துக்குள்ளானது. இதையடுத்து அவர் ஷெபா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எலும்பு முறிவு மற்றும் நரம்பு பாதிப்புக்குள்ளான அவரை சிறையில் வைப்பதா அல்லது விடுவிப்பதா என்ற குழப்பத்தில் பொலிஸார் இருந்துள்ளனர்.

சிறைச்சாலை நிரம்பி வழிந்ததால் அவரை பிரதான நெடுஞ் சாலையில் கொண்டு சென்றுவிட்டுவிட்டு வந்துள்ளனர். இராணுவ முகாமை அண்மித்து அமைந்துள்ள இந்த வீதியில் இரண்டு நாள்களுக்குப் பின்னர் அவரது சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர். உரிய மருத்துவ சிசிச்சை இல்லாமலும், வயிற்றுப்போக்குக் காரணமாகவும் அவர் உயிரிழந்தது தெரியவந்தது.

இதையடுத்து அவரை வீதியில் விட்டுவிட்டு வந்த பொலிஸ் அதிகாரி மீது வழக்குத் தொடரப்பட்டது. ஒருவரது உயிரிழப்புக்குக் காரணமாக இருந்தது பொலிஸ் அதிகாரியின் அலட்சியப் போக்கே என்று நீதிபதிகள் தங்களது தீர்ப்பில் குறிப்பிட்டனர். பொலிஸ் அதிகாரியின் இந்தச் செயல் பொறுப்பற்றது என்று தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

# புலம்பெயர் அகதிகளை கனடாவில் சிறையில் அடைக்கும் சட்டத்தில் திருத்தம்

டொரண்டோ, ஜூலை 12

புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகளை சிறையில் அடைப்பது தொடர்பான கனேடியச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்படவுள்ளன.

கனடாவில் அரச அகதிகளின் ஏற்பும், மறுப்பும் குறித்து இ - 31 என்ற புதிய சட்டத்தை கடந்த மாதம் அறிமுகம் செய்தது. புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட போது சில விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அதில், புகலிடம் தேடி வருவோரை சிறையில் அடைப்பது அவர்களது மன வேதனையை அதிகமாக்கி மன நலத்தைக் கெடுக்கும் என்று எச்சரிக்கப்பட்டிருந்தது.

இதேபோல் அகதியாக ஏற்கப்பட்ட தமது குடும்பத்தை அழைத்து வருவதற்கு ஐந்து ஆண்டுகளாவது வேண்டும் என்ற நிபந்தனையும், தனியாக வாழும் அந்த அகதியின் மன நலத்துக்குக் கேடு விளைவிக்கும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் 16 வயதுக்குக் குறைவான பிள்ளைகளைத் தாய்மாரிடமிருந்து பிரித்து வைப்பதும் அவர்களுக்குத் தீமை விளைவிப்பதாகும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து சட்டத்தில் தற்போது சில திருத்தங்கள் கொண்டுவரப்பட உள்ளன. முதலில், ஒரு வருடகாலம் வரை அகதிகளை அடைத்து வந்த நிலையை மாற்றி இனி ஆறு மாதம் மட்டுமே அடைக்கப்படுவர். அகதிகளின் மருத்துவ நலம் குறித்துப் புதிய கொள்கை அறிமுகமாகிறது. மருந்து, பல் பாதுகாப்பு, கண் பாதுகாப்பு போன்றவை கவனத்தில் எடுக்கப்பட்டு மாற்றம் செய்யப்பட உள்ளது. (வ)

# திட்டிய தந்தையை சுட்டுக்கொன்றார் மகள்

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் தந்தை திட்டியதால் கோபமடைந்த இளம் பெண் அவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்துள்ளார். இந்தச் சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. பஞ்சாப்பின் ஃபைஸ்லாபாத் எனும் பகுதியில் உள்ள பிலால் நகரைச் சேர்ந்தவர் முகமது ஷபீர். இவரது மகள் பக்கத்து வீட்டில் வசித்து வந்த முகமது பஷாரத் என்ற நபருடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தார்.

இதனால், அந்த இளைஞருடன் பேச வேண்டாம், அவரது நட்பு வேண்டாம் என்று தந்தை ஷபீர் கண் டித்துள்ளார். இதனால் கோபமடைந்த அந்தப்பெண் தந்தை தூங்கிக் கொண்டிருந்தபோது துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுள்ளார்.

துப்பாக்கிச் சத்தம்கேட்டு அயலில் உள்ளவர்கள் பொலிஸுக்குத் தகவல் கொடுத்தனர். இதையடுத்து பொலிஸார் வீட்டுக்குள் நுழைந்து விசாரித்ததில், தனது குற்றத்தை அவர் ஒப்புக் கொண்டுள்ளார். அந்தப் பெண்ணுக்கு துப்பாக்கியை வாங்கித் தந்தது முகமது பஷாரத் என்பது விசாரணையில் தெரியவந்தது. இதையடுத்து அவர்கள் இருவர்மீதும் கொலை வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. (வ)

**கோழிக்குஞ்சு விற்பனை**

தடுப்பு மருந்து போடப்பட்ட "A" தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர், #19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம், தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி, தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை, தொ.பே : 077 8996085

(20259)(6-7-8)

**பணிப்பெண் தேவை**

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய தேக ஆரோக்கியமுள்ள பொறுப்புக்களற்ற 55 வயதுக்கு மேற்படாத பணிப்பெண் தேவை.

சம்பளம் - ரூபா 10,000/=

தொடர்பு: 077 082 4931

(20288)(5-6)

**தவறிவிட்டது**

கணேசன் ஸ்ரீதரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (862910095 V) மற்றும் சிறிய தொகை பணத்துடன் கிளிநொச்சிக்கும் பூநரிக்கும் இடையில் தவறிவிட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் இளமுருகன் மோட்டார் கராஜ் போக்கு சந்தி, எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக கொடுத்து உதவவும். தொடர்பு: 077 4534348

(19281)(45,6,7)




(சி/1408)(6-8)

**முதலாம் ஆண்டு நீங்காத நினைவலைகள்**

மலர்வு 06 ★ 03 ★ 1922

உதிர்வு 24 ★ 06 ★ 2011



**திருமதி யோகரத்தினம் செல்லையா**

அன்பும் பாசமும் நிறைந்த எம் அம்மாவே
ஆண்டொன்று ஆனதம்மா உங்கள்
அழகு முகங்கண்டு.
ஆறவில்லை அம்மா நம்மிதயம்
அகலவில்லை அம்மா நம் சோகம்
சீரோடும் சிறப்போடும் செழிப்புற வாழ்ந்து
நன்மக்கட் செல்வங்களை-
நலமுடன் பெற்றுப் பண்புடன் வளர்த்துப்
பார்போற்ற வழிதந்த எம் பாசத்தின் திருவுருவே
'பாபு அம்மா' என்றே பாசக் கொழுந்துகளாம்
பேரக் குழந்தைகள் அழைக்கும் போது
அணைக்கின்ற பேரன்புப் பெட்டகமே.
மறப்போமா உங்களை?
பகலும் இரவும் எம் இதயத்தில்
அகல்விளக்காய் ஒளிர்ந்து ஆசி தாருங்கள் அம்மா

என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்.....

சுதுமலை மத்தி, மானிப்பாய். குடும்பத்தினர்

(20228)(5-6-7)

**விற்பனை**

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் (மேசை, கதிரை, வாங்கு, சோக் கேஸ்) இன்னும் பல.
வெஸ்பா ஸ்கூட்டர்(VESPA SCOOTER)யாவும் விற்பனைக்குண்டு.

99, பலாலி வீதி,
(இலுப்பையடி சந்திக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

(20233)(5-6-7)

**தையல் வகுப்பு**

மகளிருக்கான காலை மாலை நேர
தையல் பயிற்சி
வகுப்புகள்

குழந்தைகள் சட்டை, சாறி பிளவுஸ், சுடிதார், பாவாடை சட்டை உட்பட சகலவிதமான ஆடைகளும் வெட்டித் தைப்பதற்கு பயிற்றுவிக்கப்படும்

517, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(ஓட்டுமடத்துக்கு இடையில்)
தொடர்பு : 077 4150883

(20236)(45,6,7)

**ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி**

மலர்வு 25 * 07 * 1923

உதிர்வு 12 * 07 * 2006



**REV. SR. M. ANTONINA A.C.**

விண்ணகம் தானடைந்து ஆண்டுகள் ஆறாயினும்
மண்ணகத்தார் எம் மனதில் நிறைவாக வீற்றுள்ளீர்.
நீர் பயணித்த பாதைகளும் அதில் அடைந்த சிறப்புகளும்
யார் என்றும் பாராது ஆர்ப்பரிப்புகள் எதுவுமின்றி
பார் சிறக்க ஆற்றிய அளப்பரிய பணிகளும்
யார்தான் இவரோ என ஏங்க வைத்துச் சென்றீரே.

புலோலி குடும்பத்தினர்

(20220)(5-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப்பு வரும் நேரம்

(24)

இந்தச் செயல்கள் அவன் வாழ்க்கையில் ஆரம்ப காலத்தில் திட்டமிட்ட உயர்ந்த நோக்கத்தின் படியே அமைந்திருந்தன.

**ஓர் உயர்ந்த நோக்கத்தின் ஊக்கமளிப்பு**

***நீ கேட்க முடியாத ஒரு குரலை நான் கேட்கிறேன்,***
***அது சொல்கிறது நான் பின் தங்கி விடக் கூடாதென,***
***நீ காண முடியாத ஒரு கையை நான் காண்கிறேன்,***
***அது என்னைப் பொருத்தமான இடத்திற்கு***
***வழி காட்டுகிறது.***

-டிக்கெல்

புகழ்பெற்ற மருத்துவர் ஜார்ஜ் எஃப் ஷ்ராடி 19 வயதுடையவராக இருந்தபோது, தன் பணக்காரத் தந்தையிடம் தான் விடுமுறை நாள்களில் வெளியே சென்று கொஞ்சம் பணம் சம்பாதிக்க விரும்புவதாகச் சொன்னார். அவர் மகனின் மனோதிடத்தைக் குலைக்க முயற்சி செய்தார். ஒருநாள் அந்த இளைஞன் டக்ளஸ் மெர்க்கண்டைல் ஏஜன்சி நிறுவனத்திற்குச் சென்று திரு டக்ளஸ் அவர்களைச் சந்தித்துக் கேட்டார். நான் ஏதாவது வேலை செய்ய விரும்புகிறேன். எனக்கு வேலை வேண்டும்.



டக்ளஸ் பதில் சொன்னார், 'உனக்குக் கொடுக்கக்கூடிய வேலை எதுவும் எங்களிடம் இல்லை.' இளைஞன் ஷ்ராடி சொன்னான், 'உங்களிடம் உள்ளது.' அந்தச் சமயத்தில் அவன் வரி வடிவில் ஓவியம் வரைபவனாக இருந்தான். தன் பேனாவினால் கோடுகளைப் போட்டு அழகான அன்னப் பறவைப் படத்தை வரைந்து காட்டினான். அதைப் பார்த்த டக்ளஸ் ஆச்சரியத்துடன் கேட்டார்! 'நீ வரைந்ததா?' ஆம் என்றான் அவன். டக்ளஸ் சொன்னார் 'சரி நாங்கள் வாரத்திற்கு ஐந்து டொலர்கள் தருவோம். அதிகமாக வேலை செய்யும் நேரத்திற்கு மணிக்கு 25 செண்ட்டுகள் தருவோம்.' அந்த இளைஞன் ஷ்ராடி 'நான் ஒப்புக் கொள்கிறேன் என்றான். நாளைக்கு வா' என்றார். 'இப்போதே ஆரம்பிப்பதற்கு ஏதாவது மறுப்பு உள்ளதா?' என்று கேட்டான் அவன். 'இல்லை மனேஜர், இந்தச் சிறுவனுக்கு ஒரு மேசை கொடுங்கள்' என்றார் டக்ளஸ்.

டக்ளஸ் வெகுவிரைவில் ஷ்ராடி நிமிடத்திற்கு 160 சொற்கள் வேகத்தில் சுருக்கெழுத்து எழுதக்கூடியவன் என்பதைக் கண்டு பிடித்தார். ஒரு நாள் அவனிடம் ஒரு பத்திரிகையிலிருந்து ஒரு கட்டுரையைப் படித்து அவனை எழுதச் சொல்லிச் சோதித்துப் பார்த்தார். உடனே அவனுக்கு செயலாளர் வேலை கொடுத்தார். அவன் அதை ஏற்க மறுத்துவிட்டு, தான் மருத்துவராக மாற வேண்டும் எனச் சொன்னான். டக்ளஸ் அவனை அதைரியப் படுத்தும் குரலில் சொன்னார். உன் மூளை வியாபாரம் செய்வதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. உன்னால் ஒரு போதும் மருத்துவராக முடியாது. இருபது வருடங்களுக்கு பிறகு டக்ளஸ் சிகிச்சை பெறுவதற்காக டாக்டர் ஷ்ராடியின் மருத்துவ அலுவலகத்திற்குச் சென்றார்.

முங்கர் கூறுகிறார், வெற்றி பெறுவதற்கு ஒரு தெளிவான உறுதியான நோக்கத்தைத் தவிர, வேறு எந்த வழியும் இல்லை. ஒரு நோக்கம் என்பது குணம், கலாசாரம், அந்தஸ்து, எதையும் அடையும் திறமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது ஆகும்.

**சரியான விலை கொடுத்தல்**

நீங்கள் அங்கே உள்ள ஏதாவது ஒரு தொழிலில் ஈடுபட்டிருந்தால், அதன் பெரும் பகுதிக்குச் சரியான விலையைக் கொடுத்துப் பயன்படுத்திக் கொள்வீர்கள். அந்த விலை என்பது நேர்மையான, அக்கறைமிக்க, அறிவாற்றலுடன் கூடிய கடின உழைப்பேயாகும். வாழ்க்கை என்பது போராட்டத்தைத் தவிர வேறு யாது? ஹீப்ரு பழமொழியின்படி, தீவிர உணர்வுள்ளவர்கள் அதைப் பலாத்காரமாக எடுத்துக் கொள்கின்றனர்.

ஒரு வியாபாரி அவரிடம் வேலை செய்ய மனுக் கொடுத்த ஒரு வாலிபனைப் பற்றிச் சொன்னார், அவன் நேர்மையானவன். பதவிக்கு ஓரளவு பொருத்தமானவன். ஆனால் கடந்த சில வாரங்களில், நான் வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு வரும் ஒவ்வொரு நாளும், அவன் தெரு முனையில் சில சோம்பேறிகளுடன் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தேன். தெரு முனையில் சோம்பேறித்தனமாக புகை பிடித்துக் கொண்டு தன்னை விளம்பரப்படுத்தும் ஒரு வாலிபனை வேலைக்கு வைத்துக் கொள்ள விரும்பவில்லை. அவன் ஓய்வு நேரத்தில் அதிக முக்கியமான தொழிலில் இருக்க வேண்டும்.

ஹென்றி ஜே. ரேமாண்டு டிரிப்யூன் பத்திரிகையின் ஹோரேஸ் கிரீலியுடன் இணை ஆசிரியராக வேலை செய்த சமயத்தில், ஆரம்பத்தில் வாரத்திற்கு எட்டு டொலர்கள் சம்பாதித்தார். ஆனாலும் கூட, அவர் சராசரியாக ஒரு நாளில் 13 அல்லது 14 மணி நேரம் வேலை செய்தார். ரேமாண்டு நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையின் ஆசிரியராக மாறியபோது, அவரது எழுத்துக்கள் **முதல் பக்கத்தில் 12 பத்திகளுக்கும் அதிகமாக அச்சிடப்பட்டன. டேனியல் வெப் ஸ்டர் மறைந்தவுடன், அவரைப் பற்றி ரேமாண்டு 12 மணி நேரத்தில் 15 பத்திக் கட்டுரை எழுதினார்.**

**லார்டு கேம்பல் மாணவனாக இருந்தபோது எழுதினார். வெற்றிபெறும் வாய்ப்பு பெற, நான் என் உழைப்பில் மற்றவர்களைவிட உறுதியாக இருக்க வேண்டும்.**

**-ஓரிசன் ஸ்வெட் மார்டன்-** **(தொடரும்)**

# தமது பிள்ளைகள் கல்வியில் சிறக்க பெற்றோர் அக்கறை செலுத்த வேண்டும்

## வலி. வடக்கு பிரதேச சபையின் துணைத் தலைவர் தெரிவிப்பு

இளம் சமூகம் கலாசார சீரழிவுக்கு முகம் கொடுத்து வருகிறது. இதனைத் தடுக்க வேண்டிய பொறுப்பு எல்லோருக்கும் இருக்கிறது.

யாழ்ப்பாணம், ஜூலை 12

''கற்றல் கை மண் அளவு கல்லாதது உலகளவு'' என்ற தத்துவத்துக்கு ஏற்ப மாணவர்கள் விடா முயற்சியுடன் கல்வியைக் கற்க வேண்டும். கல்வியில் பின்தங்கி இருப்பதை மாணவர்கள் உணராது இருப்பது தான் வேதனை தரும் விடயமாகும் என்று வலி.வடக்கு பிரதேச சபையின் துணைத் தலைவர் ச.சஜீவன் தெரிவித்தார்.

வலி. வடக்கில் மீளக்குடியமர்ந்த பின்தங்கிய கூவில் கிராமத்தில் உள்ள 68 மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்காக சஜீவன் தமது நிதி மூலம் கற்றல் உபகரணங்களை வழங்கினார். இந்த நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை கூவில் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் தலைமையில் அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் நடைபெற்றது. நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சஜீவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இளம் சமூகம் கலாசார சீரழிவுக்கு முகம் கொடுத்து வருகிறது. இதனைத்தடுக்க வேண்டிய பொறுப்பு எல்லோருக்கும் இருக்கிறது. எனவே தான் கல்வியில் பின்தங்கிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்க முன்வந்துள்ளோம்.

மாணவர்கள் சிரத்தையுடன் கல்வி கற்று முன்னேற வேண்டும். அப்பொழுது தான் கல்வியில் முன்னேறிய சமூகமாக மாற முடியும். இதன் மூலம் தான் எமது சமூகம் பொருளாதார மட்டத்தில் உயர்வு நிலையை அடைய முடியும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகள் விடயத்தில் அக்கறையுடன் செயற்பட வேண்டும் இதன் மூலமே பிள்ளைகளை ஒரு கட்டுக்கோப்பு ஒழுங்குக்குள் கொண்டுவர முடியும். கல்வியில் ஆசிரியர் பார்த்துக் கொள்வார் என்று தமது பிள்ளைகளை கண்டும் காணாமல் விடுவது அவர்கள் வழிமாறிச் செல்வதற்கான உந்துதலாக அமைகிறது. எனவே மாணவர் விடயத்தில் பெற்றோர் அக்கறை எடுத்து அவர்களின் கல்வியிலும், உடல் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்த வேண்டும். அப்பொழுது தான் எமது சமூகத்தில் கல்வியாளர்களை உருவாக்க முடியும். இதன் மூலமே எமது பிரதேசம் பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண முடியும்.

மாணவர்களின் பெற்றோர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது பிள்ளைகளை எப்பாடுபட்டாலும் கல்வியில் சிறந்தோர்களாக வளர்ப்பதுதான் உங்களுடைய முதலீடாக சொத்தாக இருக்க வேண்டும்.-என்றார். (எ)



வலி.வடக்கில் மீளக்குடியமர்ந்த பின்தங்கிய கூவில் கிராமத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வலி.வடக்கின் பிரதேச சபையின் உபதலைவர் சஜீவன் வழங்குகின்றார். (எ)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜூலை 12

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் புதிய நெறியாளர் குழுத் தேர்தல் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தலைமையில் நடைபெற்றது.

புதிய பணிப்பாளர் சபையில் அங்கம் வகிப்பவர்களாக தெரிவு செய்யப்பட்டோர். தலைவர்- கா.விக்னேஸ்வரன், உபதலைவர்- ம.சற்குணசிங்கம், ஏனைய உறுப்பினர்களாக மு.சிதம்பரப்பிள்ளை, வ.முத்துராசா, சி.ராஜாராம், இ.வஜிகரன், ப.வேதநாயகி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (எ-)

# பேச்சுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 12

90 ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே பல்வேறு வகையான போட்டிகளை யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை நடத்தியுள்ளது. அதில் பேச்சுப் போட்டியின் முடிவுகள் வருமாறு:-

**கீழ்ப்பிரிவு**

செ.இளங்கதிர் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), அ.அசாரிகா (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ச.திவ்யா (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

**மத்திய பிரிவு**

க.தர்சிகா (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ச.சங்கர்ஜி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பு.ரவீந்திரன் (யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயம்).

**மேற்பிரிவு**

உ.சாந்திகா (கொக்குவில் இந்துக் கல்லூரி), ப.கதிர்தர்சினி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), சு.டினேஸ் (இளவாலை ஹென்றிஸ்).

**அதி மேற் பிரிவு**

அ.சாம்பவி (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை), க.ஜஸ்மிதா (கொக்குவில் இந்துக் கல்லூரி), சு.ரொபின்ஸ் சுபில்டன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி). (எ-13)

# ஆங்கில தினப் போட்டி முடிவுகள்

காரைநகர் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட ஆங்கில தினப் போட்டி முடிவுகள் வெளியாகி உள்ளன. இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

**தரம்-9**

**முதலாம் இடம் - விதுசா சிவபாதம் (கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி.), இரண்டாம் இடம்- வேதாரணி [illegible] (யாழ்ரன் கல்லூரி), மூன்றாம் இடம்- [illegible]வரி செந்தில்நாதன் (யாழ்ரன் கல்லூரி)**

தரம்-10

முதலாம் இடம் - ஆரணி தர்மலிங்கம் (யாழ்ரன் கல்லூரி), இரண்டாம் இடம்- காயத்திரி ஆனந்தராசா (யாழ்ரன் கல்லூரி), மூன்றாம் இடம்- **லிதிஜா சண்முகசுந்தரம் (கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி.)**

**தரம்-11**

**முதலாம் இடம் - துஷ்யந்தினி அரியபுத்திரன் (கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி.), இரண்டாம் இடம்- தோஜனா தேவராஜா (கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி.), மூன்றாம்** இடம்-சிவகுமாரன் சர்வாணன் (யாழ்ரன் கல்லூரி).

தரம்-12

முதலாம் இடம்- சுப்பிரமணியம் செந்தூரன் (யாழ்ரன் கல்லூரி), இரண்டாம் இடம்- பானுஜா கன**கரட்ணம் (கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி.), மூன்றாம் இடம்-சுஜீவா அற்புதராஜா (கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி.)**

**தரம்-13**

**முதலாம் இடம்- ஜமுனா அரியபுத்திரன் (கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம.வி.)** **(முற்றும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ–9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## மீண்டும் மீண்டும் கறுப்பாகும் ஜூலைகள்

வவுனியா சிறையில் நடந்த போராட்டத்தைத் தொடர்ந்து தமிழ் அரசியல் கைதிகள் மிக மோசமாகத் தாக்கப்பட்டதில் ஒருவர் பின்னர் உயிரிழந்தார். இறந்து போன கணேசன் நிமலரூபனின் சாவுக்குக் காரணம் அரசே என்று குற்றஞ்சாட்டும் எதிர்க் கட்சிகளும் மனித உரிமை ஆர்வலர்களும் நேற்றுமுன்தினம் கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

சிறையில் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் மீதான தாக்குதல்களை நிறுத்த வலியுறுத்தியும் நிமலரூபனின் உடலத்தை அவரது தாயாரிடம் கையளிக்க வலியுறுத்தியும் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் கவனத்துக்குரியது.

நிமலரூபனின் கை, கால்கள் அடித்து முறிக்கப்பட்டிருந்தன என்று அவரது உடலத்தை நேரில் பார்த்த தாயார் கூறியிருக்கின்றார். தனது மகன் அதிகாரிகளால் அடித்தே கொல்லப்பட்டுள்ளார் என்றும் அவர் நம்புகின்றார்.

எனினும் அது தொடர்பில் நீதியான விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்றுகூட இப்போது கேட்கும் நிலையில் அவர் இல்லை. ''என் ஒரேயொரு மகனின் திருமணத்தை விமர்சையாக நடத்த விரும்பியிருந்தேன். அதுதான் முடியாமல் போய்விட்டது. இப்போது அவனது இறுதிச் சடங்கையாவது நடத்த அனுமதியுங்கள்'' என்பதே அந்த அப்பாவித் தாயின் கதறல்.

அதிகாரிகளின் செவிட்டுக் காதுகளுக்கு இந்தக் கதறல் கேட்டதாகத் தெரியவில்லை. கடந்த 4ஆம் திகதி உயிரிழந்த நிமலரூபனின் உடலம் இன்னமும் அந்தத் தாயிடம் கையளிக்கப்படவில்லை.

வவுனியாவுக்கு உடலத்தை எடுத்துச் சென்றால் அங்கு அதை மையப்படுத்தி அரசுக்கு எதிராக ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் என்பன நடந்துவிடலாம் என்று அதிகாரிகள் அச்சப்படுகிறார்கள். அதனாலேயே உடலத்தைக் கையளிக்கும் விடயத்தை தேசிய பாதுகாப்புடன் அவர்கள் தொடர்புபடுத்துகிறார்கள்.

நிமலரூபனின் உடலத்தைக் கையளிக்க மறுப்பதற்கு அது மட்டுமே காரணமல்ல என்பதும் வெளிப்படையான உண்மை. அவர் மாரடைப்பால் கொல்லப்பட்டார் என்று அரசு சொல்லும் கதை பொய்யாகி, அவர் அடித்தே கொல்லப்பட்டார் என்பது நிரூபணமாகிவிடக்கூடும் என்ற அச்சமும் உடலம் கையளிக்கப்படாமைக்கு மிகப் பெரும் காரணம். நிமலரூபனின் உடல்கூற்றுப் பரிசோதனை அறிக்கை இன்னமும் வெளியிடப்படாமையும் இதனை உறுதிப்படுத்துகிறது.

தமிழனாகப் இருப்பதற்கும் வாழ்வதற்கும் இருந்த உரிமைகள் பறிபோனது போக, இப்போது தமிழனாக தமிழ் மண்ணில் இறப்பதற்கான வாய்ப்பும் மறுக்கப்பட்டுவிட்ட நிலைமை ஏற்பட்டுள்ளது.

எல்லாமும் இந்தக் ஜூலை மாதத்திலேயே நடக்கின்றன. 29 வருடங்களுக்கு முன்னர் குட்டிமணி, தங்கத்துரை ஆகியோரும் வேறு 52 தமிழ்க் கைதிகளும் இவ்வாறே வெலிக்கடைச் சிறையில் படுகொலை செய்யப்பட்டார்கள். அப்போதும் கொலையுண்டவர்களுக்கும் உறவினர்களுக்கும் இலங்கை என்கிற நாட்டில் நீதி கிடைக்கவில்லை.

மீண்டும் இப்போது நிமலரூபனின் இறப்பிலும் அதே கதை தொடர்கிறது. ஜூலை மாதங்கள் தமிழர்களுக்குத் தொடர்ந்தும் துயரங்களையே சுமந்து வருகின்றன. மீண்டும் மீண்டும் கறுப்பு ஜூலைகள் வருகின்றன. 83 கறுப்பு ஜூலையை மறந்துவிடாதபடிக்கு புதிய புதிய ஜூலைச் சம்பவங்கள் அரங்கேறிக் கொண்டே இருக்கின்றன.

# தரமான கல்விக்கு ஆசிரியர்கள் தொடர்ந்து பயிற்றப்பட வேண்டும்

**நடேசு தயாளன்**

கல்வியியலாளரின் தகுதியானது மாணவர் அடைவு மட்டங்களில் தாக்கம் செலுத்துவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உயர் தரத்திலான வாண்மை விருத்தி கல்வியியலாளரின் அறிவு, திறன், மனப்பாங்கு, நம்பிக்கை என்பவற்றில் தாக்கத்தைச் செலுத்தி மாணவரது கற்கும் நிலையில் உயர் விளைவைப் பெற்றுக் கொடுக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆசிரியர் ஒருவர் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படையான தொழில்சார் திறன்களையும் அறிவுசார் உள்ளடக்கத்தையும் பெற்றுவிட்டால் மட்டும் அவர் தொழிலில் வெற்றி பெற்றவர் எனக் கொள்ளமுடியாது. ஆசிரியத் தொழிலானது தொடர்ச்சியான சவால்களைக் கொண்டுள்ளது. இந்தச் சவால்களை வெற்றி கொள்வதிலேயே ஆசிரியரின் வாண்மை ரீதியான இயலுமை நிலை வெளிப்படுத்தப்படும்.

வாண்மையுடைய தொழிலாக ஆசிரியத் தொழிலை ஆக்கிக்கொள்வதன் மூலமே அவரின் தொழில் வெற்றி உறுதிப்படுத்தப்படும் அத்தோடு கல்வியின் இலக்குகளும் எட்டப்படும். ஆசிரியரானவர் வகுப்பறை, பாடசாலை, கல்வி அலுவலகம், சமூகம், அரசு, சட்டம், கல்வி தொடர்பான உலகளாவிய எண்ணக்கருக்கள் என்ற பல்வேறு நிலைமைகளுக்குள் தனது தொழிலை மேற்கொண்டு வருகின்றார். எனவே இந்த நிலைமைகளுக்குள் தனது தொழிலினை முன்னெடுத்துச் செல்வதற்கு அவர் வாண்மை மிக்கவராக இருத்தல் இன்றியமையாததாகும்.

வாண்மைத் தொழிலானது சில கட்டுப்பாடுகளையும் சிறப்புரிமைகளையும் கொண்டிருக்கும். அத்துடன் வாண்மைத் தொழிலானது அதன் அங்கத்தவர்களை தேர்ச்சியற்ற நடைமுறைகளிலிருந்து பாதுகாப்பதுடன் தனது அங்கத்தவர்கள் நீதியற்ற முறையில் கையாளப்படுவதையும் தடுக்கும். பினரமியர் (1987) என்பவரின் கருத்துப்படி, கல்வியை முன்னேற்றுவதற்கான எந்தச் செயற்பாடும் ஆசிரியரை மையப்படுத்தியதாகவே அமைய வேண்டும். மாணவனின் வெற்றி ஆசிரியரது கற்பித்தலிலேயே மையங்கொண்டுள்ளது. என்பதே இதன் அர்த்தம். இதன் காரணமாக ஆசிரியர்கள் ஆகப் பிந்திய மிக நவீன கற்பித்தல் நுட்பங்கள் தெரிந்தவர்களாக விளங்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தரமான வாண்மை அபிவிருத்தியானது கல்வியியலாளனது ஆற்றலை அதிகரிப்பதோடு கற்பிக்கும் திறனிலும் தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருக்கும். வாண்மை அபிவிருத்தியானது திறன்கள், அறிவு என்பனவற்றை அடைவதன் மூலம் தனியாள் அபிவிருத்தியையும் அவரது தொழில்சார் அபிவிருத்தியையும் மேம்படுத்துவதாகவும் இருக்கும்.

ஆசிரியர்கள், பாதுகாப்பு அலுவலர்கள், சுகாதாரத் துறை சார்ந்தோர், சட்டத்தரணிகள், கணக்காளர்கள், பொறியியலாளர்கள் என்போர் வாண்மைசார் அபிவிருத்திச் செயலொழுங்கில் அதிகளவில் பங்கு கொள்வோராய் உள்ளனர். ஆசிரியர் சார் அபிவிருத்திச் செயலொழுங்கானது செயற்பாடுகளும் நிகழ்ச்சித் திட்டங்களுமாக இருக்கும். மாற்றங்கள் தொடர்ந்து நிலவிய வண்ணமுள்ள உலகில் பயன் நிறைந்த சமூக அமைப்பாகப் பாடசாலை விளங்கவேண்டுமானால் அதனது செயற்பாட்டில் பங்கு கொள்ளும் ஆசிரியர்கள் ஆற்றலின் உறைவிடமாக விளங்குதல் அவசியமாகும்.

ஆசிரியர் வாண்மை அபிவிருத்திச் செயலொழுங்கானது நன்கு திட்டமிடப்பட்டதாகவும் தூர நோக்குடையதாகவும் ஒழுங்கமைக்கப்படுதல் அவசியமாகும். இங்கு திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல் என்ற அனைத்து நிலைகளிலும் சமுதாயக் கேள்வி (Social Demand) தொடர்பிலும் நகர்த்தும் பிரச்சினைகள் (Logistic problem) தொடர்பிலும் கூடிய கவனம் செலுத்தப்படுதல் அவசியமாகும்.

கல்விசார் ஆய்வாளர்களின் கருத்துப்படி ஆசிரியர்களானவர்கள் தமது வேலை தொடர்பில் சகபாடிகளிலிருந்து தனித்திருக்கின்றமை, தமது வேலைச் சூழல் தொடர்பான தீர்மானமெடுத்தல் செயற்பாடுகளில் அதிகம் பங்கு கொள்ளாதுள்ளமை பாரம்பரியமான முறையில் தொடர்ந்து செயற்பட விரும்பும் நிலை என்பன ஆசிரியர்களது தொழில் சார் விருத்தி நிலைக்குத் தடையாகவுள்ளன எனக் குறிப்பிட்டுள்ளனர்.

கல்வித் துறைசார் அலுவலர்களுக்கான தொழில் திறன் அபிவிருத்தித் திட்டத்தினது பிரதானமான நோக்கமானது கல்வியிலும் வகுப்பறை நிலைமைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. எந்தவொரு மாற்றத்துக்குமான பயிற்சியும் கற்பிப்போனை மையப்படுத்தியதாகவும் அவர் பெற்ற பயிற்சி மூலம் மாணவனது பங்கேற்பைத் தூண்டுவதாகவும் அமைய வேண்டும். கற்பிப்போனது தொழில்சார் விருத்திக்கான செயற்பாடுகளானவை அவனது நாளாந்த அனுபவங்களோடு தொடர்புபடுத்தப்பட்டதாக அமையும்போது அவர்கள் தமது நாளாந்த அறிவுறுத்தல் செயற்பாடுகளை மெருகூட்டிக் கொள்ளவும் முடியும்.

ஆசிரியர்சார் அபிவிருத்திச் செயற்பாடுகளானவை தனியாளான ஆசிரியரதும் பாடசாலை என்ற நிறுவனத்தினதும் நிகழ்கால எதிர்கால இலக்குகளை அடைந்து கொள்வதற்காகக் குறித்தொதுக்கப்பட்ட செயற்பாடுகளினூடாக ஆசிரியர்களின் ஆற்றல்கள் திறன்களை வளர்த்து ஆசிரியருக்கான நிகழ்கால எதிர்கால இயலுமைகளை ஏற்படுத்திக் கொள்ளலாகும்.

ஆசிரியர் அபிவிருத்திச் செயற்பாடுகள் அவசியமாயுள்ளமைக்கான காரணங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. ஆசிரியர்களை கற்றல் கற்பித்தல் செயலொழுங்கின் பிரதான உந்து சக்தியாக விளங்கச் செய்தல்.

2. ஆசிரியர்கள் தொடர்ச்சியாகப் புதுமைகளைத் தேடிக் கண்டறியக் கூடிய அறிவு, திறன், மனப்பாங்குகளைப் பெற்றுக் கொடுத்தல்.

3. கற்றல் கற்பித்தற் பணிக்காகத் தெரிவு செய்யப்படுபவர்கள் தொடர்பாகத் தெளிவானதும் உறுதியானதுமான ஆள்சேர்ப்புக் கொள்கைகள் பின்பற்றப்படாதுள்ள நிலையில் ஆள்சேர்ப்புக்குள்ளானவர்களுக்குப் பொருத்தமான பயிற்சிகளை வழங்கிப் பொதுமையாக்கம் செய்தல்.

4. ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்ற பயிற்சியானது வெவ்வேறுபட்ட நிறுவனங்களினால் வெவ்வேறுபட்ட உத்திகளைக் கையாண்டு வழங்கப்படுவதனால் ஏற்பட்டுள்ள வேறுபாட்டு நிலையினை இல்லாது போக்குதல்.

5. மாற்றமடைந்து செல்லும் உலகுடன் வாழ்தல் என்பனவே அந்தக் காரணங்கள்.

மாற்றமென்பது சதா நிகழ்ந்த வண்ணமுள்ளமையால் அந்த மாற்றங்களை எதிர்கொண்டு வெற்றிகரமான வகையில் செயற்படுவதற்கு ஆசிரியர் பயிற்சிச் செயற்திட்டங்கள் அவசியம். அவற்றின் குறிக்கோள்களாகப் பின் வருவனவற்றினைக் குறிப்பிடலாம்.

1.ஆசிரியர்களின் வாண்மைத்துவத்தினை அதிகரித்தல்.

வாண்மைத் தொழிலாக விளங்குகின்ற ஒரு தொழிலானது அதன் ஊழியர்களுக்கு தொடர்ச்சியாக வலுவூட்டற் செயற்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியதாகவுள்ளது. அவ்வாறு செயற்படுகின்றபோதே ஆசிரியத்துவமும் சிறப்படைய முடியும். புதிய மாற்றங்களைத் தெரிந்து கொள்வதற்கும் அதனை உள்வாங்குவதற்கும் உள்வாங்கிய விடயங்களை தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் மாணவர்களுக்கு ஊட்டுவதற்கும் இவ்வாறான பயிற்சிகள் அவசியமானதாகும்.

2.ஆசிரியர்களது வினைத்திறனையும் விளைதிறனையும் மேம்படுத்துதல்.

3.பாடசாலைக்கென ஒப்படைக்கப்பட்டுள்ள ஆசிரியர் என்ற மனித வளத்திலிருந்து உச்சப் பயனையும் அதனது இயலுமையையும் அதிகரித்துக் கொள்ளுதல்.

4.குழுக் கட்டமைப்பைப் பாடசாலையில் கட்டியெழுப்புவதற்கும் அதனூடாகப் பாடசாலைச் செயற்பாடுகளில் தம்மை ஒன்றிணைத்துச் செயற்படுத்துதல்.

5.வகைகூறலுக்கும் நேரமுகாமைத்துவத்துக்குமான ஆசிரியர்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கான வலுவூட்டலை மேற்கொள்ளுதல்.

வகைகூறலானது பல்பரிமாணமுடையதாக உள்ள நிலையில் பொறுப்புக்கூறல் அதிகாரம் மதிப்பீடு கட்டுப்பாடு என்பவற்றை சிறப்புற ஆசிரியர்கள் முன்னெடுப்பதற்கும் பாடசாலைக் கல்வியை வழங்குவோரிடையே வகை கூறலுக்கான தேவை அதிகரித்த வண்ணமுள்ளமையில் பாடசாலையால் வழங்கப்படும் பயிற்சியின் தேவையும் அதிகரித்துள்ளது.

6.திருப்தியான மனோநிலையுடன் சுமூகமான வேலைப்பாங்குடையவர்களாகக் கடமையாற்றுவதற்கான ஊக்கத்தை வழங்குதல்.

ஏனெனில் இன்றைய ஆசிரியர்களில் பெரும்பாலானோர் வேலைத் திருப்தியற்றவர்களாகவுள்ள நிலையில் அவர்களிடையே ஆர்வத்தையும் விருப்பினையும் தூண்டும் வகையிலான செயற்திட்டங்களை முன்னெடுத்தல் அவசியமாகும்.

7. ஆசிரியர்களிடையே காணப்படுகின்ற உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொண்டு வருவதுடன் கற்றல் கற்பித்தலை வளப்படுத்துதல்.

8.ஊக்கத்தையும் ஊக்குவிப்பினையும் வழங்குவதனூடாக பாடசாலைகளின் குறிக்கோளை நோக்கி ஆசிரியர்களை நகர்த்துவதுடன் அதனூடாகச் சிறந்த பங்கு பற்றுதலைப் பாடசாலைக்குப் பெற்றுக்கொடுத்தல்.

9.பாடசாலையிலுள்ள பல்வேறு தரப்பினரிடையேயான சிறந்த நட்புறவை வளர்த்துக் கொள்வதற்கு. என்பனவற்றுக்காகவே ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் அவசியமாகின்றன.

ஆசிரியர்களுக்கான பயிற்சித் திட்டங்களை முன்னெடுப்பதனூடாக ஆசிரியர்களை நம்பிக்கையுடையவர்களாக மாற்றிக் கொள்வதோடு அர்ப்பணிப்புடனான சேவையையும் வழங்க முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி தரும் பசுக்களை அழிப்பதா?

இந்தியாவில் கால்நடைகள் குறிப்பாகப் பசுக்கள் கொல்லப்படுவதால் ஏற்படும் பாதிப்புக்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது இந்தக் கட்டுரை. இலங்கையிலும் குறிப்பாக வடக்கு, கிழக்குப் பகுதியிலும் இதே நிலைமை காணப்படுவதால் காலப் பொருத்தப்பாடு கருதி இந்தக் கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

அர்ஜுன் சம்பத்

ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆக்கிரமித்த பின் ஆச்சரியப்பட்ட விடயங்கள் இரண்டு. ஒன்று குருகுலக்கல்வி, மற்றொன்று பாரம்பரிய விவசாயம்.

அப்போதைய பிரிட்டிஷ் ஆளுநரான ரொபேர்ட் கிளைவ் இந்தியர்களின் விவசாய முறையைப் பற்றி நீண்ட விரிவான ஆய்வு ஒன்றைச் செய்தார். தன்னிறைவான சுயமான இந்திய விவசாய முறைமை இருப்பது பிரிட்டிஷாருக்குப் பாதிப்பு என்று அவர் நினைத்தார். இந்திய விவசாயம் பிரிட்டிஷாரைச் சார்ந்திருக்கும் வகையில் அதனை மாற்ற நினைத்தார்.

அவருடைய ஆய்வின்படி, இந்தியக் கால்நடைகள், குறிப்பாக, பசுக்கள்தான் பாரம்பரிய விவசாயத்தின் முதுகெலும்பு. பசுக்கள் இல்லை என்றால் இந்திய விவசாயம் அழியும். பசுக்களை அழித்துவிட்டால் இந்தியப் பாரம்பரிய விவசாயம் அழிவுப் பாதையை நோக்கித் திரும்பும் என அவர் கணிப்பிட்டார்.

அப்படிச் செய்வதன் மூலம் இரசாயன உரங்களுக்காகவும், பூச்சிக்கொல்லி மருந்துகளுக்காகவும் இந்திய விவசாயிகள் ஆங்கிலேயர்களைச் சார்ந்திருக்கும் நிலை ஏற்படும் என உணர்ந்தார்.

பசுக்களின் சாணம் நல்ல சத்தான உரமாகவும், அவற்றின் சிறுநீர் சிறந்த பூச்சிக்கொல்லியாகவும் காலம்காலமாக இந்திய விவசாயிகளால் பயன்படுத்தப்பட்டு வந்தது. பசுக்கள் அழிந்தால் இந்தியர்கள், உரத்துக்கும் பூச்சிக்கொல்லி மருந்துக்கும் ஆங்கிலேயரைச் சார்ந்து நிற்கும் நிலை உருவாகும் என கிளைவ் முடிவு செய்தார். இப்படித்தான் ஆங்கிலேய நாட்டின் உரங்கள் இந்தியாவுக்குள்ளும் பின்னர் தெற்காசிய நாடுகள் அனைத்திற்குள்ளும் நுழைந்தன.

அந்தக் காலத்தில் பசுக்களின் சாணத்தையும், சிறுநீரையும் பயன்படுத்தி ஒரு ஏக்கருக்கு 54 குவிண்டால் அளவுக்குச் சத்தான அரிசியை இந்திய விவசாயிகள் உற்பத்தி செய்து கொண்டிருந்தார்கள். இதை அறிந்து, 1760இல் ரொபர்ட் கிளைவ், பசுக்களை கொல்லப் பசுவதைக் கூடங்களை (ஸ்லாட்டர் ஹவுஸ்) இந்தியாவில் நிறுவினார். நாளொன்றுக்கு 30 ஆயிரம் பசுக்கள் வீதம் ஒரே ஆண்டில் ஒரு கோடி பசுக்களைக் கொன்றார்.

அவர் இந்தியாவை விட்டுச் செல்வதற்கு முன் இதேபோல பல கூடங்களை நிறுவினார். இதன் மூலம் லட்சக் கணக்கான பசுக்கள் உணவுக்காக என்ற பெயரில் கொல்லப்பட்டன. அந்தக் காலத்தில் பெரும்பாலான பகுதிகளில் இந்தியாவில் மக்கள் தொகையை விட, பசுக்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது என்று சொல்லும் நிலை இருந்தது. இதன் மூலம் உணவு, தானிய உற்பத்தி தடையின்றி நடந்தது.

1910ஆம் ஆண்டு இந்திய நாட்டில் 350 பசுவதைக்கூடங்கள் இரவும், பகலும் இயங்கின. பசுக்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்ததும் இந்திய விவசாயிகள் இரசாயன உரத்துக்கு பிரிட்டிஷாரின் வாசலை நாடிய நிலை உருவானது. இதன் மூலம் யூரியாவும், பொஸ்பேட் உரங்களும் உள்ளே நுழைந்தன.

இந்தியா சுதந்திரம் அடைந்த பின் பசுமைப்புரட்சி என்ற பெயரில் பெருமளவு இரசாயன உரங்களைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கினர். அதன் பக்கவிளைவுகளை இன்று அனுபவிக்கிறோம்.

ஒரு முறை நிருபர் ஒருவர் இந்த பசுவதைக் கூடங்கள் குறித்து மகாத்மா காந்தியிடம் கேட்ட போது, ''இந்தியா சுதந்திரம் அடையும் நாளில் அனைத்து பசுவதைக் கூடங்களும் மூடப்படும்'' என்றார் அவர்.

1929ஆம் ஆண்டு நேரு ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில், ''நான் இந்தியாவின் பிரதமரானால் இங்குள்ள பசுவதைக் கூடங்களை மூடுவதே என்னுடைய முதல் வேலையாக இருக்கும்'' என்றார்.

இதில் மிகப்பெரிய சோகம் என்னவென்றால் 1947இற்குப் பின் 350 பசுவதைக்கூடங்கள் என்ற நிலையில் இருந்து, 36 ஆயிரம் பசுவதைக்கூடங்கள் என்ற நிலைக்கு இப்போது இந்தியா முன்னேறிவிட்டது.

இன்று அதிநவீன இயந்திரங்களால் ஆன வதைக்கூடங்கள் நிறுவப்பட்டு, ஒரு மணி நேரத்தில் பத்தாயிரம் பசுக்கள் என்ற அளவில் வதை செய்யும் திறனுடன் இரவும், பகலும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

கறிக்காகவும், தோலுக்காகவும் லட்சக்கணக்கான பசுக்கள் கொடூரமாகக் கொல்லப்படுகின்றன. டில்லியில் மட்டும் 11 ஆயிரம் பசுவதைக் கூடங்கள் சட்டத்துக்குப் புறம்பாக இயங்குகின்றன. இங்கு மட்டும் நாளொன்றுக்கு இரண்டு லட்சம் பசுக்கள் கொல்லப்படுகின்றன.

பசுக்களின் இனமே கருவறுக்கப்படும் சூழல் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தியப் பாரம்பரிய கால்நடைகள் நல்ல உடல் சக்தியுடன் நோய் எதிர்ப்புத் திறன், வெயிலைத் தாங்கும் சக்தி பெற்றவை. மாபியா கும்பல், அவர்களுடைய லாரி, டிரக்குகளில் நூற்றுக்கணக்கான பசுக்களைச் சந்தைகளில் வாங்கி, வதைக் கூடங்களுக்கு அனுப்பி வருகின்றன.

விவசாயம் அழிந்து தொழிற்சாலைகளும், நகரமயமாதலும் பெருகி வருகிறது. பெரும்பாலான விவசாய நிலங்கள் பிளாட்டுகளாகவும், வர்த்தகக் கேந்திரங்களாகவும் உருமாறிவிட்டன.

கால்நடைகளுக்கு பசுந்தீவனம், வைக்கோல் குறைந்து கொண்டே வருகிறது. மேய்ச்சல் நிலமும் மறைந்து கொண்டே வருகிறது. முந்தைய ஆட்சியில் நிலமற்ற விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் திட்டத்தில் இருந்த புறம்போக்கு நிலங்களும் மறைந்துவிட்டன. விளை நிலம் குறைந்தால் என்ன? குறைந்த நிலம், அதிக மகசூல் என்ற நோக்கில் அறிவியலார்கள் உள்ளனர். உணவுப் பொருள்களை விளைவிப்பதைவிட, இறக்குமதி செய்து கொள்வது எளிது என அரசியல்வாதிகள் கூறுகின்றனர்.

இதன் பாதிப்புகளை அனுபவிக்கப்போவது வருங்கால சந்ததிகள்தான். அறிவியலார்கள் மற்றும் பிராணிகள் நல அமைப்புகளின் புள்ளிவிவரப்படி இந்தியாவில் உள்ள 72 மில்லியன் (ஒரு மில்லியன் என்றால் பத்து லட்சம்) உழவு மற்றும் வண்டி மாடுகள், 27 மில்லியன் மெகாவாட் சக்தி அளவுக்கு உடல் உழைப்பை நமக்குக் கொடையாக அளிக்கின்றன.

இந்த உழைப்பின் மூலம் அந்தக் கால்நடைகள், அதே அளவு சக்தியை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும் நிலக்கரி மற்றும் மற்ற மூலப்பொருள்களையும் அவற்றுக்காகச் செலவிடப்படும் பணத்தையும் எமக்காகச் சேமிக்கின்றன.

கால்நடைகளால் ஒராண்டுக்கு 100 மில்லியன் தொன் காய்ந்த சாணம் இந்தியர்களுக்குக் கிடைக்கிறது. இதன் மதிப்பு 20 ஆயிரம் கோடி ரூபாய். இந்தச் சாணம் கிடைப்பதால் 50 மில்லியன் தொன் விறகு சேமிக்கப்படுகிறது. இதனால் மரங்கள் அதிக அளவுக்கு வெட்டப்படாமல் தவிர்க்கப்படுவதுடன், இயற்கைச் சூழலும் பாதுகாக்கப்படுகிறது.

இந்த 73 மில்லியன் கால்நடைகளும் கறிக்காகவோ, தோலுக்காகவோ கொல்லப்பட்டால் 7.3 மில்லியன் டிராக்டர்கள் தேவைப்படும். இதற்கு 2 லட்சம் கோடி ரூபாய் முதலீடு தேவைப்படும். அவற்றை இயக்குவதற்கு 2 கோடியே 37 லட்சத்து 50 ஆயிரம் தொன் டீசல் தேவைப்படும். இதன் மதிப்பு ஒரு லட்சம் கோடி ரூபாய். இந்த அளவு டீசலைப் பயன்படுத்துவதால் காற்று மாசுபாடு மற்றும் புவி வெப்பமயமாதல் அதிகரிக்கும்.

இயற்கை நமக்குத் தந்த செல்வங்களான, கால்நடைகளைக் கொல்வதன் மூலம் நாம் எவ்வளவு விலையை தந்து கொண்டிருக்கிறோம் என்பதை சிந்திக்கும் ஆற்றல் பெற்றோர் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்று இரசாயன உர இறக்குமதிக்காக கோடிக்கணக்கான ரூபாயை பன்னாட்டு நிறுவனங்களுக்குக் கொட்டிக் கொடுக்கிறோம். அது மட்டுமன்றி பால் மற்றும் பசு சார்ந்த பொருள்களையும் இறக்குமதி செய்கிறோம்.

ஒரு நவீன மாடு வதைக் கூடத்திற்கு அதைச் சுத்தம் செய்ய தண்ணீர் அளவு ஒரு நாளைக்கு இரண்டு லட்சம் லீற்றர். இது பல லட்சம் மக்களின் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும். தண்ணீர் தட்டுப்பாடும் எரிசக்தித் தட்டுப்பாடும் உள்ள இந்திய நாட்டில் இயற்கையின் கொடையாகக் கிடைத்த இந்த கால்நடைச் செல்வங்களைக் கொல்வதை இனி மேலும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டுமா?

# சத்தியம், சிவம், சுந்தரம்: இதன் விளக்கம் என்ன?

மருத்துவர் இ.கணேசமூர்த்தி

ஸ்ரீ சத்தியசாயி சேவா நிறுவனத்தின் தேசிய மட்ட இளைஞர் மாநாடு, நிறுவனத்தின் சர்வதேசத் தலைவர் மருத்துவர் நரேந்திரநாத் ரெட்டியால் நாளை 13 ஆம் திகதியன்று யாழ்.சத்தியசாயி நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.



பிரபஞ்சம் எப்படித் தோன்றியது என்பதற்கு விஞ்ஞானமும் மெஞ்ஞானமும் விளக்கம் தந்துள்ளன. பிரபஞ்சம் ஆதி முதலே இருந்த ஒன்று என்பதை இவை இரண்டுமே ஏற்றுக்கொண்டுள்ளன.

அந்த ஆதி முதலானது பெரிய ஓசையுடன் பிரபஞ்சமாகத் தோன்றியது. (Bring Bang Theory) என்றும், அது தொடர்ச்சியாக விரிவடைந்து கொண்டேயிருக்கின்றதென்றும் விஞ்ஞானம் கூறுகிறது. கணக்கிட இயலாத நட்சத்திரங்கள் பிரபஞ்சத்தில் உள்ளதாகவும், அவற்றில் சில தானாகவே ஒடுங்கி வருகின்றன என்றும் (Black hole ) கூறுகிறது. கோள்களுக்கிடையிலுள்ள ஈர்ப்பு சக்தியே அவற்றின் ஒழுங்கான அசைவுக்குக் காரணம் என்றும் அது கூறுகிறது. சகல செயற்பாடுகளையும் ஒன்றிணைக்கும் நியதியை (Theory of everything) இன்றும் மனிதனால் சரியாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆன்மிகம் (மெஞ்ஞானம்), ஆதி முதலான ஒன்று. தன்னை நேசிக்கவும் தான் ஏனையவற்றை நேசிக்கவும் விரும்பி பலவைகத் தோன்ற சங்கற்பம் பூண்டது. அதன் விளைவே 'ஓம்' என்ற பிரணவ ஒலியுடன் தோன்றிய பிரபஞ்சமாகும். ஆதி முதலான ஆன்மிகம், எங்கும் வியாபித்துள்ளதுடன், அதற்கப்பாலும் பரந்துள்ளதென்றும், அதற்குச் சகல வல்லமையும் அறியும் தன்மையுள்ளது என்றும் கூறி, கடவுள் என்ற நாமத்தையும் அது சூட்டியுள்ளது. ஆதி சக்தியிலிருந்து ஏனைய சகல சக்திகளும் எழலாம் எனவும், சக்திக்கு செயற்படும் இயல்பு உண்டு என்றும் விஞ்ஞானம் விளக்கம் தருகிறது. ஆனால் அதற்குள்ள விழிப்புணர்வை (Consciousness ) விளக்கமுடியாது தத்தளிக்கிறது. இந்த விழிப்புணர்வே (சித்) பிரபஞ்சத்தை இயக்கிக்கொண்டிருக்கிறது என்றும், இதுவே சகல செயல்களையும் இணைக்கின்றதென்றும், இதுவே சத்தியம், சிவம், சுந்தரம் என்றும் ஆன்மிகம் விளக்கம் தருகிறது.

படைப்பிலே மனிதனுக்கு விஷேட தன்மை கொடுக்கப்பட்டுள்ளது. அது உடல், மனம், ஆத்மா என்ற மூன்றின் கூட்டேயாகும். ஆத்மா பரபிரம்மத்தின் ஒரு பொறியே. அதனது வெளிப்பாடே உடலும், மனமும். படைப்பிலுள்ள சக்திகளுள் இறை சக்திக்கு அடுத்ததாக மனதின் (எண்ணம்) சக்தியே பலம் வாய்ந்தது. நாம் சகலதையும் மனம் என்ற கருவியின் மூலமே அறிகின்றோம். ஆனால் மனம் மூன்று குறைபாடுகளைக் கொண்டது. அவை மலா (வாசனைகள்) விக்ஷேபம் (அலையும் தன்மை) ஆவரண (அஞ்ஞானம்) என்பவையேயாகும். எமதுபார்வை, அறிகைச்செயல் எல்லாம் இந்தக்குறைபாடுகள் உள்ள மனதினாலேயே நிகழ்கின்றன. ஆகவே நாம் காணும் உலகமும் இந்தக் குறைபாடுள்ள மனதாலும், மனதிற்கு உதவும் குறைபாடுகள் உள்ள புலன்களாலும், எம்மால் உண்டாக்கப்பட்ட கருவிகளின் உதவியாலுமே அறியப்படுகின்றது. ஒவ்வொரு மனமும் தனக்கென்றே வெவ்வேறு உலகத்தைச் சித்தரிக்கின்றது. இதைத்தான் ஆன்மிகவாதிகள் படைப்பில் ஒரு குறையில்லை என்றும், பார்வையில் தான் குறைகள் உண்டென்றும் [illegible] யடக்கி, [illegible] நிலையில் உலகமே அற்றுப்போய், எல்லாம் ஒரே ஒளிமயமாகவும், பேரானந்தமாகவும் இருக்கும் நிலையைக் கூறியுள்ளார்கள். மனது செயலிழந்ததும் உலகம் தெரியாது. இது ஆழ்ந்த நித்திரையிலும், உணர்வற்ற மயக்க நிலையிலும் நிகழ்கின்றது. மனம் எப்படியோ அப்படியே உலகமும் தெரிகிறது.

நாம் கனவிலே காணும் உலகு போன்றே விழிப்பு நிலையில் காணும் உலகும் ஒரு பகற்கனவே என்று ஆன்மிகம் விளக்குகின்றது. படைப்பவனால் வெளிப்படுத்தப்பட்ட மாயா சக்தியே உண்மையை மறைக்கிறதென்றும், இச்சக்தியை மனித முயற்சியாலும், ஆண்டவனின் அருளாலுமே களைந்து உண்மைப் பொருளை உணரலாமெனக் கூறுகிறது. உலகம் நித்தியமானதல்ல, அது என்றோ ஒரு நாள் அழியும் தன்மையையும் கொண்டுள்ளது. ஆன்மிகம், எதற்குத் தோற்றம் உண்டோ அதற்கு அழிவுமுண்டு என்ற விதியை முன்வைத்துள்ளது. இந்த உலகம் ஒரு நாடகமேடை; இதில் நாம் எமக்கு கிட்டிய பாத்திரத்தைச் செல்வனே பற்றின்றி நடித்து முடிக்க வேண்டும்.

பகவான் சத்தியசாயி பாபாவும் தனது போதனைகள் ஒவ்வொன்றிலும் ''அனைவரையும் நேசி; அனைவருக்கும் சேவை செய்; எப்போதும் உதவி செய்; ஒரு போதும் தீங்கு செய்யதே'' என்று வலியுறுத்தியுள்ளார். இதுவே மாயா சக்தியிலிருந்து நீங்க வழிவகுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநம்பிக்கை

நம்பிக்கை இல்லை என்றால் இந்த உலகத்திலே நாம் நடமாடவே முடியாது. அவநம்பிக்கையுடன் இருந்து கொண்டிருந்தால் என்றைக்கும் அவஸ்தைதான்! நாம் நம்புவது நடக்கிறதோ இல்லையோ அது வேறு விடயம்;ஆனால் எதையும் நம்பித்தான் நாம் அடிவைக்க வேண்டியிருக்கிறது!

வேறு ஒன்றும் வேண்டாம். ஒரு லொத்தர் சீட்டு வாங்குகிறோம். அது எங்கே எமக்கு விழப் போகுது என்ற அவநம்பிக்கையோடா வாங்குகிறோம்? முதல் பரிசு நமக்குத்தான் என்ற நம்பிக்கை மனதுக்குள் இருக்கத்தான் செய்கிறது!இருந்தாலும் முடிவு வேறு மாதிரி ஆகிறது! அதுக்காக மனம் தளர்ந்து போவதில்லை...!அடுத்த மாதமும் சீட்டு வாங்குகிறோம்!இந்த நம்பிக்கைதான் மனித வாழ்க்கைக்கு ஆதாரம்!

ஒரு கடையிலே போய் தேநீர் குடிக்கிறீங்கள்! அந்தத் தேநீர் தரமானதுதானா அதில் விஷம் கலந்திருக்குமா என்ற சந்தேகம் உங்களுக்கு வரும் என்றால் அதற்குப்பின்னர் அதை எப்படி நீங்கள் குடிக்க முடியும்? நம்பித்தான் குடிக்க வேண்டும்.

ரயில் ஒழுங்கா போய்ச் சேரும் என்கிற நம்பிக்கை இருப்பதால் தானே அதிலே ஏறி உட்காருகிறோம்.கடிதம் ஒழுங்காகப் போய்ச் சேரும் என்ற நம்பிக்கையில்தானே பெட்டியில் போடுகிறோம்

மனித நம்பிக்கை எந்தளவுக்கு உறுதியாகவும்,அறிவு பூர்வமாகவும் இருக்கிறது என்பதற்கு,அலெக்சாண்டர் வாழ்க்கையில் நடந்த ஒருசம்பவத்தை உதாரணமாகச் சொல்லலாம்.

இந்த உலகத்தையே வெல்ல வேண்டும் என்று புறப்பட்டார் அலெக்சாண்டர்.ஒரு கட்டத்தில் அவர் சிட்னஸ் நதிக்கரைக்கு வந்து சேர்ந்தார்.அந்த சமயத்தில் அவருக்கு கடுமையான நோய் வந்து விட்டது. அவர் கூடவே வந்திருந்த கிரேக்க வைத்தியர்கள் என்னென்னமோ முயற்சி எல்லாம் செய்து பார்த்தார்கள்.

இருந்தாலும் அலெக்சாண்டருக்கு வந்திருப்பது என்ன நோய் என்பதை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஏனென்றால் அந்தப் பகுதியிலே உள்ளவர்களுக்கு மட்டுமே அதிகமாக வரக்கூடிய ஒரு விநோதமான நோயாக அது இருந்தது!

ஆனால் அவர் இருக்கிற இடம் எதிரியுடையது. பாரசீக மன்னனது ஆளுகைக்கு உட்பட்டது.என்ன செய்வது என்று எல்லோரும் யோசித்தார்கள்! ''பாரசீக மன்னனுடைய அரண்மனையில் இருக்கும் வைத்தியர் வந்தால் இந்த நோயைக் குணப்படுத்தி விடுவார்!'' என்று சொன்னார்கள். இருந்தாலும்-

'எதிரியுடைய நாட்டிலே இருக்கின்ற வைத்தியரை கூப்பிட்டு எப்படி நம்பி வைத்தியம் பார்க்கச் சொல்வது?'

எல்லோரும் தயங்கினார்கள். ஆனால் அலெக்சாண்டர் தயங்கவில்லை! ''பரவாயில்லை! கூட்டி வாருங்கள்!''என்றார்.

உடனே அவரைப் போய் அழைத்துக் கொண்டு வந்தார்கள். அவரும் வந்தார். அலெக்சாண்டர் உடம்பை பரிசோதனை செய்து பார்த்தார்.

''சரி இதை குணப்படுத்தி விடலாம்; பயப்படவேண்டியதில்லை;ஆனால் இதுக்கு ஒரு மூலிகை ரசம் தயார் செய்து கொடுக்க வேண்டும்.நான் போய் அதை தயார் செய்து இரண்டு நாளிலே திரும்பி வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு போனார் அந்த வைத்தியர்.

அதே மாதிரி இரண்டு நாளிலே திரும்பி வந்தார்- மூலிகை ரசத்தோடு!

அதற்கிடையிலே அலெக்சாண்டருடைய தளபதிகளில் ஒருத்தன் ரகசியமாக ஒரு எச்சரிக்கை கடிதம் கொடுத்தனுப்பியிருந்தான்.

அதை வாங்கி என்ன விஷயம் என்று பார்த்தார் .

''இப்ப உங்களிடம் வந்திருக்கும் எதிரி நாட்டு வைத்தியரை நம்பாதீர்கள்! அவன் கொண்டு வந்திருக்கும் மூலிகை ரசத்தில் விஷம் கலந்திருக்கிறது!'' என்று அதிலே எழுதியிருந்துது. அதைப்பார்த்தார் அலெக்சாண்டர். இருந்தாலும் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளவில்லை வைத்தியர் கொடுத்த மருந்தை வாங்கி 'கடகட' என்று பருகிட்டு அதன் பின் கடிதத்தில் இருந்த விடயத்தை அந்த வைத்தியரிடமேயே சொன்னார்.வைத்தியர் திகைத்துப் போனார் - தன் மேலே அலெக்சாண்டர் வைத்திருக்கும் நம்பிக்கையைப் பார்த்து! வைத்தியர் உண்மையாகவே நல்ல மருந்தை தான் கொண்டு வந்திருந்தார் . அதிலே விஷம் எதுவும் இல்லை.

அதன்பின் அலெக்சாண்டர் அந்த வைத்தியரைப் பார்த்துச் சொன்னாராம்;

''நம்பிக்கை என்கிற அச்சாணியை,ஆதாரமாக வைத்துக் கொண்டு இந்த உலகம் சுற்றிக்கொண்டிருக்கின்றது! எனக்கு எதிரியாக இருந்தாலும், பாரசீக மன்னன் மிகப் பெரியவர்! அப்படிபட்ட மன்னருடைய அரண்மனை வைத்தியர் தொழில் நேர்மை இல்லாதவராக இருக்க மாட்டார். அப்படியிருந்தால் அவரை அரண்மனை வைத்தியராக வைத்திருக்கவே மாட்டார்கள் என்று நம்பினேன் என்னுடைய நம்பிக்கை வீண் போகவில்லை!'' என்றார்.

இது தான் மானுட நம்பிக்கை என்பது!

இந்தக் காலத்திலும் இந்த மானுட நம்பிக்கையை சாமர்த்தியமாக கையாளுகின்ற கெட்டிக்காரர்கள் சில பேர் இருக்கிறார்கள். ஒருவர் இந்தக்காலத்து குரு.அவருக்கு ஒரு சிஷ்யன் ரொம்ப பணிவா நின்று,

''குருவே!உங்க கையாலே விஷத்தைக் கொடுத்தாலும் அதை வாங்கி மட மட என்று குடிச்சிருவேன்!'' என்றான்.

''உன்னுடைய குருபக்தியை மெச்சினேன்!'' யார் குரு.

அதுக்கு அந்த சிஷ்யன் ,

''அப்படி இல்லைக் குருவே! உங்கள் இடத்தை சிஷ்யனாக இருக்கிறதை விட உங்கள் கையாலே விஷத்தை வாங்கி குடிக்கிறது மிகவும் நல்லது! அதனாலேதான் அப்படிச் சொன்னேன்! நான்!




தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# இடப்பெயர்வுகளிலும் தளராது செயற்பட்ட புனித அந்தோனியார் கல்லூரி

(கடந்தவாரத் தொடர்ச்சி)



என்.சசிக்குமார்

1969இல் அருள்திரு. அல்பிரட் பெஞ்சமின் அடிகள் கல்லூரியின் நூற்றாண்டு கால அதிபராகும் பெருமையைப் பெற்றார். பக்தியும் அமைதியும் நிறைந்த இவர் ஒருவருக்கும் ஒருபோதும் இல்லை என்று சொல்லாது பணிபுரிந்தார். ஊர்காவற்றுறை பழையமாணவர் சங்கம், கொழும்பு பழைய மாணவர் சங்கம் என்பவற்றை ஸ்தாபித்து அவர்களின் உதவியோடு எமிலியானுஸ் பிள்ளை தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தை நிறுவினார். இந்தநிலையம் தொழில் நுட்பப் பாடங்களை ஆர்வமுள்ள மாணவர்களுக்கும் பாடசாலைக்கல்வியை முடித்த மாணவர்களுக்கும் கற்பிக்க பெரிதும் உதவியது. யாழ் ஆயர் மேதகு எமிலியானஸ் பிள்ளை ஆண்டகை 1972இல் திடீரென இறந்த போது இந்தக்கல்லூரி பலத்த பொருளாதார தாக்கத்திற்கு உள்ளானது. இந்தக்கல்லூரி தொடர்ந்தும் தனியார் கல்லூரியாக இயங்க வேண்டுமென்ற பெற்றோரினதும் பழைய மாணவர்களதும் நலன் விரும்பிகளதும் பேரவா ஆட்டம் கண்டது. 1973இல் அருள்திரு எஸ்.ஜே.ஸ்ரனிஸ்லெஸ் அடிகள் இங்கிலாந்தில் இருந்து வந்து இரண்டாவது தடவையாக அதிபர் பொறுப்பை சொற்பகாலம் ஏற்றார். 1974இல் அருள்திரு சூசைப்பிள்ளை அடிகள் அதிபரானார். அவரின் வழிநடத்தலில் விஞ்ஞான ஆய்வு கூடங்கள் முழுமையாகத் தரமுயர்த்தப்பட்டு கலை, வர்த்தக, விஞ்ஞான உயர்தர வகுப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவர் மார்ச் 1976இல் இடமாற்றம் பெற்றார்.

மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை ஆயராக இருந்த போது கல்லூரியில் 23.09.1957 முதல் ஆசிரியராக இருந்த எஸ்.ஏ.ஈ.இரட்ணராஜா அவர்களை 09.04.1976 இல் கல்லூரியின் அதிபராக்கினார். கல்லூரியின் தொடக்க காலத்தில் பொது நிலையினர் அதிபராக இருந்த பின் நூற்றாண்டு காலமாக அருட்சகோதரர்களாலும் குருமாரினாலும் மட்டுமே இந்தக்கல்லூரி வழிநடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ஊர்காவற்றுறை பெற்றோர் ஆயரை வேண்டிக் கொண்டதன் பெயரில் நூற்றாண்டு கால ஆண்கள் கல்லூரியில் பெண்களும் உயர்தரவகுப்பிற்கு அனுமதிக்கப் பட்டனர். முதல் தடவையாக ஆசிரியைகளும் கல்வி கற்பிக்க அழைக்கப் பட்டனர். 1978.02.01 புனித அந்தோனியார் கல்லூரி அரசிடம் கையளிக்கப்பட்டது. பணிப்பாளர் மேற்பார்வை கல்லூரியாகவிருந்த பின்னர் மே 1978.05.01இல் வர்த்தமானி மே 35-4-5-1979 கட்டளை இலக்கம் 2621 இன்படி அரச அதிகாரம் பெற்ற கல்லூரியாகியது. அத்தோடு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவின் 1ஏபி தரமுடைய ஒரேயொரு கல்லூரியாக தரமுயர்த்தப்பட்டதுடன் தீவுப்பகுதியின் பிரபல்யம் வாய்ந்த கல்லுரியாகவும் மிளிர்ந்தது. 1986இல் கொத்தணி முறை அறிமுகப்படுத்தப்பட்டபோது ஊர்காவற்றுறை கொத்தணி பாடசாலையாக நிறுவப்பட்டு 10 பாடசாலைகள் அதன் கீழ் கொண்டு வரப்பட்டன. புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் கொத்தணி அதிபரானார். சிறிய புஸ்பம் மகளிர் ம.வி, கரம்பொன் சண்முகநாதன் ம.வி, கரம்பொன் சிவகுருநாதன் வித்தியாசாலை, றோமன் கத்தோலிக்க தமிழ் ஆண்கள் பாடசாலை, ஊர்காவற்றுறை, நாரந்தனை றோமன் கத்தோலிக்க ம.வி, கணேசா வித்தியாசாலை, நாரந்தனை, தம்பாட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, தம்பாட்டி, மெலிஞ்சிமுனை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, கதிரேசானந்த வித்தியாசாலை, பருத்தியடைப்பு ஆகிய பத்து பாடசாலைகளும் ஊர்காவற்றுறை கொத்தணியின் கீழ் இயங்கின.

1990இல் உள்நாட்டுப்போர் ஆரம்பமானபோது காரைநகர் கடற்படைத்தளத்திற்கு அருகில் இருந்த ஊர்காவற்றுறை கரைப்பகுதியை விட்டு மக்கள் வெளியேறிய போது கல்லூரியும் மூடப்பட்டது. 1996.08.06இல் விமானப்படைக்குண்டு வீச்சு விமானங்கள் ஊர்காவற்றுறை கரைப்பகுதி மீது குண்டுகளை வீசிய போது ஒரு குண்டு கல்லூரி நிர்வாகக் கட்டடத்தின் மீது விழுந்து கட்டடம் முழுமையாகச் சேதமாக்கப்பட்டது. 1990.08.22இல் இராணுவ நடவடிக்கைகள் ஊர்காவற்றுறையில் ஆரம்பமானபோது மக்கள் எல்லோரும் சுருவில் புனித மரியாள் ஆலயத்தில் தஞ்சமடைந்தபடியால் ஒக்டோபர் மாதம் வரை தீவுப்பகுதிப் பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டன. நவம்பர் மாதம் முதல் புனித அந்தோனியார் கல்லூரி மிகவும் குறைந்த ஆசிரியர்கள் மாணவர்களுடன் ஒரு தனியார் வீட்டில் இயங்கத் தொடங்கியது. ஊர்காவற்றுறை கொத்தணிப் பாடசாலைகளும் இணைந்து காலை, மாலை வகுப்புகளை தற்காலிக கொட்டகைகளின் கீழ் கிடைத்த தளபாடங்களுடன் இயங்கத் தொடங்கின.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவின் 1ஏபி தரமுடைய ஒரேயொரு கல்லூரியாக தரமுயர்த்தப்பட்டதுடன் தீவுப்பகுதியின் பிரபல்யம் வாய்ந்த கல்லூரியாகவும் மிளிர்ந்தது. 1986இல் கொத்தணி முறை அறிமுகப்படுத்தப்பட்டபோது ஊர்காவற்றுறை கொத்தணி பாடசாலையாக நிறுவப்பட்டு 10 பாடசாலைகள் அதன் கீழ் கொண்டு வரப்பட்டன.

1992.04.26இல் இராணுவம் சரவணையை நோக்கி முன்னேறியபோது மக்கள் எல்லோரும் சுருவிலில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு இடம்பெயர்ந்தார்கள். யாழ் மத்திய கல்லூரியில் ஊர்காவற்றுறை கொத்தணி மாலை நேரங்களில் தற்காலிகமாக இயங்கத் தொடங்கியது. 1992இல் ஜனவரியில் யாழ் பரியோவான் கல்லூரி முகாமையாளர்களின் நல்லெண்ணத்துடன் ஊர்காவற்றுறை கொத்தணி யாழ் பரியோவான் அக்கடமியில் இயங்கத் தொடங்கியது. 1995.05.27இல் கல்லூரி அதிபர் எஸ்.ஏ.ஈ.இரட்ணராஜா அதிபர் பதவியிலிருந்து இளைப்பாறினார். பல தசாப்தங்களாக கல்லூரியை வளர்ச்சிப் படிகளை நோக்கி இட்டுச் சென்ற இவரை தொடர்ந்து மு. இரட்ணசிங்கம் அதிபராக நியமனம் பெற்றார். நவம்பர் 1995இல் இராணுவம் யாழ். நகரைக் கைப்பற்றிய போது மக்கள் இடம்பெயர கல்லூரியும் இடம்பெயர்ந்து உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் சிறிது காலம் தற்காலிகமாக இயங்கியது. 1996 மே மாதம் மக்கள் யாழ்.நகருக்கு தம் சொந்த இடங்களுக்கு திரும்பிய போது புனித அந்தோனியார் கல்லூரியும் தீவுப்பகுதிக்கு திரும்பியது. எனினும் கட்டடங்கள் எவையும் வகுப்புகளை நடத்துவதற்கு உகந்த நிலையில் காணப்படாமையால் கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகாவித்தியாலய ஆரம்பப் பிரிவுக் கட்டடத்தில் தற்காலிகமாக சில காலம் இயங்கியது. குண்டு வீச்சினாலும் எறிகணைத் தாக்குதல்களினாலும் மிக மோசமாகத் தாக்கப்பட்டு தொடங்க முடியாத நிலையில் இருந்த இந்தக் கல்லூரி 1997.03.03 சிறிய திருத்தங்கள் செய்யப்பட்டு தன் சொந்தக் கட்டடத்தில் இயங்கத் தொடங்கியது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் அடை மழை

## மக்களின் இயல்பு வாழ்வு பாதிப்பு

நுவரெலியா,ஜூலை12

நுவரெலியா, கண்டி ஆகிய மாவட்டங்களில் கடந்த சில நாள்களாக பெய்துவருகின்ற அடைமழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தில் பெய்து வருகின்ற அடை மழையினால் மகாவலி ஆற்றின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இந்த மாவட்டத்திலுள்ள நீர் நிலைகளிலும் நீர் நிறையத் தொடங்கியுள்ளது. கடந்த சில மாதங்களாக வரட்சியான காலநிலை காணப்பட்ட கண்டி மாவட்டத்தில் தற்போது பெய்துவருகின்ற அடை மழையினால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இந்தநிலையில் நுவரெலியா மாவட்டத்தில் பெய்து வருகின்ற அடை மழையினால் ஆங்காங்கே சிறு சிறு மண்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன. இதனால் பல இடங்களில் பல மணி நேரம் வாகனப் போக்குவரத்துகக்கும் இடையூறுகள் ஏற்பட்டன.

ஹற்றன் - நுவரெலியா பிரதான பாதையில் கொட்டகலை குடாஓயா பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் காலை ஏற்பட்ட மண்சரிவினால் ஹற்றன் - கொட்டகலை பிரதேசத்துக்கான போக்குவரத்துக்கள் மூன்று மணி நேரம் பாதிப்புக்கு உள்ளாகின.

வாகனப் போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருந்த நேரத்தில் ஹற்றனிலிருந்து நுவரெலியாவுக்குச் செல்பவர்கள் மாற்றுப்பாதையாக டிக்கோயா, போடைஸ், அக்கரப்பத்தனை வழியாக நுவரெலியாவுக்குச் செல்லும் பாதையைப் பயன்படுத்துமாறு நுவரெலியா மாவட்ட இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தின் இணைப்பாளர் ஹேரந்தன ஹேமவர்த்தன அறிவித்துள்ளார்.

ஹற்றன் - நுவரெலியா பிரதான பாதையை அகலப்படுத்தும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் இந்த வீதியில் ஆங்காங்கே மண் சரிவுகள் ஏற்பட்டு வருகின்றன.

இதேவேளை மஸ்கெலியா - நல்லதண்ணி பிரதான பாதையில் மோகினி எல்ல என்ற பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை ஏற்பட்ட மண்சரிவினால் இந்தப்பாதையின் ஊடான வாகனப் போக்குவரத்துக்கள் முற்பகல் 10 மணிவரை இடம்பெறவில்லை.

மண்சரிவினால் ஏற்பட்ட மண் குவியலை அகற்றும் பணிகளில் பொலிஸாரும் இராணுவத்தினரும் ஈடுபட்டதோடு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்களும் ஒத்துழைப்பு வழங்கினர்.

நாவலப்பிட்டி- ஹற்றன் பிரதான பாதையில் சில பகுதிகளில் சிறு சிறு மண் சரிவுகள் ஏற்பட்ட போதும் வாகனப்போக்குவரத்துகளுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்படவில்லை.

நுவரெலியா மாவட்டத்தில் நீரேந்தும் பகுதிகளில் பெய்துவருகின்ற அடை மழையினால் கெனியன், லக்ஸபான போன்ற சிறிய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்வடைந்ததால் அவற்றின் வான்கதவுகள் நேற்று திறந்து விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மலையகத்தில் தற்போது பெய்துவரும் அடை மழையுடனான காலநிலை காரணமாக பல இடங்களில் பனி மூட்டம் நிறைந்து காணப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் நுவரெலிய - நானுஓயா நகரங்களுக்கிடையில் பனி மூட்டம் காணப்பட்டது. இதனால் வாகனச் சாரதிகள் எதிரில் வரும் வாகனங்களை மிக அருகில் வரும் வரை அவதானிக்க முடியாமல் சிரமத்தை எதிர்நோக்கினர்.

(ச)



கொட்டகலை - குடாஓயா பிரதேசத்தில் மண்சரிவு



திறக்கப்பட்ட லக்ஸபானா வான்கதவுகள்

# அரசியல் செய்வதோடு நின்றுவிடாது கலைஞர்களை வளர்ப்பதும் எம்பணி

## கல்முனை மாநகர முதல்வர் தெரிவிப்பு

கல்முனை, ஜூலை 12

அரசியல் செய்வது மட்டும் எமது பணியல்ல; கலைஞர்களை ஊக்குவித்து அவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வருவதும் எமது பணியாகும் என்று கல்முனை மாநகர முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தெரிவித்தார்.

சாய்ந்தமருது எஸ்.ஜனூஸின் எழுத்து இயக்கத்தில் உருவான 'வை திஸ் கொலை வெறி' குறும்பட வெளியீட்டு விழா கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''இன்று ஜனூஸினால் வெளியிடப்பட்ட குறும் படத்தைப் பார்க்கின்றபோது அது இந்தியத் திரைப்படத்தை ஒத்ததாகவே காணப்படுகின்றது. இதனைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்; பாராட்டுகின்றேன். இவர் எதிர்காலத்தில் மேலும் வளர வேண்டும். அதற்கு என்னாலான முழு உதவிகளையும் வழங்குவேன்.

இந்த நிகழ்வுக்கு பல ஊடக நிறுவனங்களின் முக்கிய பிரமுகர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். நீங்கள் இக்கலைஞர்களின் படைப்புகளை உங்களது ஊடகங்கள் மூலம் வெளிக்காட்டி இவர்களின் திறமைகளை வெளியுலகுக்கு எடுத்துக் காட்டச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

**தேசத்துக்கு மகுடம் கண்காட்சி கலைஞர்களின் திறமைகள் தேசிய மட்டத்துக்கு கொண்டு செல்லவதற்கு அரிய வாய்ப்பாக அமையும்**

கலைஞர்கள் தங்களது படைப்புகளை வெளியிடுவதற்குப் பொருத்தமான ஒரு கலாசார மண்டபம் எமது கல்முனை பிரதேசத்தில் இல்லாததை நான் உணர்ந்தேன். இந்தவிடயம் குறித்து எமது கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமிடம் பேசினேன். அவர் குவைத் நாட்டின் நிதியுதவியின் மூலம் கல்முனையில் சகல வசதிகளும் கொண்ட கலாசார மண்டபம் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். தேசத்துக்கு மகுடம் கண்காட்சி இவ்வருடம் அம்பாறை மாவட்டத்தில் நடைபெறவுள்ளமை கலைஞர்களின் திறமைகளை தேசிய மட்டத்துக்குக் கொண்டு செல்வதற்கு நல்லதொரு சந்தர்ப்பமாகும்- என்றார். (ச)

## அம்பாறைக்கு ஸ்ரீ.ல.சு.கட்சி புதிய அமைப்பாளர் நியமனம்

அம்பாறை,ஜூலை12

அம்பாறை மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் புதிய அமைப்பாளராக கீர்த்தி ஸ்ரீ வீரசிங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற வைபவத்தில் இதற்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதி கையளித்தார்.

களனிப் பல்கலைக்கழகத்தில் மருத்துவத்துறையில் பட்டம் பெற்ற இவர் தமது ஆரம்பக் கல்வியை அம்பாறை சதாதிஸ்ஸ மகாவித்தியாலயத்தில் கற்றார்.

பலதுறைகளிலும் உயர் பதவிகளை வகித்துள்ள இவர் தற்போது புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சின் இணைப்புச் செயலாளராகப் பணிபுரிந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ச)

# கிழக்கு முதலமைச்சர் பதவி மீண்டும் சந்திரகாந்தனுக்கே

## உறுதியாகக் கூறுகிறார் கட்சியின் செயலாளர்

எருவில், ஜூலை 12

கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி இந்தமுறையும் அதிக வாக்குகளைப் பெறும் சந்திரகாந்தனுக்கே வழங்கப்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணசபையின் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள நிலையில் முதலமைச்சராக எவரைத் தெரிவுசெய்வது என்று மக்களும், எமது கட்சியும் தீர்மானிப்பதற்கு முன்னர் ஊடகங்கள் வாயிலாகப் பல செய்திகள் வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இதனால் மக்களும் குழப்பத்தில் ஆழ்ந்து கொண்டிருக்கின்றனர். எது எப்படி இருந்தாலும், 2008ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகூடிய வாக்குகளைப் பெற்று சந்திரகாந்தன் முதலமைச்சரானார். .

நான்கு வருடங்களில் கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்திப் பணிகளைச் செயற்படுத்தியதுடன், தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினை எழும் போதும் அதற்காக உரத்துக் குரல் கொடுத்தது மட்டுமன்றி, பல சந்தர்ப்பங்களில் முரண்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன.

இந்தமுறையும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அதிகூடிய வாக்குகளைப் பெற்று கிழக்கு மாகாண சபையைத் தமிழர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும்- என்றார்.

(ச-31)

## உணவு விஷமானதால் 133 இராணுவத்தினர் வைத்தியசாலையில்

உணவு விஷமானதன் காரணமாக பனாகொட இராணுவமுகாமில் உள்ள 133 இராணுவத்தினர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

57 பேர் பனாகொட இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 76 பேர் நாரஹேன்பிட்டி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வனிகசூரிய தெரிவித்தார்.(ச)

## தென்னை மரங்களில் நோய்க்கிருமி

எருவில், ஜூலை 12

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரைப்பகுதியில் உள்ள தென்னைமரத் தோட்டங்களில் ஒருவித நோய்க் கிருமிகள் தொற்றியுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். பாலையடிவட்டை 35ஆம், 37ஆம், 38ஆம் கிராமங்களில் உள்ள தெங்கு விவசாயிகளே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

தேங்காய்களுக்கு ஒருவித கறுப்பு நிறப்புள்ளிகள் விழுவதனால் தமக்கு எதிர்பார்த்த இலாபம் கிடைப்பதில் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.(ச-31)

# பரீட்சை வினாத்தாளில் குளறுபடி கல்விச் சமூகத்தினர் அதிருப்தி

தற்போது நடைபெற்று வரும் இரண்டாம் தவணைப் பரீட்சை வினாப்பத்திரத்தில் பல வினாக்களில் குளறுபடிகள் காணப்படுகின்றன என்று அக்கரைப்பற்று வலயத்திலுள்ள மாணவர்களும், அதிபர்களும், ஆசிரியர்களும் தெரிவிக்கின்றனர்.

அக்கரைப்பற்று கல்வி வலயத்தினால் நடைபெற்றுவரும் பரீட்சையில் காணப்படும் வினாப்பத்திரங்கள் சிலவற்றில் வினாக்கள் அச்சடிக்கப்படாமலும், பிழையாகவும் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் இவ்வாறான பொதுப்பரீட்சைகளின்போது இவ் வாறான குளறுபடிகள் இனிமேல் நடைபெறாமல் இருக்க உரியவர்கள் கண்காணிப்புடன் இருக்கவேண்டும் என்று கல்விச் சமூகத்தினர் தெரிவிக்கின்றனர்.

## ரயில் மோதி இளைஞன் சாவு

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திராய்மடு பகுதியில் ரயிலில் மோதுண்டு இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணிக்கு மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலில் மோதுண்டே இவர் உயிரிழந்துள்ளார்.

திராய்மடு ரயில் தரிப்பிடத்துக்கு அண்மையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சடலம் ஏறாவூர் ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டினால் திருக்கோவில் பிரதேசத்தில் நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை மூலம் ஒரு பவுசர் குடிதண்ணீர் வழங்கி வருகிறது. இந்தக் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்ள திருக்கோவில் பிரதேச மக்கள் முண்டியடிக்கின்றனர். (ச-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** எதிர்பாராத வகையில் சிலரின் சந்திப்புகள் ஏற்படும். அவர்களின் ஆலோசனைகளும், உதவிகளும் பயனுள்ளதாக இருக்கும். புதிய தொழில் ஒன்றையும் செயற்படுத்தத் திட்டமிடுவீர்கள். அரச உதவி ஒன்றுக்காக அலைச்சல் இருக்கும். குடும்பத்தில் புதிய நபர்களின் வருகை இருக்கும்.



**இடபம்:** நேற்றைய குழப்பங்களுக்குத் தீர்வு காண்பீர்கள். மன நிலையில் நிலவும் மாற்றமான சிந்தனை அமைதி ஏற்படுத்தும். நட்பு மற்றும் உறவு வகையில் ஆறுதலான வார்த்தைகள் கிடைக்கப்பெறுவீர்கள். பணநிலையில் நெருக்கடிகளை சாதுரியமாகச் சமாளிப்பீர்கள்.



**மிதுனம்:** புதிய முயற்சி ஒன்றுக்காக சற்று கூடுதலான அலைச்சல் இருக்கும். பெற்றோருக்காக மருத்துவச்செலவு ஏற்படும். குடும்ப விடயங்களில், பட்டும்படாமல் இருந்து கொள்ளுதல் நல்லது. தொழில் வகையில், இயந்திர பராமரிப்புச் செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.



**கடகம்:** செல்வாக்கு அதிகரிக்கும். நட்புகளின் உதவிகள் மிகுந்த பயன் தரும். புதிய வேலைவாய்ப்புக்கான முயற்சிகள் வெற்றி தரும். சகோதர வகையில் ஏற்பட்ட சச்சரவுகளுக்கு தீர்வு ஏற்படும். அலுவலகப் பணிகளில் சில சலுகைகள் கிடைக்கப்பெறும்.



**சிங்கம்:** மனம் தெளிவு பெறும், எண்ணங்கள் வெற்றி பெறும், பணியில் தடங்கல்கள், தாமதங்கள் ஏற்பட்ட போதும் விடாமுயற்சியோடு செய்து முடிப்பீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட வகையில் வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில் விளையாட்டான ஒரு வார்த்தை மன உளைச்சலை ஏற்படுத்தும், எனினும் சமாளித்துக் கொள்வீர்கள்.



**கன்னி:** மனநிலையில் தேவையில்லாத பயம், குழப்பத்தை ஏற்படுத்திக் கொள்வீர்கள். விரும்பிய தெய்வ வழிபாடு மனக்குழப்பத்தை அகற்றும். குடும்ப நலனில் அக்கறை. புதிய அறிமுகங்கள் ஓரளவுக்கு பயன் தரும். தொழில் தொடர்பாக பிரயாணங்கள் ஏற்படும்.

**நாளை**

ஆனி 29 வெள்ளிக்கிழமை 13.07.2012
திதி: தசமி பி.இ 03.03 வரை
நட்சத்திரம்: பரணி பி.இ 01.17 வரை
சுபநேரம்: 06.00- 07.30 வரை
ராகு காலம்: 10.30- 12.00 வரை



**துலாம்:** உங்களின் பொறுப்பான செயற்பாடுகள் பிறரால் பாராட்டப்படும். இதுவே சில பணிகளைச் செய்ய உங்களைத் தேர்ந்தெடுக்கக் காரணமாக இருக்கும். பண நிலையில், பற்றாக்குறையான போக்கு காணப்பட்ட போதும் சாதுரியமாகச் சமாளிப்பீர்கள்.



**விருச்சிகம்:** தாமதப்பட்ட பணிகளைச் செய்து முடிக்க முழுத் திறமையையும் வெளிப் படுத்துவீர்கள். நிதி நிலையில் நிலவும் பற்றாக்குறையைச் சமாளித்துக்கொள்ள சிலரின் உதவியை நாடுவீர்கள். தொழில் தொடர்பான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவீர்கள்.



**தனுசு:** உங்களின் கவனக்குறைவால் சிரமத்திற்கு உள்ளாவீர்கள். குடும்பத்தில், தான் என்ற பேச்சுக்களால், வீண் வாக்குவாதங்கள் அதனால் மனவருத்தங்கள் ஏற்படும். சகோதர வகையில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.



**மகரம்:** எதிர்பார்க்கும் தகவல்கள் சற்று தாமதமாகும். யோசனை அதிகரிக்கும். அதற்கு நீங்கள் பதில் கொடுக்க முடியாத சூழ்நிலையும் நிலவும். தொழிலில், புதிய ஒப்பந்தங்களால் லாபம் அதிகரிக்கும். பயணங்களைத் திட்டமிட்டுக் கொள்ளுதல் நல்லது.



**கும்பம்:** குடும்பத்தில் கோபதாபங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அலுவலகத்தில் சக ஊழியர் ஒருவரின் செயற்பாடு அதிகம் யோசிக்க வைக்கும். பெரிதுபடுத்திக்கொள்ளாதீர்கள். புதிய தொழில் முயற்சிகளில் கூடுதல் கவனம் தேவை.



**மீனம்:** சில காரணங்களால் மன அமைதி குறையும். குடும்ப உறுப்பினர்களின் செயற்பாடுகள் யோசிக்க வைத்தபோதும், வெளிக்காட்டிக் கொள்ளாதீர்கள். கடன்களில் கூடுதல் கவனம் தேவை. பிறருக்காக மேற்கொள்ளும் பணிகளில் கவனம் இருக்கட்டும்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 9 | 8 | | |
| | 2 | | | 5 | | | 6 | 1 |
| 7 | | | 1 | | | 9 | 2 | 5 |
| 8 | | | 6 | 9 | 3 | | | |
| 6 | 1 | 2 | | | | 3 | 5 | 9 |
| | | | 5 | 1 | 2 | | | 7 |
| 2 | 7 | 9 | | | 1 | | | 8 |
| 4 | 3 | | | 2 | | | 1 | |
| | | 6 | 3 | | | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | 9 | 1 | 5 | 8 | 6 | 2 | 3 |
| 6 | 5 | 1 | 3 | 2 | 9 | 7 | 8 | 4 |
| 8 | 3 | 2 | 4 | 7 | 6 | 9 | 1 | 5 |
| 3 | 1 | 8 | 5 | 9 | 7 | 4 | 6 | 2 |
| 5 | 6 | 4 | 2 | 8 | 3 | 1 | 7 | 9 |
| 2 | 9 | 7 | 6 | 1 | 4 | 3 | 5 | 8 |
| 9 | 2 | 6 | 8 | 3 | 1 | 5 | 4 | 7 |
| 7 | 4 | 5 | 9 | 6 | 2 | 8 | 3 | 1 |
| 1 | 8 | 3 | 7 | 4 | 5 | 2 | 9 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




## புங்குடுதீவு - 5 - கேரநகர் (கேரதீவு)

### அருள்மிகு ஸ்ரீ அரிஹர புத்திர ஐயனார் ஆலயம்

### புனராவர்த்தன அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகம்

நந்தன ஸ்ரீ ஆனி மீ 31 ஆம் உ (15.07.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 08.24 - 10.24

### கிரியா கால நிகழ்வுகள்

நந்தன ஸ்ரீ ஆனி மீ 29 ஆம் உ (13.07.2012) வெள்ளிக்கிழமை காலை 6 மணிமுதல் 7 மணிவரையுள்ள சுக்கிர ஹோரையில் கிரியாரம்பம், மஹா கணபதி பூஜை புண்ணியாகவாசனம், சாந்தி வழிபாடுகள், மாலை 5 மணிமுதல் மஹா கணபதி பூஜை, பூமி பூஜை, ரக்ஷாபந்தனம், கடஸ்தாபனம், கலாகர்ஷணம், யாகபூஜை, அக்னி உத்தமம், பிரதான கும்பம் யாகசாலைப் பிரவேசம், ஹோமங்கள், பூர்ணாகுதி, தீபாராதனை, வேதஸ்தோத்திர பாராயணங்கள், திருவருட்பிரசாதம் வழங்கல், இரவு 8.40 மணிமுதல் 10 -20 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் ஸ்தூபி, தீப, யந்திர பிம்பஸ்தாபனங்கள், அஷ்டபந்தனம்.

நந்தன ஸ்ரீ ஆனி மீ 30 ஆம் உ (14.07.2012) சனிக்கிழமை காலை 8 மணிமுதல் விநாயகர் வழிபாடு, யாகபூஜை,பாவனாபிஷேகம், ஹோமங்கள், விஷேட திரவிய ஹோமங்கள், பூர்ணாகுதி, தீபாராதனை, வேதஸ்தோத்திர, திருமுறை பாராயணங்கள்.

### காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை எண்ணெய்க் காப்புச் சாத்துதல்

மாலை 5 மணிமுதல் விநாயகர் வழிபாடு, யாகபூஜை, தத்துவபூஜை, பச்சிமசந்தானம், ஸ்பர்சாகுதி, பூர்ணாகுதி, தீபாராதனை, வேத ஸ்தோத்திர, திருமுறை பாராயணம், திருவருட்பிரசாதம் வழங்கல்.

நந்தன ஸ்ரீ ஆனி மீ 31 ஆம் உ (15.07.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிமுதல் விநாயகர் வழிபாடு, யாகபூஜை, மஹாபூர்ணாகுதி, தீபாராதனை, வேத ஸ்தோத்திர, திருமுறை பாராயணம், ஆசீர்வாதம், பிரதான கும்பம் உத்தாபனம் காலை 8.24 மணி முதல் 10.24 மணிவரையுள்ள சிங்க லக்கின சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம், மஹாகஸ் நிவேதனம், கும்பாபிஷேக பலசமர்ப்பணம், மங்களத் தசதர்சனம், ஆசீர்வாதம், தொடர்ந்து மஹாபிஷேகம், பூஜை, திருவருட் பிரசாதம் வழங்கல்.

முக்கிய குறிப்பு: புங்குடுதீவு வடக்கு கேரநகர் (கேரதீவு) 5 ஆம் வட்டாரத்தில் நூற்றாண்டுக்கு மேலாக ஆலமரத்தைத் தல்விருக்ஷமாக்கி,வடகடலை நோக்கி கோயில் கொண்டெழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலித்து வேண்டுவார் வேண்டும் வரமளித்து வரும் ஐயனார் சுவாமிகள் ஆரம்பகாலத்தில் சிறுகுடிலில் வீற்றிருந்தார்கள். பின்னர் 30.06.1961 இல் சிறிய கோயில் கட்டி வேல் வைத்து வழிபாடு செய்யப்பட்டு வந்துள்ளது. பின்னர் 12.07.1967 இல் அவ்வாலயத்தில் ஐயனார் சுவாமிகளின் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டு அடியார் பூஜை வழிபாடியற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பு: 15.07.2012 அன்று பகல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்

5 ஆம் வட்டாரம்,
கேரநகர் (கேரதீவு),
புங்குடுதீவு.

ஆலய நிர்வாகசபை

(20256) (45.6.7)

தொடர்பு:தொ.பே.இல. 077 7492 788, 021 321 4341



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் கந்தர் துரைசிங்கம் (JP)

கடந்த (12.06.2012) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் கந்தர் துரைசிங்கம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியை கடந்த (10.07.2012) செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (12.07.2012) வியாழக்கிழமை மதியம் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தோடு நேரிலும், தொலைபேசியிலும் ஆறுதல் கூறியவர்களுக்கும் அவரின் இறுதி வழியனுப்பு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட உறவுகள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible]
இணுவில்.

(20264)(6-7-45)

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிமலரூபனின் சாவுக்கு நியாயம் கோரி கொழும்பில் செவ்வாயன்று ஆர்ப்பாட்டம்



கொழும்பு,ஜூலை12

சிறை அதிகாரிகளினால் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த தமிழ் அரசியல் கைதி நிமலரூபனின் மரணத்துக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நேற்றுமுன் தினம் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அமைப்பு அழைப்பு விடுத்திருந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது மனித உரிமைகள் செயற்பாட்டாளரான உதுல் பிரேமரத்ன சிங்கள மக்கள் மத்தியில் இன வெறியைத் தூண்டி அரசு அரசியல் நடத்தி வருவதாகக் குற்றஞ் சாட்டினார்.

கடந்த 4 ஆம் திகதி இறந்த நிமலரூபனின் பிரதே பரிசோதனை அறிக்கை இதுவரை வெளியிடப்படவில்லை. இந்தச் செயலானது, அவரது மரணம் கொலையே என்பதை உறுதி செய்கிறது. அது மட்டுமன்றி நிமலரூபனின் பெற்றோரை ஊடகவியலாளர்கள் சந்திப்பதற்கும் தடையாக உள்ளது. அத்துடன் அவர்களைப் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.

நிமலரூபனின் கொலையை வெளிக் கொண்டுவரும் அதேசமயம் சிறைகளில் தமது வாழ்க்கையைக் கழித்துவரும் தமிழ் கைதிகளின் விடுதலைக்காக நாம் தொடர்ந்தும் போராடுவோம் - என்றார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் பலர் கட்சி, மத,பேதம் பாராது கலந்து கொண்டதுடன், அரசுக்கு எதிரான தமது எதிர்ப்பலைகளையும் வெளிப்படுத்தினர். (ச)

# ஆள்கடத்தல்களைத் தடுக்க முப்படையினரும் களத்தில்

## இராணுவப் பேச்சாளர் கூறுகிறார்



கொழும்பு,ஜூலை 12

சட்டவிரோதமாக இலங்கையிலிருந்து ஆள்களை கடத்துவதை தடுப்பதற்கான நடவடிக்கையொன்றை பொலிஸாரும் முப்படையினரும் இணைந்து முன்னெடுத்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வனிகசூரிய தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையிலிருந்து கடல் மார்க்கமாக இத்தாலி மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு ஆள்களைக் கடத்தும் கும்பல்களைத் தேடி புலனாய்வுத் துறை பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினர், கடற்படையினர், விமானப் படையினர் ஆகியோர் கூட்டு நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் 9 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை சுமார் 200 இற்கும் மேற்பட்டவர்கள் ஆஸ்திரேலியா செல்ல முற்பட்டவேளையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் கடல் மார்க்கமாக ஆஸ்திரேலியா அனுப்புவதற்கு முற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 16 முகவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முப்படையினர், பொலிஸ் மற்றும் புலனாய்வுத் துறையினரின் உதவியுடன் தமது நடவடிக்கைகள் மூன்று பிரிவுகளாக முன்னெடுக்கப் படும்.

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்கு அனுப்புவதாகக் கூறி பணம் சேகரிக்கும், மற்றும் பயண ஏற்பாடுகளை மேற்கொள்ளும் நபர்கள் மற்றும் இதற்கு துணைபோகும் நபர்கள் தொடர்பாக நாட்டுக்குள் புலனாய்வுப் பிரிவு, பொலிஸ், இராணுவம் என்பன தமது நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

**இந்த ஆண்டில் இருந்து சட்ட விரோதமாக ஆஸ்திரேலியா செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித் துள்ளது.**

இவ்வாறான ஒரு நடவடிக்கையின் ஊடாகவே நேற்றுமுன்தினம் இரண்டு ஆழ்கடல் வள்ளங்கள் திருகோணமலைக்கு தென்கிழக்கே கைப்பற்றப்பட்டன.

2012 ஆம் ஆண்டில் இருந்து சட்ட விரோதமாக ஆஸ்திரேலியா செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பலரும் பல லட்சங்கள் கொடுத்து ஆழ்கடல் வழியாகச் செல்வதற்கு முற்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்வதற்காக படகுகளில் ஏறி கடற்படையினரால் கைதான சுமார் 50இற்கும் மேற்பட்டோர் இன்னும் தடுப்புக் காவலில் உள்ளனர்- என்றார். (ச)

## சட்டவிரோத ஆள்கடத்தலுடன் தொடர்புடையவர் கைது

கொழும்பு, ஜூலை12

சட்டவிரோத ஆள்கடத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நபர் ஒருவரை கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சர்வதேச விமான நிலையங்களின் ஊடாக சட்டவிரோதமான ஆள்கடத் தல்களை மேற்கொள்ளும் நடவடிக்கை தொடர்பான தகவல்களும் அம்பலமாகியுள்ளன.

சீனாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட நபர் ஒருவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் மூலம் இந்த விடயங்கள் அம்பலமாகியுள்ளன.

பல்வேறு நாடுகளின் வழியே பிரான்ஸூக்குச் செல்ல முற்பட்ட நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (ச)

# தேர்தல் வெற்றியை மக்களே தீர்மானிப்பர்

## கூட்டமைப்பைக் குறைத்து மதிப்பிடவில்லை என்கிறார் பஸில்



கொழும்பு, ஜூலை12

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் வெற்றி குறித்து தற்போது கூற முடியாது. அது மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடுவதை அரசு குறைத்து மதிப்பிடவில்லை என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பில் கருத்துத்தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் முதலமைச்சர் யார் என்பதை கணித்துக் கூற முடியாது. அதனை கிழக்கு மக்களே தீர்மானிக்க வேண்டும்.

கிழக்கு மாகாண சபையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து போட்டியிடும் என்றே நம்புகின்றோம். அது ஆளும் கூட்டணியின் பங்காளிக் கட்சியாகும்.

ஏற்கனவே ஆளும் கட்சியுடன் இணைந்து கிழக்குத் தேர்தலில் போட்டியிடுவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் நிபந்தனைகளை அரசுக்கு விதித்துள்ளதாக இதுவரை தெரியவரவில்லை. எவ்வாறெனினும் நம்பிக்கையுடன் நாங்கள் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இந்தமுறை கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்றது. நாங்கள் இதனை ஆழமான விடயமாகவே நோக்குகின்றோம்.

கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல்களில் அரசு மிகவும் நம்பிக்கையுடனேயே களமிறங்குகின்றது- என்றார். (ச)

## கத்திக்குத்தில் ஒருவர் சாவு

கொழும்பு,ஜூலை 12

மாவத்தகம பொலிஸ் பிரிவில் பறகஹதெனிய என்ற இடத்தில் நேற்றுமுன் தினம் இரவு 10 மணிக்கு இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் இலக்காகி நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கத்திகுத்துக்கு இலக்கான நபர் மாவத்தகம மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்று மாவத்தகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் பறகஹதெனிய கதுருவகங்க என்ற இடத்தைச் சேர்ந்த சித்தீக் என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

## காலி சிறைக்குள் 44 கைப்பேசிகள்

கொழும்பு,ஜூலை12

காலி சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையில் 44 கையடக்கத் தொலை பேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இந்த திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் சோதனை நடத்தப்பட் டுள்ளது.

இந்தச் சோதனையின் போது நவீன தொழிநுட்பத்துடன் கூடிய மூன்று கையடக்கத் தொலைபேசிகளும் மீட்கப்பட்டது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

# கீழ்த்தரமாக நடப்போருக்கு சு.கட்சியில் இடமில்லை

## உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை 12

பாலியல் வன்முறைகள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு கட்சியில் இடமில்லை. இவ்வாறான குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்கள் கட்சியில் இருந்து தூக்கி வீசப்படுவார்கள் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுடனான கூட்டம் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் அன்றாடம் இடம்பெறும் பாலியல் வன்முறைகள், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

தனிப்பட்ட முறையில் பொலிஸார் மட்டும் இந்தக் குற்றச் செயல்களைத் தடுத்து விட முடியாது. பொறுப்புள்ள அமைச்சர்கள் மற்றும் அமைப்பாளர்கள் பொறுப்புடன் தமது பங்களிப்பை வழங்க வேண்டும்.

தினசரி ஊடகங்களும் பத்திரிகைகளும் இவ்வாறான விடயங்களை வெளிப்படுத்தி வருகின்றன.

சில அரசியல்வாதிகளும் பிரமுகர்களும் கீழ்த்தரமான செயல்களில் ஈடுபட்டதாகத் தெரிவித்து நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன.

இவ்வாறானவர்களுக்கு கட்சியில் இடமில்லை. எந்த ஒரு தேர்தலிலும் பங்கு பெறவோ, கட்சியின் சார்பில் போட்டியிடவோ அனுமதிக்க மாட்டேன்.

பெரியவர்கள், சிறியவர் [illegible] [illegible] என்றார். (ச)

# அரசுடன் போட்டியிட கடும் எதிர்ப்பு; மீண்டும் நாளை கூடுகிறது மு.கா.

## திணறுகிறார் ஹக்கீம்

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணைந்து போட்டியிடக்கூடாது என்ற வாதம் நேற்றுமுன்தினம் கட்சியின் உயர்பீடக் கூட்டத்தில் ஓங்கி ஒலித்ததால், கிழக்குத் தேர்தலில் தமது நிலைப்பாடு என்னவென்பதுதொடர்பில் இறுதி முடிவை எட்டாத நிலையில் முஸ்லிம் காங்கிரஸின் அதி உயர்பீடக் கூட்டம் நாளை வெள்ளிக் கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அரசுடன் இணைந்து போட்டியிடுவதா அல்லது அரசிலிருந்து வெளியேறி தனித்துப் போட்டியிடுவதா என்பது தொடர்பில் இறுதியானதொரு முடிவை எடுக்கும் நோக்கில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதி உயர்பீடக் கூட்டம் நேற்றுமுன்தினம் கட்சியின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் அவசரமாகக் கூடியது.

கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், கிழக்குத் தேர்தல் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன், அது குறித்து உறுப்பினர்களின் கருத்துகளும் கேட்டறியப்பட்டது.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அரசுடன்இணைந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடக்கூடாது என்ற வாதத்தை இதன்போது முன்வைத்துள்ள பெரும்பாலான உறுப்பினர்கள் அதற்கான காரணங்களையும்விளக்கியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களின் காணிகளும் வகைதொகையின்றி சுவீகரிக்கப்படுகின்றமை, மதம் சம்பந்தப்பட்ட விடயங்களில் அநீதி இழைக்கப்படுகின்றமை உட்பட தமது சமூகம் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளை கட்சி தலைமையிடம் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன், இவ்வாறானதொரு சூழ்நிலையில் அரசுடன் இணைந்து போட்டியிடுவது உகந்தவிடயமல்ல. தமது சமூகத்தைக் கருத்திற்கொண்டு தேர்தல் குறித்து உறுதியான முடிவொன்றை எடுக்கவேணடுமெனவும் அவர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

மு.காவின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்கும் நிலைப்பாட்டில் அரசு இல்லை என்ற கருத்தே தற்போது நிலவுகின்றது என்ற விடயத்தை இச்சந்திப்பின்போது சுட்டிக் காட்டியுள்ள அதி உயர்பீட உறுப்பினர்கள் கிழக்குத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதே சிறந்தது என்ற தொனியில் கருத்துகளை வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை, சில உறுப்பினர்கள் தேர்தல் குறித்து ஆழமாகப் பரிசீலிக்க வேண்டியுள்ளது எனக் கருத்துவெளியிட்டதால் கூட்டத்தில் காரசாரமான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

அதி உயர் பீடக் கூட்டத்தில் காரசாரமான கருத்துப் பரிமாறல் கள் இடம்பெற்றதால் கிழக்குத் தேர்தல் குறித்து கூட் டத்தில் இறுதியானதொரு முடிவை எட்ட முடியாமல் போனது. இதனையடுத்து உயர்பீடக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை மீண்டும் கூடுகிறது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார் விற்பனைக்கு

Toyota, ALLION NZT 240 year 2003,KD தொடர் இலக்க வைத்தியரின் பாவனையில் உள்ள கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 071 834 9035

(20233)(5-6-7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## விற்பனை முகாமையாளர்/சிட்டை எழுதுநர்/விற்பனையாளர்

யாழ். நகரில் இயங்கிவரும் பிரபல்மான மாபிள் காட்சியறைக்கு (Tiles Show Room) கீழ்க்காணும் பதவிகளுக்கு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.ஆர்வமுள்ளவர்கள் கீழ்க்குறிக்கப்பட்ட முகவரிக்கு சுயவிவரக்கோவைகளுடன் 16/07/2012 க்கு முன் விண்ணப்பிக்கவும். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**01.விற்பனை முகாமையாளர் (Show room sales manager)**
(40 வயதுக்கு மேற்பட்ட அனுபவமுள்ளவர்கள்)

**02.விற்பனையாளர் (Sales man)**
(விற்பனைத்துறையில்அனுபவமும் இளமைத்துடிப்புமுள்ள இருபாலாரும்)

**03. சிட்டை எழுதுனர்.**

விளம்பர இலக்கம்: 4375,
பே.பா.: உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(c/1406)(2-6-7)

## கண்ணீர் அஞ்சலி

எமது துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணிபுரியும் கலாநிதி செவ்வேள் அவர்களின் அன்புத் தந்தை **ஜெ.பத்மநாதன்** அவர்கள் *11.07.2012* நேற்று காலமானார். அவரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**தாவரவியல் துறையினர், யாழ்.பல்கலைக்கழகம்.**

(f/20241)(2-6-7)

## யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்
## நன்றி கூறுகின்றோம்

கடந்த 07.07.2012 ஆம் திகதி இடம்பெற்ற எமது நிறுவனத்தின் வெள்ளிவிழா திருப்திகரமாக நிறைவேறுவதற்கு ஒத்துழைப்பு நல்கிய சகலருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக. குறிப்பாகக் கடந்த 11.06.2012 ஆம் திகதி முதல் 18.06.2012 ஆம் திகதிவரையிலான காலத்தில் இடம்பெற்ற கொடிவாரம் சிறப்பான முறையில் நடந்தேறுவதற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கிய கௌரவ வடமாகாண ஆளுநர், மாகாண கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் போன்றோருக்கும் விசேடமாக எமது ரிக்கற்றுக்களைப் பெற்று நிதியுதவி வழங்கிய தாராள சிந்தையுள்ளவர்களுக்கும் ரிக்கற்றுக்களை விற்பனை செய்துதவிய எமது அபிமானிகளுக்கும் ஆர்வலர்களுக்கும் சிரமம் பாராது வெள்ளிவிழா தினத்தன்று எம்மால் ஏற்பாடு செய்யப்பட்ட சகல விளையாட்டுப் போட்டிகளிலும் ஆர்வமுடன் பங்குபற்றிய எமது நிறுவனப் பயனாளிகளுக்கும் வெள்ளிவிழா தொடர்பான சகல செய்திகளுக்கும் விளம்பரங்களுக்கும் முன்னுரிமை வழங்கி அவற்றை இலவசமாகப் பிரசுரித்துதவிய பத்திரிகை நிறுவனங்களுக்கும் அதற்கு அனுசரணையாகச் செயற்பட்ட பிரதம ஆசிரியர்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**- முகாமைத்துவக் குழு,**
**யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனம்.**

(சி/1435) (2-6-7)

## சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம்
Centre For Child Development

### பதவி வெற்றிடம்

**01.கணக்கு உதவியாளர்** (Account Assitant)

**தகைமைகள்:-**

01 க.பொ.த(உ/த)கணக்கியல் பாடத்தில் சித்தியடைந்தவராகவும்.அல்லது HNDA தகைமைச்சான்றிதழ் உடையவராகவும் இருப்பதுடன். கணக்கு பதிவேடுகளை மேற்கொள்ளக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்

02. வயது (20-35 வயதுக்கு உட்பட்டவர்கள்)

03. துறைசார் அனுபவம் இருப்பின் விரும்பத்தக்கது

**02. ஆவணப்படுத்தல் உத்தியோகத்தர்** (Documentation Officer)

**தகைமைகள்:-**

01 க.பொ.த(உ/த)கல்வித்தகைமையுடன். இப்பணியில் 3 வருடங்களுக்கு குறையாத அனுபவம் உடையவராகவும் ஆங்கில மொழியில் ஆவணங்கள் அறிக்கைகள் தயாரிக்கும் ஆற்றல் உடையவராகவும் இருத்தல் வேண்டும்

02. வயது
(65 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்)

**03. தொழில்நுட்ப உதவியாளர்** (Technical Assistant) Construction work

**தகைமைகள்:-**

01. தொழில்நுட்பசேவையில் 02 வருடத்திற்கு குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்

02. வயது
(50 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்)

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான விண்ணனப்பங்களை கீழ் வரும் முகவரிக்கு 25.07.2012 முன் தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்

**திட்டச் செயலாளர்,**
**சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம்**
**60A, பழைய பூங்கா வீதி,**
**சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்**

மின்னஞ்சல் முகவரி- cfcd10@ gmail.com

குறிப்பு:-தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்

(20236) (2-6-7)

# மக்கள் வங்கி
## வவுனியா கிளை
## கேள்வி அறிவித்தல்

வடமாகாணம் யாழ்மாவட்டம் பருத்தித்துறை சந்தைக்கு அருகாமையில் பஸ் நிலையம் முன்பாக வர்த்தக வணிக வியாபார நிலையங்கள் அமைக்கக்கூடிய பெறுமதி மிக்க ஆதனம் (02 பரப்பு – 00.11 குளி)

| கிளை | காணியின் விவரணம் | ஆதனத்திற்கு செல்லும் வழி | தொ.பே.இல |
|---|---|---|---|
| வவுனியா கிளை | உத்தரவு பெற்ற நில அளவையாளர் வி.ர.தங்கமயில் அவர்களால் அளந்து வரையப்பட்ட 2005-11ம் இலக்க 02.02.2005ம் திகதிய வரைபடத்தில் வடமாகாணம் யாழ். மாவட்டம் வடமராட்சி பிரதேச செயலாளர் பிரிவு பருத்தித்துறை நகர சபை , பருத்தித்துறை, இறைவென்றிபாகு தேவன் குறிச்சி, பருத்தி துறைபால் அமைந்திருக்கும் "**நறுவலியடி**" என்றழைக்கப்படும் ஆதனம். இவ்வாதனத்தில் எல்லைகள் வடக்கு வீதி, கிழக்கு பருத்தித்துறை சந்தை மற்றும் வரதமகள் கடை மேற்கு வீரபத்திரர் கோவில், தெற்கு ஒழுங்கை விஸ்தரணம் பரப்பு-02 குளி - 00.11 | இவ்வாதனம் பருத்தித்துறை பட்டின சபை 3ம் வட்டாரம் பத்திர காளி ஒழுங்கை வரிமதிப்பீட்டு இல:41 இல் பருத்தித்துறை பஸ் நிலையம் முன்பாக சந்தைக்கு அருகில் உள்ளது. | 024 - 222 2972<br>024 - 222 5054 |

கேள்வி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான முடிவுத்திகதி 2012ம் ஆண்டு ஜுலை மாதம் 17ம் திகதி பி.ப 2.00 மணி

## நியதி நிபந்தனைகள்

1. கேள்விப்பத்திரங்களையும் கேள்விகளுக்கான நியதி நிபந்தனைகளையும் பெற விரும்பும் கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபாய் 1,000/= இனை செலுத்தி 17.07.2012 பி.ப 2.00 மணிக்கு முன்பதாக இல-149, குட்செட் வீதி, வவுனியாவில் அமைந்துள்ள மக்கள் வங்கி வன்னிப்பிராந்திய தலைமை அலுவலகத்தில் அல்லது இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி யாழ்ப்பாண தலைமை அலுவலகத்தில் அல்லது வீரவாகு கட்டடம், பருத்தித்துறையில் அமைந்துள்ள மக்கள் வங்கி, பருத்தித்துறை கிளையில் பெற்றுக்கொள்ளலாம். இக் கேள்விப் பத்திரங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2 .ஒவ்வொரு கேள்விப் பத்திரமும் சமர்ப்பிக்கப்படும் போது மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக ரூபாய் 10,000/= இனை மக்கள் வங்கி வவுனியாக் கிளையின் 'Margin A/C' இல் செலுத்தி அதன் பற்றுச்சீட்டின் போட்டோ பிரதி இணைக்கப்படல் வேண்டும். ஏற்றுக்கொள்ளப்படாத கேள்விதாரரின் வைப்புப்பணம் விற்பனையின் பின்னர் மீளளிக்கப்படும். ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரர் கேள்வித் தொகையில் 10% இனை கேள்வி ஏற்கப்பட்டது தொடர்பான அறிவித்தல் கிடைக்கப்பெற்று 15 தினங்களுக்குள் செலுத்த வேண்டும். மிகுதியை 30 தினங்களுக்குள் செலுத்த வேண்டும்.

3. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "பருத்தித்துறையில் அமைந்துள்ள ஆதனம்" என எழுதப்பட்டு பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமை அலுவலகம் யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 17.07.2012 பி.ப 2.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது கேள்விப்பத்திரங்கள் நேரடியாக இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள மக்கள் வங்கி யாழ்ப்பாண பிராந்திய தலைமை அலுவலகத்தில் கையளிக்கப்படவேண்டும்.

4. மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய பூர்த்தி செய்யப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

5. கேள்விப்பத்திரங்கள் 17.07.2012 பி.ப 3.15 மணிக்கு மக்கள் வங்கி பிராந்திய தலைமை அலுவலகத்தில் விதந்துரைக்கபட்ட தெரிவுக்குழுவொன்றின் முன்னிலையில் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர்கள் அல்லது கேள்விதாரராய் அங்கீகரிக்கப்பட்டவர்கள் மாத்திரம் சமுகமளிக்கலாம்.

6. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையுமோ ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ தெரிவுக் குழுவிற்கு உரிமை உண்டு.

7. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரர் முழுப்பணத்தையும் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் செலுத்த தவறின் வைப்புத் தொகையான ரூபாய் 10,000/= உட்பட ஏனைய வைப்புகளையும் இழக்க நேரிடும்.


8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரர் குறித்த ஆதனத்தின் நிலைப்பாடு பற்றி திருப்தியடைந்தவராக இருக்க வேண்டும் என்பதுடன் மதிப்பீட்டு வரிகள் மற்றும் ஏனைய வரிக்கொடுப்பனவுகள் நிலுவையாக இருக்கும் பட்சத்தில் அவற்றை செலுத்துவதற்கு சம்மதிக்க வேண்டும்.

9. உரித்து உறுதிகளையும் வேறு ஆவணங்களையும் மக்கள் வங்கியின் வன்னிப் பிராந்திய தலைமை அலுவலகத்தில் பார்வையிடலாம். விண்ணப்பிக்க முன் கேள்விதாரர் ஆதனத்தின் உரித்துடைமையில் பூரண திருப்தியடைந்தவராக இருக்க வேண்டும்.

**பிராந்திய முகாமையாளர்**
**பிராந்திய தலைமை அலுவலகம் (வன்னி)**
**இல: 149, குட்செட் வீதி,**
**வவுனியா.(தொ.பே.இல.:024 222 2972)**

(சி/1432)(5-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத் துடன்கூடிய காலநிலை நிலவும்.

### தேவாரத்தொகுப்பை இலவசமாகப் பெறலாம்

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் நான்காவது குருபூசை தினத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தால் வெளியீடு செய்யப்பட்ட திருநாவுக்கரசு சுவாமிகளின் தேவாரத் தொகுப்பு நூலை ஆலயத்தில் தொடர்பு கொண்டு இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம் என ஆலய நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயங்கள், பாடசாலைகள், நூல் நிலையங்கள், சமயநிறுவனங்கள் போன்றன இந்நூலை பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து ஆலயத்தலைவரிடம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும். (வ-36)

# செங்கல்பட்டு முகாம் முற்றுகை

## சீமான் உட்பட ஐநூறுக்கும் மேற்பட்டோர் கைது



செங்கல்பட்டு சிறப்பு முகாம் முன்பு முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்ட சீமான் உள்ளிட்ட 500இற்கும் மேற்பட்டோரை பொலிஸார் கைது செய்தனர்.

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டிருந்த இலங்கை தமிழ் அகதிகள் தங்களை திறந்த வெளி முகாம்களுக்கு மாற்றக் கோரி நீண்ட நாள்களாகவே போராடி வருகின்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு இக்கோரிக்கையை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்த அகதிகளிடம் கியூ பிரிவு பொலிஸ் அதிகாரி சம்பத்குமார் நடத்திய பேச்சுக்குப் பின்னர் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

இந்த நிலையில் நேற்று புதன்கிழமை செங்கல்பட்டு சிறப்பு முகாம் முன்பு முற்றுகை போராட்டம் நடத்தப்படும் என்று நாம் தமிழர் கட்சி அறிவித்திருந்தது.

இதன்படி நேற்றுக் காலையில் சிறப்பு முகாமை முற்றுகையிட்டு போராட்டம் நடத்துவதற்காக நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் தலைமையில் சுமார் 500 பேர் அங்கு திரண்டனர்.

செங்கல்பட்டு, பூந்தமல்லி சிறப்பு முகாம்களை மூடக்கோரி அவர்கள் முழக்கங்களை எழுப்பினர். அப்போது அங்கிருந்த பொலிஸார் சீமான் உட்பட அனைவரையும் கைது செய்தனர்.

இவர்கள் அனைவரும் அங்குள்ள வேலு திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் அனைவரும் மாலையில் விடுவிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. (வ)

முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின்

# தூக்குத் தண்டனைக்கு எதிரான வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளிகள் மீதான வழக்கு விசாரணை மீண்டும் நேற்று முன்தினம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக் கில் குற்றவாளிகளான முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்கு தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்தத்தூக்குத் தண்டனையை எதிர்த்து தாக்கல் செய்யப் பட்டுள்ள வழக்கு தற்போது விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று முன்தினம் அறிவிக்கப்படும் என்று ஏற்கனவே கூறப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்கு விசாரணையை உச்ச நீதிமன்றம் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளது. (வ)

## புலன்களைக் கட்டுப்படுத்தல் வேண்டும்

மனக்கட்டுப்பாடின்றி மனிதன் ஒரு கணப்பொழுதும் அமைதி காணமுடியாது. அமைதியான, ஆனந்தமான வாழ்க்கை வாழ்ந்திட விரும்புகிறவர் புலனுணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். இந்தப் ''புலனடக்கம்'' இல்லாததினால்தான் மனிதன் இன்று அமைதியற்று இருக்கிறான். இன்று மனிதன் கவலைகளுக்குட்பட்டு அமைதியை இழந்திருக்கக் காரணம் அவனிடம் குடிகொண்டுள்ள கணக்கற்ற ஆசைகளே. மனிதனின் இந்த மனோநிலைக்கு உலகத்தை குறை கூறுவது சரியானதல்ல.

உலகத்துடனும், குடும்பத்துடனும் தனது பற்றுதலினால்தானே கட்டுண்டு விடுகிறான் மனிதன். இப்படிப்பட்ட பற்றுதலிலிருந்து விடுபட வேண்டுமானால், வெளிப்பொருள்களினால் பாதிக்கப்படுவதைக் குறைக்க வேண்டும். அதற்குக் கண், காது, நாக்கு இவை மூன்றையும் கட்டுப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபடவேண்டும்.

நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது



சாயி சிந்தனை

## சமய சந்நிதிகளில்

நவாலி வடக்கு தோற்றா மரத்தடி ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தின் சித்திரைக் கஞ்சித் திருமடத் திறப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் அருளாசி உரையை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளும், வாழ்த்துரைகளை செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், மதுரகவி காரை எம்.பி.அருளானந்தம், சண்டிலிப்பாய் பிரதேச செயலளர் எஸ்.முரளிதரன் ஆகியோரும் நிகழ்த்துவர். அத்துடன் அன்றைய தினம் முற்பகல் 10.45 மணிக்கு கலாநிதி இராசையா ஸ்ரீதரன் நிகழ்த்தும் தேவாரத் திருமுறைத் தேனமுதகானம் நிகழ்வும் இடம்பெறும். (வ-14)

* * *

ஊரெழு கிளானைப் பதி மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன. இடம்பெறும் திருவிழாக் காலத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (வ-14)

வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம், நல்லூர் செட்டித் தெருவில் சகல நவீன வசதிகளுடன் கூடிய புத்தம் புதிய மேல்மாடி வீடு வாடகைக்கு விடப்படும். நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:-
021 222 9151
(சி/1433) (2-6-7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

வீடு வாடகைக்கு

ஓட்டுமடம், மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள நான்கு அறைகள் கொண்ட விலாசமான வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:- 0711678121
(சி/1437) (2-6-7)

காணி விற்பனைக்கு

கொடிகாமம் மிருசுவில் A9 பாதையில் இருந்து 300 யார் ஒழுங்கையில் 75 பரப்பு காணி கிணற்றுடன் விற்பனைக் குண்டு. (தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்)
(20238) (5-6-7) தொடர்பு: 077 247 4740

NDB Savings Star Plus
சேமிப்பு கணக்குகளுக்கும்
10%*
அதி உயர் வட்டியைத் தருவது NDB
ரூ.50,000/- இற்கு மேற்பட்ட வைப்புகளுக்கு மட்டுமே.
(சி/1305)
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது. வ.செ.வ. 10.47% அழையுங்கள் 011 2 448 888 (3-6-7)
நெஷனல் டிவலப்மென்ட் பேங்க் பிஎல்சி ஆனது, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும். AA (lka) Fitch Rating
NDB வங்கி

## மரண அறிவித்தல்

### ஜெர்மையா பத்மநாதன்

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர், முல்லைத்தீவு)



சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஜெர்மையா பத்மநாதன் நேற்று (11.07.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திய கலாநிதி ஜெர்மையா - சிவகாமியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பு - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், கலாநிதி சிதம்பரநாதன் (நியூசிலாந்து), சிவபாக்கியம் (நியூசிலாந்து), காலஞ்சென்ற சீதாதேவி மற்றும் கமலாதேவி, விஸ்வநாதன் (மேல் நீதிமன்ற ஆணையாளர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கலாநிதி செவ்வேள் (சிரேஸ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக் கழகம்), சிவஞானவேல் (முகாமை உதவியாளர், பிரதேசசபை, வேலணை) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிஷாந்தினி (ஆசிரியர், கோண்டாவில் இந்துமகா வித்தியாலயம்), லக்ஷிதா (முகாமை உதவி யாளர், பிரதேச சபை, நல்லூர்) ஆகியோரின் அன்பு மாமனும், பிரணவி, நர்த்தவி, அருணன், சங்கவி ஆகியோரின் அன்புப் பேரனும், ரட்ணாதேவி, வைத்திய கலாநிதி வைத்தீஸ்வரன் பசுபதி, வைத்திய கலாநிதி கெங்காதரன் (வண்.மேற்கு வைத்தியசாலை), காலஞ்சென்ற வைத்திய கலாநிதி சண்முகராஜன் மற்றும் ரஞ்சினி (சட்டத்தரணி), செல்வராணி, சிவசுப்பிரமணியம், தமயந்தி, காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், கிருஸ்ணமூர்த்தி மற்றும் கோசலை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.07.2012) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

28 (30), சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(சி/1436) (2-6-)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொலைபேசிப் பாவனையால் அதிகம் பாதிக்கப்படுவது... ஆண்களா? பெண்களா?

**கைத் தொலைபேசியால் அதிகம் பாதிக்கப்படுவது ஆண்களேயாகும். படிக்கும் வய தில் தேவையற்ற ஆசைகள், எண் ணங்களை வளர்க்கவும் இது காரணமாக அமைந்து விடுகிறது.**



நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் 21 ஆம் நூற்றாண்டில் கைத்தொலைபேசி என்பது ஒரு முக்கியமான அத்தியாவசியத் தேவைக்கான பொருளாகவே கருதப்படுகின்றது. இது ஆரம்ப காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டதன் காரணம் தேவையான சந்தர்ப்பங்களில் அருகில் இல்லாத ஒரு நபரை அழைத்து பேசுவதற்காகவே என்பதனை நாம் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆனால் இன்றைய காலகட்டத்தில் கைத் தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டதன் நோக்கத்தினைத் தவிர மற்றைய அனைத்து வகையான தேவையற்ற நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

அத்தோடு இதில் முக்கியமான விடயம் என்னவெனில் இதன் மூலமாக அதிகம் பாதிக்கப்படுவது ஆண்களேயாகும். படிக்கும் வயதில் தேவையற்ற ஆசைகள், எண்ணங்களை வளர்க்கவும் இது காரணமாக அமைகின்றது. இதற்கான காரணம் கைத் தொலைபேசிகளில் தேவையற்ற அதிகளவான வசதிகள் கண்டுபிடிக்கப்பட்டமையே ஆகும். இதன் காரணமாக தேவையற்ற படங்கள், வீடியோக்களை இணையத்தின் மூலமாக தரவிறக்கம் செய்து கைத் தொலைபேசிகளில் வைத்திருப்பதும், அத்தோடு மட்டுமல்லாது அதனை சக நண்பர்களுக்கும் பல்லூடக தகவல் பரிமாற்று வசதி மூலம் தெரியப்படுத்தி அதனை அரங்கேற்றி தங்களைத் தாங்களே அழித்து கொள்கிறார்கள். ஒருவர் தான் வீணாகுவது மட்டுமல்லாது தம்முடன் சேரும் மற்றவர்களையும் வீணாகக் கெடுத்து வருகிறார்கள், படிக்கும் வயதில் கல்வியில் ஆர்வம் குறைவதற்கும் இது ஒரு மிகப் பெரிய காரணமாக அமைவது மிகவும் மன வேதனைக்குரியதாகும்.

பெண்கள் தங்களோடு படிக்கும் சக ஆண் மாணவர்களுக்கு குறுந்தகவல் அனுப்புவது தவறான அழைப்பு கொடுப்பது போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதால் அதிகமாக இளவயது ஆண் களின் எதிர்கால வாழ்க்கை பாழாகக் காரணமாகிறது.

நகர்ப்புறங்களில் உள்ள சில பெண்கள் அப்பாவியான ஆண்களின் கைத்தொலைபேசிகளுக்கு அழைப்பை ஏற்படுத்தி அவர்களின் மனதில் தேவையற்ற வீணாண ஆசைகளை வளரவிட்டு பின்னர் ஏமாற்றி விடுகின்றனர்.

தற்போது இவ்வாறான சந்தர்ப்பங்கள் அதிகம் காணப்படுகிறன.

முக்கியமாக இளவயதுப் பிள்ளைகளுக்கு அவர்களது பெற்றோர்கள் கைத்தொலைபேசி வாங்கிக் கொடுப்பது இன்றைய நாட்டு சூழ்நிலையில் எந்த நேரமும் தேவையான போது அவர்களுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்வதற்காகும்.

ஆகவே நாட்டின் எதிர்காலத்தை இளம் சமுதாயம் மனதில் வைத்து சீர்கெடாமல் இருக்க நல்ல வழியில் செல்ல வேண்டியது அவசியம். அதுவே நாம் நம்மை பெற்ற பெற்றோருக்கு வழங்கக் கூடிய மிகப் பெரிய வெகுமதி ஆகும்.

கஜனி.சிவா
திருநெல்வேலி.

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

கைத்தொலைபேசி பாவனையால் அதிகம் பாதிகப்படுவது ஆண்களா? பெண்களா?

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.



## தமிழ்



தாய்க்குப்பின்
தமிழாக இருந்த தமிழ்
சேற்றுக்குள் புதையுண்டு
தலை மட்டும் வெளியுண்டு
தமிழுக்கு ஏன் இந்த நிலை
தாயை வைபவனும்
தமிழை கொல்பவனும்
தரணியில் தங்கிட தகுதியற்றவர்
தமிழனாக நீ இருந்தால்
தமிழ் என்று சொல்லிப்பார்
இதுவரை காணாத தமிழனின்
வீரம் இறுதிவரை காண்பாய்
ஈனப் பிறப்புக்கள் சிலவுண்டு
அவை கட்டுக்குலையாத
மெட்டழகி தமிழக்கு
புதியதோர் இலக்கணம்
பொய்யாய் பேசிடும்
தெள்ளியதோர் பாலின் தூய்மை
கொண்ட தமிழ் சங்கத்தமிழ்
தேன் சொட்டும் தமிழிருந்தும்
காளையரை கண்டவுடன்
மெல்லிடையாள் மங்கையவள்
மெல்லென கூவிடும்
மெல்லிய வார்த்தையில்
வெள்ளையன் விட்டதோர்
விசத்தை சேர்க்கின்றாள்
ஆடவர் மட்டும் குறைவுண்டோ
தமிழ் கொல்வதில் துணையுண்டே
மானம் கெட்டவரே தமிழிலே பேச உமக்கு
நாணம் தலை வருமோ.
நீ வெட்கம் கொள்ள தமிழ் என்ன
உன் மணப்பெண்ணோ
வீரத்தின் விளைநிலம் தமிழ்
பண்பாட்டின் புகலிடம் தமிழ்
தமிழனின் பிறப்பிடம் தமிழ்
வீணான வஞ்சத்தை
விட்டெறிவீர் தமிழினமே
தானாக பேசிடு
தமிழ் மொழியை அனுதினமும்
ஆண்டாண்டு காலமாக
ஆதரித்து வந்த தமிழ்
முந்தையதோர் காலத்தில்
மூத்தென்று வித்திட்டார்
பண்டிதர்கள் பலர் சேர்ந்து
முளைக்கவைத்த வித்துக்கள்
இன்றும் முளையாயே நிற்கிறது
முத்தாக வழியுண்டோ

விமல்ராஜ்
சிறுப்பிட்டி மேற்கு

## மரணத்தின் விளிம்பில்...

*மரணத்திற்கு அழைப்புக்*
*கொடுக்கிறவனே*
*நில்!*
*உன் ஆயுள்ரேகையினை*
*அழிக்காமல்....*
*ஒரு முறை சிந்தி....*
*இரவு இடம் கொடுக்கவில்லை*
*என்பதற்காக*
*காலையில் சூரியன் உதிக்கவில்லையா?*
*பெண்களின் கூந்தலில்*
*சூடப்படாமல் காத்திருக்கும் அரலிப்பூ*
*தினம் தினம் பூக்கவில்லையா?*
*தங்கத்திற்கு நாம் கொடுக்கும்*
*மதிப்பிற்காக*
*இரும்பு என்றும் இளைத்துப்*
*போவதில்லை*
*தோல்விகள் என்றும் நிரந்தரமில்லை*
*மனதில் ஏற்பட்ட காயத்திற்கு*
*தற்கொலை என்பது மருந்தல்ல*
*இன்று முதல்*
*தோல்விகளையும் உபசரிக்க*
*பழகிக்கொள்*
*தோல்வி என்பது அதிஷ்டமின்மை*
*அல்ல*
*இயலாமையின் மறுபக்கம் தான்*
*மின்சாரம் இல்லையென்றால்*
*விளக்கு ஏற்ற வேண்டுமே தவிர*
*நம் கண்களை நாமே*
*காயப்படுத்துவது தவறு*
*தோல்விகளில் இருந்து வெற்றி*
*பிறக்கும்*
*நம்பிக்கை வை! உன்*
*நாளைய விடியல்*
*வெற்றியின் உதயம்.*

சா.ஜிந்துஜா
கோண்டாவில்


## இளைஞர், யுவதிகளே!

*உங்களின் திறமைகளை வெளிக் கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.*

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**பெயர்** :-........................
**முகவரி** :- ..........................
..........................................
........................ ........................
திகதி கையொப்பம்

## சிந்திக்க.....



* நீதிபதிகளை விட காலம்தான் உண்மையை வெளிக்கொண்டு வருகின்றது.
* காலத்தின் கர்ப்பப்பையில் தான் எதிர்காலம் படுத்துக் கிடக்கின்றது.
* தன்னையே தேடும் முடிவில்லாத போக்கே வாழ்க்கை
* குற்றங்களிலெல்லாம் பெரிய குற்றம் அவைகளை உணராமல் இருப்பதுதான்.
* தாய் செய்யும் தியாகத்தை எந்தக் கைகளாலும் எழுத முடியாது.
* பிறகு என்பதும் பேசாமலிருப்பதும் இல்லை என்பதற்கு சமம்
* ஒரு துளி மையிலிருந்து பிறக்கும் கருத்துக்கள் பல்லாயிரம் பேரை சிந்திக்க வைக்கின்றது.
* விழித்துக் கொண்டிருக்கும் துன்பங்களுக்கு தூக்கம் தான் நல்ல சிகிச்சை.
* உள்ளத்தோடு போராடுவதே மிக உயர்ந்த போராட்டம்

க.லக்ஸ்சனா.
கெற்பேலி மத்தி,
மிருசுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருந்தாளர், உதவியாளர் தேவை

கோண்டாவில் பகுதியில் ஆரம்பிக்கப்படவிருக்கும் மருந்தகம் ஒன்றுக்கு மருந்தாளர் மற்றும் முன் அனுபவமுள்ள மருந்தக உதவியாளர்களும் உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.
தொடர்புகளுக்கு:- 0772897869

(சி/20304) (2-6-7)

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க அங்கத்தவரும், யாழ். பல்கலைக்கழக தாவரவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளருமாகிய கலாநிதி ப.செவ்வேள் அவர்களது தந்தையார்

**ஜெரிமையா பத்மநாதன்**

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

*யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.*

(20307) (15)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினரான தாவரவியல் திணைக்களத்தைச் சேர்ந்த கலாநிதி ப.செவ்வேள் அவர்களின் அன்புத் தந்தை

**ஜெ. பத்மநாதன்**

அவர்கள் 11.07.2012 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அமரர் பத்மநாதனின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்.

(சி/1441) (45.6.7)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை வள்ளிப்பிள்ளை



அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கல்கிசையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை வள்ளிப்பிள்ளை நேற்று (11.07.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ரட்ணசிங்கம், பத்மாவதி, தர்மபாலன், சற்குணவதி, மற்றும் சிவசுப்ரமணியம் (ஜெயச்சந்திரன்), கனகசிங்கம் (சுந்தரலிங்கம்), நித்தியானந்ததேவி, ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்றவர்களான மனோன்மணி, இராசேந்திரம், செல்வமலர், கந்தசாமி, பவளராணி, மற்றும் செல்லம்மா, மனோரஞ்சிதம் (ரஞ்சி), இராமச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு தகனக்கிரியைக்காக இன்று (12.07.2012) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கல்கிசை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யாழ்ப்பாணம் (சி/1448) (3.14) லட்சுமிகாந் (பேரன்).

### அருந்தவகுமாரன் கஜிந்தன்



யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகவும், இருபாலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அருந்தவகுமாரன் கஜிந்தன் நேற்று முன்தினம் (10.07.2012) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் அருந்தவகுமாரன்-வசந்தி தம்பதியரின் அன்பு மகனும், துஜிந்தன், கரன்ஷிகா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற குழந்தைவேலு மற்றும் கமலாம்பிகை காலஞ்சென்ற தங்கராசா மற்றும் யோகேஸ்வரி தம்பதியரின் அன்புப் பேரனும், சிவதர்சினியின் மைத்துனரும், ஹிருகேஷன், ரினுகேஷன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.07.2012) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் கோண்டாவில் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இருபாலை (20311) (3.14) தயாளன் (மாமா).

### நடராசா நல்லையா (சின்னக்குழந்தை)

மடம் வீதி,திருநெல்வேலியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா நல்லையா நேற்று (11.07.2012) புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா-அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகனும் உரும்பிராயை சேர்ந்த திரு.திருமதி தாமோதரம்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கமலாம்பிகையின் அன்புக்கணவரும் நகுலறாஜா (கனடா), கேதாரகௌரி (கனடா),காமினி (கௌசலி- பிரான்ஸ்) நந்தராசா ஆகியோரின் அன்புத்தந்தையும் சிந்துஜா (கனடா), ஸ்ரீதரன் (கனடா), மதிவதனன் (பிரான்ஸ்) அகியோரின் அன்பு மாமனும் றொபினா, நிருஷிகன், தீபிகா, சௌமியா, சாய்சந்தோஷ், பூமிகா, மதனிகா அகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற மகேந்திரராஜா மற்றும் கமலாம்பிகை, சிவகுருநாதன் (சின்னண்ணை), பூலோகநாதன் (நோர்வே), ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும் இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முந்திரிகைத் தோட்டம்,
கோப்பாய் வீதி,
உரும்பிராய் தெற்கு.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

(20313) (3.14)

## டெங்கு ஒழிப்புக் குழுவில் இராணுவமும்

கொழும்பு,ஜூலை12

தேசிய நுளம்பு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கு பற்றும் உத்தியோகத்தர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு விசேட பாதுகாப்பு செயற்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்று கூறினார்.

பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் இதன்படி ஆயுதமேந்திய பொலிஸ் அல்லது இராணுவ உத்தியோகத்தர் ஒருவரும் நுளம்பு ஒழிப்பு தொடர்பான களப்பணி மற்றும் சோதனைகளில் ஈடுபடும் குழுவில் இடம்பெறுவர் எனவும் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் கூறினார்.

இந்தத் திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து இராணுவ உத்தியோகத்தர்களும் இதில் பங்குபற்றுகின்ற போதிலும் அவர்கள் ஆயுதம் ஏந்தியிருக்கவில்லை. அண்மையில் பொதுச்சுகாதார உத்தியோகத்தர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவத்தை கருத்திற்கொள்கையில் ஆயுதமேந்திய பாதுகாப்பு உத்தியோகத்தரை இந்தக் குழுக்களில் இணைப்பது அவசியம் என தீர்மானித்துள்ளோம் என அவர் கூறினார். (16)


## டிப்பர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம்,ஜூலை12

டிப்பர், மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு முன்னால் இடம்பெற்றது. இதில் மட்டுவில் தெற்கைச்சேர்ந்த வல்லிபுரம் மகாலிங்கம் (வயது-66) என்பவரே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்கா யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (16-2)

## மரண அறிவித்தல்



### பொன்னையா சுதாகரன்

பலாலியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி பத்தமேனியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சுதாகரன் நேற்று (11.07.2012) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா-செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும் சுப்பிரமணியம் (கந்தசாமி)-லட்சுமி தம்பதியரின் மருமகனும் மனோகௌரியின் பாசமிகு கணவரும் டிலக்சன் (அச்சுவேலி மத்திய கல்லூரி), றஜீபன் (அச்சுவேலி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும் கருணாகரன், யோகேஸ்வரி, மனோகரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சசிகலா, சிங்கராசா, நற்குணநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2012) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் தீர்தாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ- கருணாகரன், பொ.மனோகரன்
0041414862008
குடும்பத்தினர்.

துரைஜயா வீதி,
பத்தமேனி,
அச்சுவேலி.

(சி/1454) (15)

## சேவை நலன் பாராட்டு



**உயர்திரு கு.சரவணபவானந்தன்**

எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய வேலணை கோட்டக் கல்விப்பணிப்பாளர் உயர்திரு கு.சரவணபவானந்தன் அவர்களது அயராத அளப்பரிய சேவை மகத்தானது. 37 வருட சேவையாற்றி 10.07.2012 இல் ஓய்வுபெற்ற இவர் ஒரு தனக்கென வாழாப் பிறர்குரியாளன். தம்முடைய நேரத்தைச் சேவைக்கே அர்ப்பணித்த இவர் மக்களின் தேவை அறிந்து சேவையாற்றிய ஒரு தன்னலங்கருதாத கர்மவீரர். இவர் இன்னும் நீண்ட நாள்கள் வாழ்ந்து மக்கள் சேவையே மகேசன் சேவை எனப் பணியாற்ற வேண்டுமென உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்க அவரது பணி! வாழ்க அவரது சேவை!

வாழ்த்துபவர்:- நியூ நதியா நகைமாடம்
73,103 கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
0212223621 / 0212228397

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்கையர்களுக்கோர் அரிய வாய்ப்பு

மங்கையர்களின் தேவை கருதி அழகுக்கலை பயிற்சி நெறி ஆரம்பமாகவுள்ளதை மிக மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். இந்தப் பயிற்சி நெறியை பயில விரும்புவோர் உங்கள் பதிவுகளை முன் கூட்டியே பதிவு செய்வோர்களுக்கு சலுகைகள் வழங்கப்படும். அத்துடன் வகுப்புகளை பூர்த்தி செய்பவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
**P.Seella**
**075 6032151, 077 5159291**

(18114) (45.6.7)

## முதலாம் ஆண்டு நினைவலை

தோற்றம் 26 ★ 10 ★ 1932



மறைவு 25 ★ 07 ★ 2011

### அமரர் சின்னையா பரமலிங்கம்

(இணுவில் தெற்கு, இணுவில்)
திதி: நவமி

கடும் துயர்கள் வந்த போதிலும்
கலங்காத மனம் கொண்டவரே
உங்கள் கனவுகள் நனவாகும்போது - நீங்கள்
எங்களுடன் இல்லையே அப்பா

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மகள், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

(சி/20302) (2-6-7)




உதயன்
விளம்பரத் தொடர்புக்கு
adyt@uthayan.com
0215671111

### கஜமுகன் டென்ரல் கிளினிக்
### M.M.V Rd, நெல்லியடி

Dr.A.செந்தில் குமரன்
எல்லா விதமான சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படுகின்றது. வேலைக்கு ஆள் தேவை. நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்.
(சி/1449) (3.14) நிர்வாகி

## விற்பனைக்கு

பிளஸ்சர் மோட்டார் சைக்கிள், சொனி ரீவி கலர் 21'', றேடியோ ரூஇன்.வன், DVD சொனி, பூபர் 1, வொக்ஸ் 2, லுமாலா சைக்கிள் (லேடிஸ்) விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0775439914 (20243) (2-6-7)

## தவறிவிட்டது

யாழ்ப்பாண கல்வி வலயத்தில் கடமையாற்றுகின்ற M.சகுந்தலாதேவியுடைய அலுவலக ஆவணங்கள் அடங்கிய பச்சைநிற பை (Bag) 11.07.2012 அன்று யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்து வவுனியாவுக்குச் செல்லும் தனியார் பஸ் நிலையத்துக்கு பச்சை நிற ஓட்டோவில் செல்லும்போது ஓட்டோவில் தவறிவிட்டது. மேற் குறித்த ஓட்டோ சாரதியை 0772247475 அல்லது 021 222 1649 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு ஆவணங்களைப் பெற உதவவும்.

(சி/20306) (2-6-7)

## வேலையாள்கள் தேவை

யாழ்.குடாநாட்டில் தெருக்களைப் புனரமைக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கும் கம்பனிக்கு பின்வருவோர் தேவைப்படுகின்றனர்.
1) பொறியியலாளர்கள் - 2 வருட அனுபவம் விரும்பத்தக்கது.
2) மேசன், தச்சுத்தொழிலாளர்கள்.
விண்ணப்பிக்கவும்
**V.V.Karunaratne& Company,**
**12 A' Temple Road Lane, Jaffna.**
**T.P. 0711712003, 0779344878**

(சி/20240) (2-6-7)

## கட்டார் வேலைவாய்ப்பு

கட்டார் நாட்டிலுள்ள மிகப் பிரபலமான நிறுவனத்துக்கு கீழ்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதியான வேலையாட்கள் தேவை.
தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் சுயவிபரக்கோவை, கடவுச்சீட்டு, புகைப்படங்கள் மற்றும் அனுபவச் சான்றிதழ்களுடன் காரியாலயத்திற்கு வருகைதருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

| தொழில் | எண்ணிக்கை | சம்பளம் (QR) |
|---|---|---|
| 01. ஹைவே ரோ இயந்திரவியல் வடிவமைப்பு பொறியியலாளர் | 05 | 5000 to 9000 (அடிப்படை) |
| 02. ஹைவே ரோ - இயந்திரவியல் மேற்பார்வையாளர் (வாகனம்) | 05 | 3000 to4500 (அடிப்படை) |
| 03. கியர் பொக்ஸ் திருத்துனர் (டீசல் அன் ஹைட்ரோலிக்) | 10 | 1400 (அடிப்படை)+ 200 (உணவு) |
| 04. ஹைட்ரோலிக் மெக்கானிக் | 15 | 1500 (அடிப்படை)+ 200 (உணவு) |
| 05. Auto A/c தொழில்நுட்ப பயிலுனர் | 10 | 1300 (அடிப்படை)+ 200 (உணவு) |
| 06. இன்டஸ்ரியல் A/c தொழில்நுட்ப பயிலுனர் | 05 | 1100 (அடிப்படை)+ 200 +(உணவு) |
| 07. இயந்திரம் பழுதுபார்க்கும் மெக்கானிக் (டீசல்) & ஹைட்ரோலிக் | 20 | 1400 (அடிப்படை)+ 200 (உணவு) 200 (Road risk)+oT |
| 08. டிங்கர் & பெயின்டர் வேலை | 10 | 1200 (அடிப்படை)+ 200 (உணவு)+ 200 (Road risk)+oT |
| 09. Auto எலெக்ரீசியன் | 10 | 1200 (அடிப்படை)+ 200 (உணவு)+ 200 Road risk)+oT |
| 10. டயர் பழுது பார்க்கும் தொழில்நுட்ப பயிலுனர் | 05 | 1000 (அடிப்படை)+ 200 (உணவு)+ 200 Road risk)+oT |

குறிப்பு: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணம்
QR 1 = SL: 35.00

காலமும் நிபந்தனைகளும்

| | | |
|---|---|---|
| ஒப்பந்த காலம் | : | 2 வருடங்கள் |
| தொழில் செய்யுமிடம் | : | கட்டார் |
| வேலை ஆய்வுக் காலம் | : | 6 மாதங்கள் (உத்தியோகத்தர்களுக்கு), 3 மாதங்கள் (தொழிலாளர்களுக்கு) |
| வேலை நேரம் | : | நாளொன்றிற்கு 8 மணித்தியாலங்கள் |
| தங்குமிடம் | : | கம்பனியால் வழங்கப்படும் |
| உணவுக்கானகொடுப்பனவு | : | சம்பளத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது |
| போக்குவரத்து | : | கம்பனியால் வழங்கப்படும் |
| வதிவிட விசா கட்டணம் | : | கம்பனியால் செலுத்தப்படும் |
| விமானச் சீட்டு Joining | : | கம்பனியால் வழங்கப்படும் |
| விமானச் சீட்டு Return | : | இரண்டு வருட ஒப்பந்தகாலம் முடிவில் கம்பனியால் வழங்கப்படும் |
| Over time கொடுப்பனவு | : | கட்டார் நாட்டு தொழில் சட்டத்திற்கு அமைவானது |
| ஏனைய வசதிகள் | : | கட்டார் நாட்டு தொழில் சட்டத்திற்கு அமைவானது |
| காப்புறுதி வசதி | : | கம்பனியால் வழங்கப்படும் |
| பதிவினை மேற்கொள்ள | : | பான் நேஷனல் ரிக்ரூட் மென்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் |

இல. 351/1, R.A.De.mel மாவத்தை, கொழும்பு- 03
அனுமதி இல. 1980 தொலைபேசி: 011 5300 100

(20303) 45.6.7)

# மரண அறிவித்தல்

## சங்கரப்பிள்ளை கனகசபை (சோட்டர்)

(இளைப்பாறிய இ.போ.ச நடத்துனர்)



சரசாலை தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கு, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை கனகசபை கடந்த (08.07.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-நாகமுத்து தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-செல்லம்மா தம்பதியரின் மருமகனும், புஸ்பலீலாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பசுபதி, திலகம்மா மற்றும் லட்சுமி ஆகியோரின் சகோதரனும் ஜெயா, விஜயா (ஜேர்மனி), தயாபரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற தயாசீலன் மற்றும் தயானந்தன் (நோர்வே), வசந்தி (ஆசிரியர் -யா/ மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்), ஜெயந்தி (லண்டன்), தயாகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சின்னத்தம்பி, பத்மநாதன் (ஜேர்மனி), சிவானந்தம் (ஆசிரியர்- யா/ மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம்), நந்தகுமார் (லண்டன்), நளினி (ஜேர்மனி), ஈசா (ஜேர்மனி), தீபா (நோர்வே), சயந்தா (கனடா) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற செல்வநாயகம் (தில்லைநாதன்) மற்றும் திரவியநாயகம் (கனடா), குணநாயகம் ஆகியோரின் மைத்துனரும், அகல்யா, சுரேகா, அரவிந், பவித்திரா, தேனுஷா, சானுஷா, அபிநயா, அமிர்ரா, அதீனா, தபிஷா, சங்க்வி அநோஜிகன், அபிஜன், நிவேதன், நிதுஜன், சுஜீபன், அனுஜன், லஸ்வின், அர்வின், அனுவின், ஆதேஸ், அக்ஷயன், கபினேஸ் ஆகியோரின் பேரனும், அஸ்வின், சச்சின் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.07.2012) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வேம்பிராய் இந்துமயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(20242) (45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெல்குற்றும் இயந்திரங்கள் கையளிப்பு

நெளுக்குளம், ஜூலை12

வவுனியா பழைய ஊர், சிப்பிக்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு நெல் குற்றும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இங்குள்ள மக்கள் இது வரை 10 மைல் தூரத்துக்கும் அப்பால் சென்றே நெல்லைக் குற்றி வந்தனர். இதனால் போக்குவரத்துச் சிரமங்களும் வீணான செலவுகளும் இவர்களுக்கு ஏற்பட்டன.

இதனைக் கருத்தில் கொண்டு இந்த நெல்குற்றும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றை வழங்கும் நிகழ்வில் வவுனியா மாவட்ட விவசாயப் பிரதிப் பணிப்பாளர் ஷகீலாபானு, அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர, அமைச்சர் றிசாத் பதியுதீன் உட்பட கிராம மக்கள் பலரும் கலந்து கொண்டனர். (க-402)

## கடும் வரட்சியால் நெடுங்கேணியில் விவசாயிகள் பாதிப்பு

நெடுங்கேணிப் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகள் கடும் வரட்சி காரணமாக பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இங்குள்ள விவசாயிகள் வழக்கமாக சிறுபோக நெற்செய்கை, மரக்கறிப் பயிர்ச் செய்கை ஆகியனவற்றில் ஈடுபடுவது வழமையாகும்.

ஆனால் இந்த ஆண்டு மழை பொய்த்ததால் இவர்கள் பயிர்ச் செய்கைகளைக் கைவிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இங்குள்ள குளங்கள், கிணறுகள் ஆகியவற்றில் நீர்மட்டம் குறைந்து காணப்படுகின்றது. இதனால் விவசாயத்துக்குத் தேவையான நீரை இவர்களால் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

இதனால் குளவிசுட்டான், மாறாயிலுப்பை, நெடுங்கேணி, சேனைப்பிலவு, ஒலுமடு, ஆனந்தர் புளியங்குளம், இரணைமடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் விவசாயத்தைக் கைவிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். (க-435)

### முழங்காவில் கமநலசேவை நிலையத்தைவிட்டு

# பொலிஸாரே வெளியேறுக

### போர்க்கொடி தூக்கும் விவசாயிகள்

அக்கராயன், ஜூலை 12

**முழங்காவில் கமநலசேவை நிலையத்தை ஆக்கிரமித்திருக்கும் பொலிஸார் அங்கிருந்து உடனடியாக வெளியேறி அந்தக் கட்டடத்தை மீளவும் விவசாய சேவைக்காக தர வேண்டும். பூநகரி ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயத்தை இராணுவத்தினர் கையளித்தது போன்று முழங்காவில் கமநல சேவை நிலையக் கட்டடத்தையும் பொலிஸார் கையளிக்க வேண்டும் என்று அந்தப் பிரதேச விவசாயிகள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.**

குறித்த பகுதியில் மீளக் குடியமர்வு இடம்பெற்று மூன்று ஆண்டுகள் கழிந்த நிலையிலும் முழங்காவில் கமநலசேவை நிலையக் கட்டடம் இன்னமும் பொலிஸாரின் பிடியிலேயே உள்ளது.

இவ்வாறு கமநலசேவை நிலையத்தை பொலிஸார் ஆக்கிரமித்து இருப்பதால் முழங்காவில் பகுதியில் விவசாய நடவடிக்கைகளை சரியான வகையில் செயற்படுத்த முடியாதுள்ளது. விவசாயிகளுக்கான உரம், விதைகள், விவசாய உபகரணங்கள் என்பவற்றை பெறமுடியாத சூழலும் இதனால் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் பூநகரிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலயம், முழங்காவில் கமநலசேவைக் கட்டடம் ஆகியவற்றிலிருந்து இராணுவத்தினரும், பொலிஸாரும் ஒருமாத காலத்தில் வெளியேறிவிடுவரெனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த உறுதிமொழிக்கு இணங்க கடந்த வாரம் இராணுவத்தினர் விக்னேஸ்வரா வித்தியாலயத்தைக் கையளித்துள்ளனர்.

ஆனால் பொலிஸார் முழங்காவில் கமநலசேவை நிலையக் கட்டடத்தை இன்னமும் கையளிக்காமல் தமது கட்டுப்பாட்டுக்குள்ளேயே வைத்துள்ளனர். எனவே பொலிஸார் அங்கிருந்து உடனடியாக வெளியேறி, குறித்த கட்டடத்தை விவசாயிகளின் பயன்பாட்டுக்கு ஒப்படைக்க வேண்டும் என அந்தப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விவசாயிகளின் கோரிக்கை குறித்து கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் மு.சந்திரகுமார் கருத்துத் தெரிவிக்கும்போது முழங்காவில் பொலிஸாருக்கு காணி ஒதுக்கப்பட்டுள்ளது. மிகவிரைவில் அவர்கள் கமநலசேவை நிலையக் கட்டடத்திலிருந்து வெளியேறி விடுவர் என்று கூறினார். (ங-க-18)

## நானாட்டான் ஆரோக்கிய மாதா திருநாள்



மன்னார், ஜூலை 12

மன்னார் நானாட்டான் புனித ஆரோக்கிய மாதா தேவாலயத்தின் வருடாந்தத் திருநாள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சிறப்பாக இடம்பெற்றது.

காலை 7.15 மணியளவில் நானாட்டான் பங்குத் தந்தை அருட்தந்தை அகஸ்ரின் புஸ்பராஜா தலைமையில் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருவிழா திருப்பலியைத் தொடர்ந்து அன்னையின் திருச்சொரூப பவனி இடம்பெற்றது. நானாட்டான் பாடசாலை வீதியூடாகக் குறித்த திருச்சொரூப பவனி இடம்பெற்று மீண்டும் ஆலயத்தை வந்தடைந்தது.

இந்தத் திருவிழா திருப்பலி, திருச்சொரூப பவனி என்பனவற்றில் நூற்றுக் கணக்கான மக்களும், பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டு அன்னையின் ஆசியைப் பெற்றனர். (க-12)

## தனியார் பஸ் நடத்துநரை தாக்கிய படைச் சிப்பாய்கள்

### முரசுமோட்டையில் நேற்றுச் சம்பவம்

கிளிநொச்சி, ஜூலை 12

கிளிநொச்சியில் தனியார் பஸ் நடத்துநர் ஒருவரை வீதி புனரமைப்பு பணியில் ஈடுபட்டிருந்த சிங்களப் பணியாளர்களும், படைச் சிப்பாய்களும் இரு வேறு இடங்களில் வைத்துக் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இதில் படுகாயமடைந்த பஸ் நடத்துநரான எஸ். மகேஷ் (வயது-37) என்பவர் நெடுங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2.40 மணியளவில் முரசுமோட்டையில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

நேற்றுப் பிற்பகல் கிளிநொச்சியிலிருந்து நெடுங்கேணி நோக்கிச் சென்றுகொண்டிருந்தது குறித்த தனியார் பஸ் பரந்தன் ஓராம் கட்டைப் பகுதியில் வீதி புனரமைப்புப் பணிகளுக்காக போடப்பட்டிருந்த வீதித் தடை ஒன்று போக்குவரத்துக்கு இடையூறாக இருந்தது. எனவே அதனை அகற்றிவிட்டு நடத்துநர் பஸ்ஸைத் தொடர்ந்து செலுத்த முற்பட்டுள்ளார்.

அந்தச் சமயம் அங்கு புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சிங்களப் பணியாளர்கள் நடத்துநரை சரமாரியாகத் தாக்கியுள்ளனர்.

உடனே அங்கு வந்த பொலிஸார் பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்து பஸ்ஸை சேவையில் ஈடுபட அனுமதித்துள்ளனர்.

எனினும் தொடர்ந்து பயணித்த பஸ் முரசுமோட்டைப் பகுதியை அடைந்த போது, அங்கிருந்த இராணுவத்தினர் குறித்த பஸ்ஸை வழிமறித்து நடத்துநரை இறங்குமாறு பணித்ததுடன் அவரை சரமாரியாகத் தாக்கியும் உள்ளனர். சிங்களப் பணியாளர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையிலேயே படைச்சிப்பாய்கள் இவ்வாறு தாக்கியதாகக் கூறப்படுகிறது.

இதில் படுகாயமடைந்த நடத்துநர் சம்பவம் குறித்து நெடுங்கேணி பொலிஸில் முறையிடச் சென்றவேளை கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறையிடுமாறு திருப்பி அனுப்பப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ங-16-435)

## கிராமியப் பண்பாடுகளில் எவரும் விடுபட முடியாது

### மக்கள் சந்திப்பில் கிராம அலுவலர்

அக்கராயன்,ஜூலை 12

கிராமத்துக்குரிய பண்பாடு, பழக்கவழக்கங்களிலிருந்து எவரும் விடுபட்டுச் செல்ல முடியாது என்று அம்பலப்பெருமாள்குளம் கிராம அலுவலர் ம.குலசிங்கம் தெரிவித்துள்ளார்.

அம்பலப்பெருமாள்குளம் கிராமத்தில் நடைபெற்ற மாதாந்த மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

கிராமங்களுக்கு எனத் தனித்துவமான சிறந்த பண்புகள், பழக்கவழக்கங்கள் உள்ளன. இவற்றை நாம் மீறி நடக்கக்கூடாது. நாம் எமது பண்புகள், பழக்க வழக்கங்களைத் தொடர்ந்து பேண வேண்டும்.

சமய நெறிமுறைகளை இளைய சமூகத்தினர் உரிய வகையில் பின்பற்ற வேண்டும். கிராமப் பெரியவர்கள் அவற்றைச் சிறார்களுக்குப் போதிக்க வேண்டும்- என்றார். (ங-க-18)

## மின்னலாக வந்து போகும் மின்சாரம்; மன்னாரில் அவதிக்குள் பாவனையாளர்

### பெறுமதியான மின் சாதனங்களுக்கும் பாதிப்பு

மன்னார், ஜூலை 12

மன்னாரில் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக திடீர் திடீரென மின்சாரம் தடைப்படுவதும், வருவதுமாக இருப்பதால் மின்பாவனையாளர்கள் சிரமங்களை எதிர்கொள்வதோடு அவர்களின் பெறுமதியான மின்சாதனப் பொருள்கள் பழுதடைந்து வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு தினமும் பல தடவைகள் மின்சாரம் சொல்லாமல் கொள்ளாமல் தடைப்படுகின்றது. திரும்பவும் திடீரென வருகின்றது. இதனால் மின் பாவனையாளர்களது கணினி, தொலைக்காட்சிப் பெட்டி, வானொலி உள்ளிட்ட பெறுமதி வாய்ந்த பல மின் சாதனப் பொருள்கள் பழுதடைந்துள்ளன.

குறித்த மின் தடங்கல் தற்போது இரவு பகல் பாராது தொடர்ந்தும் இடம்பெறுகின்றது. ஆனால் மின் பட்டியலோ மாதம் தவறாமல் பாவனையாளர்களைச் சென்றடைகின்றது.

தற்போது மாணவர்களுக்கு இரண்டாம் தவணைப் பரீட்சை ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்த மின் தடையால் இரவு நேரங்களில் மாணவர்கள் கற்றல் செயற்பாட்டில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மன்னார்- மதவாச்சி பிரதான வீதியில் உள்ள மின் கம்பங்களில் உப்புக்காற்று படிவதனாலேயே இவ்வாறு மின் தடை ஏற்படுவதாக மன்னார் மின்சாரசபை ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களை விட தற்போது மன்னார் மின்சார சபையின் செயற்பாடுகள் மந்த கதியிலேயே நடைபெறுவதாகவும், திருத்த வேலைகளை உடனுக்குடன்மேற்கொள்வதில்லை எனவும் மின் பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ங-க-12)

## அற்றுப்போகாத மரபு



வவுனியா பம்பைமடு நரசிங்க ஆலயத்தில் வருடாந்தப் பொ[illegible] பண்டங்கள் எடுத்து வரப்பட்ட போது... (ங-402)

## அரச அலுவலருக்கு தொழில்சார் பயிற்சிகள்

அரச ஊழியர்களுக்கு தொழில்சார் பயிற்சி வழங்குவதில் வவுனியா பிரதேச செயலக விதாதா வளநிலையம் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது.

அண்மையில் உணவுப் பொருள்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் அலங்காரப் பயிற்சி, கணினி மென்பொருள், வன்பொருள் பயிற்சி நெறி, மெழுகுதிரி தயாரிக்கும் பயிற்சி நெறிகள் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டன. உணவுப் பொருள்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் அலங்காரப் பயிற்சி முதற்கட்டமாக 12 பேருக்கு 12 நாள்கள் வழங்கப்பட்டன.

கிராம சேவகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் 25 பேருக்கு கணினி வன்பொருள், மென்பொருள் பயிற்சி நெறியும், பிரதேச செயலக ஊழியர்களுக்கு மெழுகுதிரி தயாரிக்கும் பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பயிற்சிகளுக்கும் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சு 25 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தத் தொகை போதுமானதாக இல்லையென வவுனியாப் பிரதேச செயலக விஞ்ஞான தொழில்நுட்ப அலுவலர் திருமதி கே.மாயக்கிருஷ்ணன் தெரிவித்துள்ளார். பயிற்சிகளுக்கான ஒதுக்கீட்டுத் தொகை அதிகரிக்கும் போது, மேலும் பல பயிற்சிகள் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்.பி.எல். கரப்பந்தாட்டப் போட்டிகள்

# ஜப்னா பிரண்ட்ஸ், ஜப்னா லயன்ஸ் 5 ஆம் நாள் ஆட்டத்தில் வென்றன

பண்டத்தரிப்பு, ஜூலை 12

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் ஏனைய விளையாட்டுக் கழகங்களுடன் இணைந்து ''உதய''னின் ஊடக அனுசரணையுடன் ஏற்பாடு செய்துள்ள எச்.பி.எல். கரப்பந்தாட்ட போட்டிகளின் 5 ஆவது நாள் ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றன.

**இலகுவான வெற்றி பெற்றது ஜப்னா பிரண்ட்ஸ்**

முதலாவது போட்டியில் ஜப்னா பிரண்ட்ஸ் அணியும், யுத் ஸ்ரார் அணியும் மோதிக் கொண்டன. இந்தப்போட்டி முழுவதும் ஜப்னா பிரண்ட்ஸ் அணியே ஆதிக்கம் செலுத்தியிருந்தது. போட்டியின் முதலாவது சுற்றை 25:19 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் ஜப்னா பிரண்ட்ஸ் அணி தனதாக்கியது. எனினும் 2 ஆவது சுற்றில் யுத் ஸ்ரார்ஸ் அணி ஓரளவுக்கு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தது. எனினும் இறுதி நேரத்தில் அடுத்தடுத்து புள்ளிகளைப்பெற்றஜப்னாபிரண்ட்ஸ் அணி 25:23 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் 2 ஆம் சுற்றையும் தனதாக்கியது.

தொடர்ந்து மூன்றாம் சுற்றிலும் ஜப்னா பிரண்ட்ஸ் அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்த இறுதிச் சுற்றும் 25:16 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் ஜப்னா பிரண்ட்ஸ் வசமானது. இதனடிப்படையில் மூன்று சுற்றுக்களையும் கைப்பற்றிய ஜப்னா பிரண்ட்ஸ் அணி போட்டியில் இலகுவான வெற்றியைப் பெற்றுக்கொண்டது.

**விறு விறுப்பான போட்டியில் ஜப்னா லயன்ஸ் வெற்றி**

இரண்டாவது போட்டியில் ஜப்னா லயன்ஸ் அணியும், சுப்பர் கிங்ஸ் அணியும் மோதிக்கொண்டன. இந்தப் போட்டியின் இறுதிவரை எந்த அணி வெற்றிபெறும் என கணிக்க முடியாதிருந்தது. போட்டியின் முதலாவது சுற்றை 25:19 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் ஜப்னா லயன்ஸ் கைப்பற்றிக்கொண்டது. எனினும் இரண்டாவது சுற்று 25:20 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் சுப்பர் கிங்ஸ் வசமானது. மூன்றாம் சுற்றில் இரு அணிகளுக்கும் வெற்றி பெறக்கூடிய வாய்ப்புக்கள் இருந்தன. எனினும் இறுதி நேரத்தில் சிறப்பாக விளையாடிய ஜப்னா பிரண்ட்ஸ் அணி 25:22 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் மூன்றாம் சுற்றைகைப்பற்றிக் கொண்டது.

ஆனால் 4ஆம் சுற்றில் சுப்பர் கிங்ஸ் அணியினர் ஆக்ரோஷ ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தனர். இதனால் 4ஆம் சுற்றில் 25:16 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் சுப்பர் கிங்ஸ் அணி அபார வெற்றியைப் பெற்றுக்கொண்டது. தீர்க்கமான 5 ஆவது சுற்றில் இரு அணிகளும் வெற்றிக்காகக் கடுமையாகப் போராடின. எந்த அணி வெற்றி பெறும் என்று இறுதி செக்கன் வரை எவராலும் ஊகிக்க முடியாதிருந்தது. எனினும் கடைசி நேரத்தில் இரு புள்ளிகளைத் தொடர்ச்சியாகப் பெற்றுக் கொண்ட ஜப்னா லயன்ஸ் அணியினர் 15:13 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் இறுதிச் சுற்றை வெற்றி கொண்டனர். எனவே இந்தப் போட்டியில் 3:2 சுற்றுக்கள் என்ற அடிப்படையில் ஜப்னா லயன்ஸ் அணி வெற்றியை சுவீகரித்துக் கொண்டது. (ங-130)

## 'எச்.பி.எல்' கரப்பந்தாட்டம்

**இன்று மோதும் அணிகள்**

- **ஜப்னா கிங்ஸ் எதிர் சுப்பர் கிங்ஸ்**
- **ஜப்னா லயன்ஸ் எதிர் யுத் ஸ்ரார்ஸ்**

# 'வளர்மதி' கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பம்

கைதடி, ஜூலை 12

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 63 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி வளர்மதி விளையாட்டுக்கழகம் தென்மராட்சிப் பிரதேசத்துக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையே 'செற் - அப்' முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்துகிறது.

இந்தச் சுற்றுப் போட்டி இன்று இரவு 7 மணிக்கு வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. மின்னொளியில் நடைபெறவுள்ள இந்தப் போட்டிகளில் ஆரம்ப ஆட்டங்களில் மோதும் அணிகள் வருமாறு -

* குமரநகர் வி.க. 'ஏ அணி' எதிர் கைதடி குமரன் வி.க. 'ஏ' அணி.
* மறவன்புலவு அம்பிகை வி.க. 'ஏ' அணி எதிர் கைதடி நவசக்தி வி.க. 'ஏ' அணி. (ங-288)

# மானிப்பாய் இந்து பணிந்தது விக்ரோறியாவிடம்



சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற 15 வயதுக்குட்பட்டோருக்கான சிநேகபூர்வ துடுப்பாட்டப் போட்டியில் விக்ரோறியாக் கல்லுரி 22 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற விக்ரோறியா அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 41 பந்துப் பரிமாற்றங்களில் 179 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தது. இதில் சி.றஜிதன் அபாரமாக ஆடி ஆட்டமிழக்காது 55 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் மானிப்பாய் இந்துவின் ம.தினேஸ்குமார் 43 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

**சுலபமான இலக்கை விரட்டத் தொடங்கிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி விக்ரோறியாவின் துல்லியமான பந்து வீச்சுக்கு முகங்கொடுக்க முடியாமல் தடுமாறியது.**

சுலபமான இலக்கை விரட்டத் தொடங்கிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி விக்ரோறியாவின் துல்லியமான பந்து வீச்சுக்கு முகங்கொடுக்க முடியாமல் தடுமாறியது. விக்ரோறியா அணியின் பிரசாத் மிகச் சிறப்பாகப் பந்து வீசி எதிரணி இலக்குகளை தகர்த்தெறிந்தார். இதனால் மானிப்பாய் இந்து அணி 36 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 157 ஓட்டங்ககளை மாத்திரமே பெற்றது. அந்த அணியைச் சேர்ந்த ச.சஜீத் ஆட்டமிழக்காது 31 ஓட்டங்களைப் பெற்றார். விக்ரோறியாக் கல்லூரி சார்பில் கு.பிரசாத் 34 ஓட்டங்களைக் கொடுத்து 6 இலக்குகளைக் கைப்பற்றினார். (ங-23)

# கூட்டுறவு தினப் போட்டிகளில் வெற்றியீட்டியோர் விவரம்



சைக்கிள் ஓட்டப்போட்டி ஆரம்பிக்கும்போது...



சைக்கிள் ஓட்டப் போட்டியில் வென்ற வீரர்களுடன் கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் கூட்டுறவாளர்கள்



சைக்கிள் ஓட்டப் போட்டியில் வென்ற வீராங்கனைகளுடன் கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் கூட்டுறவாளர்கள்

வலி.வடக்கு, ஜூலை 12

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையும் கூட்டுறவு அமைப்புகளும் இணைந்து நடத்திய 90 ஆவது கூட்டுறவு தினத்தையொட்டி நடத்திய விளையாட்டுப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக் கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:-

**100 மீற்றர் ஓட்டம் (அங்கத்தவர்)**

* து.மயூரன் , யோ.ஜெயகணேஷ்கா,அனுதீபன் (மூவரும் ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்)

**100 மீற்றர் ஓட்டம் (பணியாளர்)**

* ரி.கமலநாதன் (காரைநகர் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம்)
* சி.கிளின்ரன் (பண்டத்தரிப்பு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம்)
* எஸ்.ரகுவரன் (கோண்டாவில் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம்)

**100 மீற்றர் ஓட்டம் பெண் (அங்கத்தவர்)**

* எம்.சுபாஜினி (இணுவில் அபிராமி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்)
* தி.லக்சிகா (ஏழாலை ஸ்ரீ விநாயகர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்)
* சி.மகிழினி (பண்டத்தரிப்பு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம்)

**100 மீற்றர் ஓட்டம் - பெண் (பணியாளர்)**

* நா.கஜனி, மா.பிரியவேதினி, செ.துஷ்யந்தி (மூவரும் பண்டத்தரிப்பு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம்)

**சைக்கிளோட்டம் - ஆண் (அங்கத்தவர்)**

* த.தனிஷ், அ.சுலக்சன், தி.கமல்ராஜ் (மூவரும் பண்டத்தரிப்பு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம்.)

**சைக்கிள் ஓட்டம் (பணியாளர்)**

* தி.பற்பராசா (பண்டத்தரிப்பு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம்)
* நடராசா காந்தரூபன் (பண்டத்தரிப்பு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம்)

**சைக்கிள் ஓட்டம் - பெண் (அங்கத்தவர்)**

* இ.பருவநிலா (தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்)
* இ.தனுசா (பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டறவுச் சங்கம்)
* பு.மாலா (கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்)

**4x100 மீற்றர் அஞ்சல் ஓட்டம் ஆண்கள்**

* ஏழாலை ஸ்ரீ விநாயகர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்
* உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
* பண்டத்தரிப்பு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம்

**4x100 பெண்களுக்கான அஞ்சல் ஓட்டம்**

* இணுவில் அபிராமி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்
* பண்டத்தரிப்பு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம்.
* ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்

**4x200 மீற்றர் அஞ்சல் ஓட்டம் ஆண்**

* ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்.
* உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
* இணுவில் அபிராமி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்.


**4x200 மீற்றர் ஓட்டம்**

* இணுவில் அபிராமி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்.
* ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம்.
* பண்டத்தரிப்பு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம். (ங-11-17-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணைப் பதம் பார்த்தது 'பெய்ல்ஸ்' பறித்து சென்றது கிரிக்கெற் வாழ்வை

## கிரிக்கெட்டை சோகமாக்கிய பௌச்சரின் முடிவு



பயிற்சி ஆட்டத்தில் பறந்து வந்த 'பெய்ல்ஸ்' தென்னாபிரிக்க வீரர் மார்க் பௌச்சரின் இடது கண்ணில் பலமாக தாக்கியது. இரத்தம் கொட்டிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவருக்கு மூன்று மணி நேரம் அறுவைச் சிகிச்சை நடந்தது. பார்வைக்கு பிரச்சினை ஏற்படும் அபாயம் இருப்பதால், சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து மிகுந்த சோகத்துடன் ஓய்வு பெற்றார்.

இங்கிலாந்து சென்றுள்ள தென்னாபிரிக்க அணி மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்க உள்ளது. இதற்கு முன்னர், உள்ளூர் அணியான சொமர்செட் அணியுடன் இரண்டு நாள் பயிற்சி ஆட்டத்தில் பங்கேற்றது.

### துரத்திய துரதிர்ஷ்டம்

டான்டன் நகரில் நடந்த இந்த ஆட்டத்தின் முதல் நாள் ஆட்டத்தில், தென்னாபிரிக்க சுழற்பந்துவீச்சாளர் இம்ரான் தாஹிர் வீசிய பந்தில், சொமர்செட் அணியின் ஜிமால் ஹுசைன் 'கிளீன் போல்டானார்'. அப்போது பறந்து வந்த 'பெய்ல்ஸ்', துரதிர்ஷ்டவசமாக இலக்குக் காப்பாளராகச் செயற்பட்ட பௌச்சரின் இடது கண்ணின் வெள்ளைப் பகுதியில் பலமாக தாக்கியது. மைதானத்தில் சுருண்டு விழுந்த இவரது கண்ணில் இருந்து இரத்தம் கொட்டியது. பின்னர் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட இவருக்கு, மூன்று மணி நேரம் சத்திரசிகிச்சை நடந்தது. பார்வைக்கு பிரச்சினை ஏற்பட வாய்ப்பு இருப்பதாக தெரிகிறது. பௌச்சரின் வாழ்க்கையில் பணம், புகழ் என்று அனைத்தையும் கொடுத்தது கிரிக்கெட் தான். இன்றைக்கு அதே கிரிக்கெட் அனைத்தையும் கெடுக்க, நேற்றுமுன்தினம் பௌச்சர் திடீரென ஓய்வை அறிவித்தார். தென்னாபிரிக்க கிரிக்கெட் ரசிகர்களை மட்டுமல்ல உலகக் கிரிக்கெட் ரசிகர்கள் அனைவரையும் இந்த சோக நிகழ்வு பாதித்துள்ளது.

### சாதனை வீரர்

கடந்த 1997 இல் முதன் முதலில் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் காலடி பதித்த பௌச்சர் மிகச் சிறந்த இலக்குக் காப்பாளர் மற்றும் துடுப்பாட்ட வீரராக திகழ்ந்தார். இக்கட்டான நேரத்தில் அணியை பலமுறை கரை சேர்த்துள்ளார். 147 டெஸ்ட் (532 பிடியெடுப்புக்கள், 23 'ஸ்ரொம்பிங்'), 295 ஒரு நாள் (403 பிடியெடுப்புக்கள், 22 'ஸ்ரொம்பிங்') மற்றும் 25 சர்வதேச 'ரி-20' (18 பிடியெடுப்புக்கள், ஒரு 'ஸ்ரொம்பிங்') போட்டியில் விளையாடி உள்ளார். இவர், இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடர் மூலம், தனது 150 ஆவது டெஸ்டில் விளையாடும் கனவுடன் வந்தார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக வாய்ப்பை இழந்தார். இவர், சர்வதேச தொடரில் 999 இலக்குகள் வீழ்ச்சிக்கு காரணமாக விளங்கினார். இதில் டெஸ்டில் மட்டும் 555 இலக்குகள் வீழ்ச்சிக்கு வித்திட்டுள்ளார். இதன் மூலம் இவர், டெஸ்ட் அரங்கில் 500 இலக்குகள் வீழ்ச்சிக்கு காரணமாக விளங்கிய முதலாவது இலக்குக் காப்பாளர் என்ற சாதனை படைத்தார்.

### ஓய்வு குறித்து பௌச்சர் கூறியதாவது:

கண்ணில் ஏற்பட்டுள்ள காயம் முழுமையாக குணமடைய நீண்ட நாள்கள் தேவைப்படும். இதனால் சர்வதேச தொடரில் விளையாட முடியாத நிலை உருவாகி உள்ளதால், ஓய்வு முடிவை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இந்த அறிவிப்பை மிகுந்த வருத்தத்துடனும், மன வேதனையுடனும் வெளியிடுகிறேன்.

கடந்த 15 ஆண்டு கால கிரிக்கெட் வாழ்வில் எனது வளர்ச்சிக்கு உதவியவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கண்ணில் காயம் ஏற்பட்டவுடன், முகம் தெரியாத நிறைய நண்பர்கள் உதவி செய்ய முன்வந்து ஆறுதல் தந்தனர். அவர்களது ஆசிர்வாதம், விரைவில் குணமடைய உதவும் என்று நம்புகிறேன் - என்றார்.

### ஸ்மித் வருத்தம்

பௌச்சரின் ஓய்வு முடிவு குறித்து தென்னாபிரிக்க அணித்தலைவர் ஸ்மித் வருத்தத்துடன் கூறுகையில், பௌச்சருக்கு ஏற்பட்ட காயம், ஓய்வு முடிவு தென்னாபிரிக்க அணிக்கு துரதிர்ஷ்டவசமான ஒன்று. இவரது இடத்தை பூர்த்தி செய்வது கடினம். கடந்த 15 ஆண்டுகளாக தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு 100 சதவீத உழைப்பை அளித்துள்ளார். அணியின்



வெற்றிக்காக போராடும் குணமுடைய இவர், இளம் வீரர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக விளங்கினார். இவர், விரைவில் பூரண குணமடைய பிரார்த்திக்கிறோம். இவரது எதிர்கால வாழ்க்கை சிறந்து விளங்க வாழ்த்துகிறோம் - என்றார்.

### பதம் பார்த்த பந்து

கிரிக்கெட்டில் பந்து தாக்கியதில் சிலர் மரணமடைந்துள்ளனர். இதில் இந்தியாவைச் சேர்ந்த ராமன் லாம்பாவும் ஒருவர். பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் 1998 இல் நடந்த உள்ளூர் ஆட்டத்தில், லாம்பா 'போர்வோர்ட் ஷொர்ட் லெக்' திசையில் களத்தடுப்புச் செய்தார். அப்போது மெஹராப் ஹொசைன் அடித்த பந்து இவரது நெற்றியில் பலமாக தாக்கியது. சிகிச்சை பலனின்றி மரணம் அடைந்தார்.


★ கடந்த 2000 இல் நடந்த பங்களாதேஷுக்கு எதிரான ஆசியகிண்ண ஆட்டத்தின் போது அனில் கும்ளே வீசிய பந்து, இந்திய இலக்குக் காப்பாளர் சபா கரீமின் வலது கண்ணில் தாக்கியது. பார்வை இழப்பு காரணமாக கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார்.

★ கராச்சியில் 1959 இல் நடந்த உள்ளூர் ஆட்டத்தில், பாகிஸ்தானின் அப்துல் அஜிஸ், தில்த்வார் அவான் பந்தை எதிர்கொண்டார். பந்து மார்பு பகுதியில் தாக்கியதால், அஜிஸ் மரணமடைந்தார்.

★ கடந்த 1993 இல் உள்ளூர் ஆட்டத்தில் விளையாடிய இங்கிலாந்து வீரர் இயான் போலேவின் கண் பகுதிக்கு கீழே பந்து தாக்கியதால், சுருண்டு விழுந்தார். உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்ட இவருக்கு, மயக்கமருந்து கொடுக்கும் போது மாரடைப்பால் மரணமடைந்தார்.

### தலைக் கவசம் காரணமா ?

கிரிக்கெட் தொடரில் வீரர்கள் தலைக்கவசம் அணியாதது பெரும் விபத்துகளுக்கு காரணமாகிறது. கடந்த 1998 இல் நெற்றியில் பந்து தாக்கி மரணம் அடைந்த இந்திய வீரர் ராமன் லாம்பா தலைக்கவசம் அணியவில்லை. பௌச்சர் தலைக்கவசம் அணிந்திருந்தால் பிரச்சினையில் இருந்து தப்பியிருக்கலாம். இது குறித்து இந்திய அணியின் முன்னாள் இலக்குக் காப்பாளர் சபா கரீம் கூறுகையில், தற்போது கிரிக்கெட்டில் அனைவரும் தலைக் கவசம் அணிகின்றனர். இதனை பௌச்சர் அணியாதது ஆச்சரியம் அளிக்கிறது. இம்ரான் தாகிர் வீசும் பந்துகள் நன்கு 'பவுன்ஸ்' ஆகும். எனவே இலக்குக் காப்பாளர்கள் கவனமாக இருக்க வேண்டும். பயிற்சி ஆட்டம் என்று பௌச்சர் அலட்சியமாக இருந்திருக்கலாம். எனக்கு வலது கண்ணின் 'ரெட்டினா' பகுதியில் தாக்கியதால், இழந்த பார்வையை பெற முடியவில்லை. பௌச்சருக்கு கண்ணின் வெள்ளைப்பகுதி என்பதால், விரைவில் மீள்வார் - என்றார். (5)



பெய்ல்ஸ் பௌச்சரின் கண்ணை தாக்கிய போது...

## பிங்கி விடுதலை

பாலின சர்ச்சையில் சிக்கிய இந்திய தடகள வீராங்கனை பிங்கி பிரமானிக் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மேற்குவங்கத்தை சேர்ந்தவர் பிங்கி பிரமானி. ஆசிய விளையாட்டு உட்பட பல போட்டிகளில் தங்கம் வென்றுள்ளார். இவர் உண்மையில் ஒரு ஆண் என்றும், தன்னை பாலியல் பலாத்காரம் செய்ததாகவும் பெண் ஒருவர் முறைப்பாடு கொடுத்தார். இதன் அடிப்படையில் கடந்த ஜூன் 14 இல் பிங்கி கைது செய்யப்பட்டார்.

இவரை பொலிஸார் மோசமாக நடத்துவதாகவும், உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென மனித உரிமை அமைப்புகளை வலியுறுத்தின. இந்த நிலையில் நேற்று முன்தினம் பிங்கி பிணையில் விடுவிக்கப்பட்டார். இதனை சக வீராங்கனைகள் வரவேற்றுள்ளனர். (5)

## ரென்னிஸ் தரவரிசை' வெளியீடு

உலக ரென்னிஸ் வீரர்-வீராங்கனைகளின் தரவரிசைப் பட்டியலை சர்வதேச ரென்னிஸ் சங்கம் வெளியிட்டுள்ளது.

இதன்படி விம்பிள்டன் பட்டத்தை 7 ஆவது முறையாக வென்ற 30 வயதான ரோஜர் பெடரர் 3 ஆவது இடத்தில் இருந்து முதலிடத்துக்கு முன்னேறி உள்ளார். 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்கு பின்னர் தற்போது தான் பெடரர் முதலிடத்தை பிடித்து இருக்கிறார். இரண்டாவது இடத்தில் இருந்த ஸ்பெயின் வீரர் ரபேல் நடால் மூன்றாவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டுள்ளார்.

விம்பிள்டன் இறுதிப் போட்டியில் தோல்வியடைந்த இங்கிலாந்து வீரர் அன்டி முர்ரே 4 ஆவது இடத்தில் நீடிக்கிறார். ஸ்பெயின் வீரர் டேவிட் பெரர் 5 ஆவது இடத்திலும், பிரான்ஸ் வீரர் சோங்கா 6 ஆவது இடத்திலும், தாமஸ் பெட்ரிக் (செக் குடியரசு) 7 ஆவது இடத்திலும் தொடருகின்றனர்.

### பெண்கள் ஒற்றையர் தரவரிசை

பெண்கள் ஒற்றையர் தரவரிசையில் பெலாராஸ் வீராங்கனை விக்டோரியா அஸரென்கா இரண்டாவது இடத்தில் இருந்து முதலிடத்துக்கு முன்னேறி உள்ளார். விம்பிள்டன் இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்சிடம் தோல்வி கண்ட போலந்து வீராங்கனை அக்னீஸ்கா ராத்வன்ஸ்கா 3 ஆவது இடத்தில் இருந்து 2 ஆவது இடத்துக்கு முன்னேறி இருக்கிறார்.

காலிறுதிக்கு முந்தைய சுற்றில் தோல்வி கண்ட ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா முதலிடத்தில் இருந்து 3 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். விம்பிள்டன் பட்டம் வென்ற அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் 6 ஆவது இடத்தில் இருந்து 4 ஆவது இடத்துக்கு முன்னேறி உள்ளார். ஆஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசுர் 5 ஆவது இடத்தில் நீடிக்கிறார்.

செக் குடியரசு வீராங்கனை கிவிடோவா 4 ஆவது இடத்தில் இருந்து 6 ஆவது இடத்துக்கு சரிந்துள்ளார். ஜேர்மனியின் ஏஞ்சலிக் கெர்பர் 8 ஆவது இடத்தில் இருந்து 7 ஆவது இடத்துக்கு முன்னேறி உள்ளார். (5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி டெஸ்ட் போட்டியில் இலங்கை வெல்லுமா?

## முடிவு இன்று

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி பரபரப்பான கட்டத்தை எட்டியுள்ளது.

பல்லேகல மைதானத்தில் நடைபெற்று வரும் மூன்றாவது டெஸ்ட் போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. மூன்றாம் நாள் ஆட்டத்தின் போது 27 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கை இழந்திருந்த பாகிஸ்தான் அணி தொடர்ந்து துடுப்பெடுத்தாடியது. அந்த அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஹபீஸும், அசார் அலியும் சிறப்பாக துடுப்பெடுத்தாடி இலங்கை பந்து வீச்சாளர்களை பயம் கொள்ள வைத்தனர். எனினும் இந்த இணையை பெர்னாண்டோ முடிவுக்குக் கொண்டுவந்தார். 52 ஓட்டங்களுடன் ஹபீஸ் நடையைக் கட்டினார். பின்னர் வந்த யுனிஸ்கான் 19 ஓட்டங்களுடன் ஹேரத்திடம் வீழ்ந்தார். அணித் தலைவர் மிஸ்பா உல் - ஹக்கும் 5 ஓட்டங்களுடன் வெளியேறினார். பின்னர் அசார் அலியும் அசாட் சபீக்கும் இணைந்து ஓட்டங்களை குவிக்கத் தொடங்கினர். அசார் அலி சிறப்பாக ஆடி சதம் அடித்தார். எனினும் அவரும் பெர்னாண்டோவின் பந்துக்கு 136 ஓட்டங்களுடன் இரையானார். பின்னர் வந்த மொஹமட் சமி, உமர்குல், அஜ்மல் ஆகியோர் சொற்ப ஓட்டங்களுடன் 'எல்.பி.டபிள்யூ' முறையில் ஆட்டமிழந்தனர். மறுமுனையில் நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய சபீக் அரைச் சதம் அடித்தார்.



நேற்றைய ஆட்ட நிறைவில் பாகிஸ்தான் அணி 8 இலக்குகளை இழந்து 299 ஓட்டங்களை எடுத்திருந்தது. பாகிஸ்தான் அணி தற்போது இலங்கை அணியை விட 188 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது.

ஆட்டமிழக்காது களத்தில் இருக்கும் சபீக்கும், அட்னன் அக்மலும் சிறப்பாக துடுப்பெடுத்தாடி மிகப் பெரிய இலக்கை நிர்ணயித்தால் மாத்திரமே பாகிஸ்தான் இலங்கையை வீழ்த்த முடியும். எனினும் சொந்த மண்ணில் விளையாடும் இலங்கை நாளைய இறுதிநாள் ஆட்டத்தில் விரைவாக பாகிஸ்தானின் ஆட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்து வெற்றி இலக்கை எட்டும் என்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பு ஆகும்.

## 'ரி –20' உலகக் கிண்ணம் யதார்த்தமான எதிர்பார்ப்பு

இலங்கையில் செப்ரெம்பரில் இடம்பெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக 'ரி-20' தொடரில் பங்குபற்றுவதே தனது யதார்த்தமான எதிர்பார்ப்பாக அமையும் என்று இந்திய அணியின் சகலதுறை வீரர் யுவராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

புற்றுநோயிலிருந்து மீண்டுவரும் அவர் மீண்டும் பயிற்சிகளை ஆரம்பித்துள்ள நிலையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்த அவர், தான் மிகவும் சிறப்பாகக் குணமடைந்து வருவதாகவும், இலங்கையில் இடம்பெறவுள்ள உலக 'ரி-20' தொடர் யதார்த்தமான எதிர்பார்ப்பாகக் காணப்படுகின்றது எனத் தெரிவித்ததோடு, அதற்கு முன்னர் தொடரில் பங்குபற்றுவது முக்கியமானது எனத் தெரிவித்தார்.

எனவே உலக 'ரி-20' தொடருக்கு முன்னதாக இடம்பெறவுள்ள நியூசிலாந்து 'ரி-20' தொடரில் பங்குபற்ற எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார். நீண்டகால ஓய்விற்குப் பின்னதாக முதலாவதாக வலைப்பயிற்சிகளில் ஈடுபட்டது வித்தியாசமான உணர்வு எனத் தெரிவித்த அவர், தன்னால் மெதுவாகவே முழுமையான பயிற்சிகளில் ஈடுபட முடியும் என்பதை உணர்ந்திருந்ததாகவும் தெரிவித்தார்.

அன்னை புத்தகசாலையின் அனுசரனையுடன்

**தரம் - 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான "புகழின்" வழிகாட்டற் கருத்தரங்கு - 2012**

இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்
காலம் : 29/07/2012 (காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணி வரை)
ஆசிரியர் : திரு.லோ.விஜேந்திரன் (புகழ் வெளியீட்டு ஆசிரியர்)
திரு.இ.ரவீந்திரன் (வவுனியாவின் பிரபல ஆசிரியர்)
பரீட்சைக்கால உடல் உள ஆரோக்கியம் பேணல் தொடர்பான ஆலோசனைகள் : வைத்தியர் திரு. தனுராஜ் (BSMS)

**கருத்தரங்கு விபரம்**

1) 9.00-9.15 புலமைப்பரிசில் பரீட்சை, வெட்டுப் புள்ளி பற்றிய விளக்கம்
2) 9.15-9.45 இலகு கற்றலுக்கான வைத்திய ஆலோசனைகள்
3) 9.45-11.00 பகுதி I பரீட்சை நடத்தப்படும். (45 நிமிட வினாத்தாள்)
4) 11.00-11.30 இடைவேளை
5) 11.30 - 1.30 கருத்தரங்கு
6) 1.30 - 2.00 மதிய இடைவேளை
7) 2.00 - 4.00 கருத்தரங்கு தொடர்ச்சி

- கருத்தரங்கு முடிவில் திருத்திய பரீட்சை வினாத்தாள்கள் புள்ளிகளுடன் வழங்கப்படும்.
- பரீட்சையில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கல்.
- பெற்றோர், மாணவர்களுக்கான பரீட்சைக்கால ஆலோசனைகள் அடங்கிய அச்சுப்பிரதி ஒன்று வழங்கப்படும்.

**கருத்தரங்கில் அலசப்படும் விடயங்கள்**

1) வினாத்தாள்களின் அமைப்பு முறையும் விடையளிக்கும் நுட்பங்களும்.
2) இவ்வருடம் எதிர்பார்க்கப்படும் விடயங்களை மீட்டல்.
3) கட்டுரை எழுதுதல் தொடர்பான நுணுக்கங்கள், கணித நுட்பங்கள்
4) நேரப் பயன்பாடு தொடர்பான விடயங்கள்

- கருத்தரங்கில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் 50/- பெறுமதியான இலவச கையேடு, பரீட்சைக்கால ஆலோசனைகள் அடங்கிய அச்சுப்பிரதி வழங்கப்படும்.
- இடைவேளையில் அன்னை புத்தகசாலையினரால் இலவச குளிர்பானம் வழங்கப்படும்.

கருத்தரங்கு மண்டப நுழைவுக்கட்டணம் - 450/-

**நுழைவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளும் இடங்கள்**

1) அன்னை புத்தகசாலை - யாழ்நகர்
2) கணேசன் கொமினிக்கேசன்ஸ்- கொக்குவில் இந்துக்கல்லூரிக் கருகாமை
3) Global Multi Traders - யாழ் இந்துக்கல்லூரி முன்பாக
4) துர்க்கா புத்தகசாலை - சுன்னாகம்
5) மொடேன் ஸ்ரோர்ஸ் - நெல்லியடி
6) பாலவிநாயகர் புத்தகசாலை - கிளிநொச்சி

- கருத்தரங்கு நடைபெறும் தினத்தில் வீரசிங்கம் மண்டபத்தில் அன்னை புத்தகசாலையின் அனைத்து வகையான புத்தகங்களையும் அப்பியாசக்கொப்பிகளையும் விசேட விலைக்கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு :- 0774118950, 021 2213061, 021 222 9881

(சி/1419)

**மாபெரும் கருத்தரங்கு**

முற்றிலும் எதிர்பார்க்கப்பட்ட விடயங்கள்
சனி, ஞாயிறு,மு.ப 9.00-12.00
(14.07.2012-15.07.2012)

அரசியல்
T.தயாபரன்

C.A.C கந்தர்மடம் சந்தி
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(20310) (3.14)

**கார் விற்பனைக்கு**

NP KI இலக்கமுடைய Alto-Sportz model சில்வர் கலர் மாருதி கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு - 075 0425374
(20305) (6.3)

**அரசியல் விஞ்ஞானம் கருத்தரங்கு**

யாழ்.மண்ணில் முதன் முறையாக
இலங்கையின் முன்னணி ஆசிரியர்
பேராசிரியர் சி.அ.யோதிலிங்கம் & K.சுகாஷ்
இணைந்து வழங்கும்
பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

21,22,27 ஆம் திகதிகளில் 12 - 3 P.M

- எதிர்பார்க்கை வினாக்கள்
- விடை எழுதும் முறை
- குறுவினாக்கள்
- M.C.Q

வெளிமாணவர்களும் பங்கேற்கலாம்
பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்

DCM யாழ்.நகர்
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
(20244)

**Jaffna College Undergraduate Dept.**

464, Hospital Road, Jaffna.
புதிய பிரிவுகள் ஆரம்பம் - 21.07.2012
AAT (SriLanka)
Foundation, intermediate & Final
Medium - English & தமிழ்
★ க.பொ.த (சா.த) பரீட்சையில் 6 சித்திகளுடன் உங்கள் பதிவினை மேற்கொள்ளலாம். (c/1442) (6.3)

**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் நல்லூர் வைமன் வீதி, அரசடி வீதி, பருத்தித்துறை வீதியை இணைக்கும் சந்திக்கு அருகில் 3 மாடி தொடர் கட்டடம் அனைத்து வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் வாடகைக்கு விடப்படும்.
தொடர்புக்கு -
021 222 2084
021 567 9011
(சி/1434) (6.3)

**சத்யசாயி நிறுவனங்களின் தலைவரின் ஆன்மிக உரை**

சர்வதேச ஸ்ரீ சத்யசாயி நிறுவனங்களின் தலைவரும், பிரசாந்தி சபையின் தலைவருமான டாக்டர் நரேந்திரநாத் ரெட்டி அவர்கள் இன்று (12.07.2012) வியாழக்கிழமை பி.ப 4.00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் 'தெய்வீகத்தின் உருவ-அருவ நிலைகள்' என்னும் தலைப்பில் ஆன்மிக உரை நிகழ்த்தவுள்ளார். யாழ். சத்ய சேவா நிலையம் இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது.
(20237) (6.3)

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில்
Master of Science பட்டம் பெறும்
எமது புதல்வனை

**பாராட்டி வாழ்த்துகின்றோம்..**



பேராதனை பல்கலைக்கழகத்தில்
B.Sc. (Civl Engineering)
1st Class (Honest) ல் சித்தியடைந்து
பல்கலைக்கழகத்தில்
இரண்டு வருடம் விரிவுரையாளராக
கடமையாற்றி மேற்படிப்பை
சிங்கப்பூர்
தேசிய பல்கலைக்கழகத்தில்
M.Sc. (Civl Engineering)
பட்டப்படிப்பை முடித்து
இன்று பட்டம் பெறும்
எமது புதல்வன்
தியோனிஸ் வின்சன் கிளேரோ
M. Sc. [Civil Engineering]
அவர்களை
மனமார வாழ்த்துகின்றோம்.

பெற்றோர்
(சி/1415)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpuliiyamkulam,
Vavuniya. Tel: 024 324 5287

Batch - 1: 14.07.2012 9.00 - 12.00
Batch - 2: 15.07.2012 3.00 - 5.00
Batch - 3: 14.07.2012 9.00 - 12.00

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்
(சி/1268)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.